MR. SPEAKER :—" Why did not the hon. Member stand up and say so when I called out that question? Hereafter, when I call the name of the Member in whose name the question stands some other Member, if he wishes to put that question, should immediately stand up and say that he is putting the question. Mr. Govindaswami Naidu will now put the question No. 1425."

Appointment of Block Development Officers

* 1425 *Q.*—SRI V. GOVINDASWAMI NAIDU (on behalf of Sri M. Dharmalingam): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Block Development Officers appointed in the year 1953, are gazetted officers while other Block Development Officers appointed in the year 1954 are non-Gazetted Officers;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) how many officers are appointed as non-gazetted officers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) Yes.

" (*b*) When the National Extension Service Scheme was launched first in 28 Blocks in October 1953, the Government considered that the Block Development Officers should be Gazetted Officers in the scale of Rs. 230—20/2—310—30/2—400 in the initial period when the National Extension

17th March 1955]

Service scheme was introduced to enable the scheme being put on a sound footing. With the experience gained, it was found that the Blocks could be manned by non-gazetted officers of the rank of Tahsildars and Deputy Tahsildars. When therefore the scheme was extended to ten more blocks in the State (besides the ten in Tanjore district) in October 1954, the Government decided to appoint non-gazetted Block Development Officers of the grade of Tahsildars (Rs. 200—10—300) in these additional blocks. Under the National Extension Service Scheme prepared specially for Tanjore district, the blocks have been placed in charge of Deputy Tahsildars in the scale of Rs. 150—5—200 called Taluk Development Officers working under Tahsildars.

"(c) Seventeen."

SRI D. KRISHNAMURTHI GOUNDER :—" எல்லோரையும் ஒரே நிலைமையில் வைக்க சர்க்கார் முயற்சி செய்வார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" எல்லோரையும் ஒரே நிலைமையில் வைக்கவேண்டும் என்ற பிரச்னை அல்ல. வேலைக்குத் தகுந்தபடியும் யோக்யதைக்குத் தகுந்தபடியும் எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இனிஷியேடிவ்க்குத் தகுந்தபடி ஸ்டேடஸ் கொடுக்கப்படுகிறது."

Water-supply works in South Arcot.

* 1426 Q.—SRI A. GOVINDASWAMI NAYAGAR (on behalf of Sri A. Ratnam): Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) the amount of grant for 1953–54 given to the South Arcot district that has been spent so far and the number of works including the constructions of works for protected water-supply in the district;

(b) how many works are under execution; and

(c) the amount so far spent for rural water-supply?

THE HON. SRI A. B. SHETTY :—" (a) The amount spent by the Government on well works in South Arcot district during 1953–54 was Rs. 1,68,944.

The number of works taken up for execution during that year was 161 and the number of works completed 49.

" (b) 112.

" (c) Rs. 14,17,022 (from) 1939–40 to 1954–54."

SRI A. GOVINDASWAMI NAYAGAR :—" May I know, Sir, whether the Government have any proposal to supply protected drinking water to Kadambadur firka out of this amount? "

THE HON. SRI A. B. SHETTY :—" A separate question may be put, Sir."

[17th March 1955

National Extension Service Scheme in Tiruvallur taluk.

* 1427 *Q.*—SRI V. GOVINDASWAMI NAIDU (on behalf of Sri M. Dharmalingam): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of works taken up for execution under National Extension Schemes in Tiruvallur taluk during the year 1953–54; and

(*b*) the number of works left over for want of contribution?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) Fifty.

" (*b*) Two."

SRI V. R. NAGARAJAN :—" Have the Government any proposals for implementing protected water-supply . . . ?"

MR. SPEAKER :—" We are in question No. 1427."

SRI K. VINAYAKAM :—" For the fifty works that have been taken up under the National Extension Service, did the villagers contribute the 50 per cent that was prescribed by the Government?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" The villagers did contribute, but the 50 per cent is not invariably insisted upon."

Public holiday on the birth-day of Sri Narayana Guru Dev.

* 1428 *Q.*—SRI P. K. GOPALAKRISHNAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have any proposal to declare the birth-day of Sri Narayana Guru Dev as a public holiday throughout the State?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" No, Sir."

(The hon. Member Sri Gopalakrishnan stood up in his seat to put a supplementary question.)

MR. SPEAKER :—" There is one non-official Resolution before the House and I have given enough time for it. I do not think there is necessity for putting supplementaries on this question now. I think the matter will be taken up at the next non-official day."

Labour dispute in Mettur Industries.

* 1429 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received the report of the Conciliation Officer regarding the dispute over the bonus for the year 1953–54 between the Mettur Industries and their workers;

(*b*) the further steps taken by the Government to settle the dispute; and

(*c*) whether the Government consulted the Union of workers regarding the settlement of the dispute?

17th March 1955]

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (a) Yes, Sir.

" (b) The Minister held joint discussion with the representatives of the management and the workers. And finally the Government have referred the dispute for adjudication.

" (c) Yes, Sir."

SRI M. KALYANASUNDRAM :—" முடிவாக அதில் நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். முதலில் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளைக் கூப்பிட்டுப் பேசக் கூடிய சமயத்தில் மந்திரி அவர்கள் தொழிலாளர்களுடைய சங்கத்தைக் கூப்பிடுவதற்கு பதிலாக 20, 30 கிளார்க்குகள் இருக்கும் சங்கத்தை மட்டும் கூப்பிட்டு பேசினார். 2,000 தொழிலாளர்கள் அங்கத்தினராகவுள்ள சங்கத்தைக் கூப்பிட்டு பேச்சு வார்த்தை நடத்த முயற்சிக்கவில்லை. தற்செயலாய் நான் அங்கு இருந்ததால் இதை அறிந்து உடனே மந்திரிக்கு தெரியப்படுத்தி மற்ற சங்கங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து சமரசம் செய்யவேண்டும் என்று சொன்னேன். அதன் மேல் மற்றவர்களையும் அழைத்து வந்து பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அதற்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலும் அத்தொழில் சங்கங்கள் ஐந்து மாத போனஸ் வேண்டுமென்று கேட்டபோது முதலாளிகள் $4\frac{3}{4}$ மாத போனஸ்தான் கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்படியிருந்தாலும் அதற்கு சம்மதிக்கலாம் என்று தொழிற் சங்கம் அபிப்பிராயம் தெரிவித்தும்கூட குமாஸ்தாக்கள் சங்கப் பிரதிநிதிகள் பேச்சைக்கேட்டுக்கொண்டு சர்க்கார் அவ்விஷயத்தை அட்ஜுடிகேஷனுக்கு விட்டிருப்பதன் நோக்கம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இதற்கு முன்பே கனம் அங்கத்தினர் இதே மாதிரி கேட்டார். அதற்கு ஏற்கெனவே நான் பதில் சொல்லியிருக்கிறேன். தொழில் சங்கங்களில் நான் நடந்து கொள்ளும் முறை பாரபட்சமாக இருக்கின்றன என்று சொல்லுவது முற்றிலும் தவறு. ஒரு சங்கத்தைமட்டும் தான் கூப்பிட்டு பேசினேன், மற்ற சங்கங்களை கூப்பிடவில்லை என்று சொல்லுவது தவறு. நான் அம்மாதிரி பாரபட்சம் காட்டுவது இல்லை. இந்த குறிப்பிட்ட விஷயத்தில் நான் எல்லாதொழிற்சங்க பிரதிநிதிகளையும் அழைத்தேன். அந்த வெள்ளைக்கார கம்பெனியின் பிரதிநிதிகளும் வந்தார்கள். அவர்களிடையே சமரசம் செய்து வைக்க நான் முயன்றேன். தொழிற் சங்கங்கள் ஐந்து மாத போனஸ் கொடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஆனால் வெள்ளைக்கார முதலாளிகள் $4\frac{3}{4}$ மாத போனஸ்தான் கொடுப்போம் என்று சொன்னார்கள். கால்மாத போனஸ்தானே அதிகமாக கேட்கிறார்கள் இதில் தகராறு வேண்டாம், கொடுத்து விடுங்கள் என்று வெள்ளைக்கார முதலாளிகளுக்கு நான் ஆலோசனை கூறினேன். அதற்கு அவர்கள் சம்மதிக்காமல் பிடிவாதமாக இருந்தார்கள். பிறகு நான் ஒரு மாத அட்வான்ஸ் ஆவது கொடுங்கள், பண்டிகை வருகிறது. என்று சொன்னேன். அதற்கும் அவர்கள் யோசித்துச் சொல்லுகிறோம் என்று போய் விட்டார்கள். நான் சொல்லிய இரண்டு யோசனைகளையுமே ஒப்புக்கொள்ள முடியாதென அவர்களிடமிருந்து சர்க்காருக்கு கடிதம் வந்துவிட்டது. இரு சாராரும் பிடிவாதமாக இருந்த காரணத்தினால் தான் சர்க்கார் இவ்விஷயத்தை அட்ஜுடிகேஷனுக்கு விடுவது நல்லது என்று முடிவு செய்தார்கள். ஆகவே நான் யாருடைய பேச்சையும் கேட்டுக்கொண்டு இவ்விஷயத்தை அட்ஜுடிகேஷனுக்கு விட்டுவிட்டதாகவும் தொழிற்சங்கங்களுக்கிடையே பாரபட்சம் காட்டுவதாகவும் எதிர் கட்சி உப தலைவர் சொல்வது சரியல்ல. அது தவறான கருத்து என்றும் சொல்ல விரும்புகிறேன்."

SRI M. KALYANASUNDRAM :—" கனம் மந்திரி அவர்கள் கூறிய வற்றிலுள்ள பல விஷயங்களை நான் மறுக்க வேண்டியிருக்கிறது. கனம் மந்திரி அவர்களே, அந்த முதலாளிகள் ஐந்து மாதப் போனஸ்

[17th March 1955

கொடுக்கலாமென்று சொன்னார்கள். அதோடு தொழிற் சங்கங்கள் கேட்பது போல அவர்கள் ஐந்து மாதப் போனஸ் கொடுக்கலாம், இருந்தாலும் நாலேமுக்கால் மாதங்களுக்குத்தான் போனஸ் கொடுப்போம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள், என்ன செய்யலாம், என்று அனுதாபத்தோடு கேட்டார்கள். அதற்கு நான் 'நாலேமுக்கால் மாதங்களுக்குக் கொடுத்தாலும் பரவாயில்லை, நாம் அவர்களோடு சமரசமாகப் போய்விடலாம், இதை அட்ஜுடிகேஷனுக்கு விடுவதாக இருந்தால் நிச்சயமாக காலதாமதம் ஆகும், ஒரு வருஷம், இரண்டு வருஷங்கள் ஆனாலும் ஆகும், தொழிலாளர்களுடைய நலனை உத்தேசித்து இதை அவர்கள் உடனடியாகக் கொடுக்கத் தயாராக இருந்தால் நாம் ஒப்புக்கொண்டு விடலாம்,' என்று சொல்லியிருக்கிறேன். அதோடு அங்கு இருக்கக் கூடிய தொழிற்சங்கம் கம்யூனிஸ்டுகளுடைய தொழிற்சங்கம் அல்ல. அந்தத் தொழிற்சங்கத்தில், காங்கிரஸ் கட்சிக்காரர்கள், பிரஜா சோஷலிஸ்டுக் காரர்கள், கம்யூனிஸ்டுக்காரர்கள் ஆகிய எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் சுமார் 1,800 பேருக்கு மேல் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். ஆகவே அந்தத் தொழிற்சங்கத்தை கம்யூனிஸ்ட் கட்சியினருடைய சங்கம் என்று சொல்வது ரொம்பவும் தப்பாகும்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"நான் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளையும், மானேஜ்மெண்டாரையும் கூப்பிட்டுவைத்துக் கொண்டு பேசியபோது கனம் எதிர்க்கட்சி உபதலைவர் இல்லையென்று நினைக்கிறேன். தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஐந்து மாதம் போனஸ் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். ஆனால் அந்த வெள்ளைக்கார முதலாளிகள் நாலேமுக்கால் மாதத்திற்கு மேல் போனஸ் கொடுக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்."

SRI K. VINAYAKAM :—"Sir, I rise to a point of order. This is the time allotted for answering of questions. May I know what has been going on in the House?"

MR. SPEAKER :—"The hon. Member has been listening to what is going on in the House."

SRI K. VINAYAKAM :—"Sir, I want a ruling from you on this matter, Sir."

MR. SPEAKER :—"The only thing is the answer is lengthy. Hereafter, if the answers are lengthy, let the fact be communicated to me. I shall mark such questions as unstarred ones. That will be the best thing to do."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—"Sir, this answer is not at all lengthy. All these supplementary questions arise out of the main question. I submit I may have to reply to the points raised by the hon. Member which are very pertient to the question put.

நான் இருசாரரையும் அழைத்துப் பேசியபோது தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நாலேமுக்கால் மாத போனஸ் கொடுப்பதை ஒப்புக் கொள்வதாக என்னிடம் சொல்லவேயில்லை. நான் முதலாளிகளிடம் கால் மாதத்திற்காகத் தகராறு வேண்டாம் என்றும் சொன்னேன். யோசித்துச் சொல்லுகிறோம் என்று என்னிடம் சொல்லிவிட்டுப் போனவர்கள் நிர்தாட்சண்யமாக அதை ஒப்புக் கொள்ளமுடியாது என்று கடிதம் எழுதிவிட்டார்கள். ஆகவேதான் நான் அட்ஜுடிகேஷனுக்கு அவ்விஷயத்தை refer பண்ணினேன். ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்கள் இந்தச் சபையின் எதிர்க்கட்சி உப தலைவராக இருக்கலாம். ஆனால் அவர் என்னிடம் தனியாகச் சொன்ன விஷயத்தை, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அதைப்பற்றிச் சொல்லாத போது நான் செய்வது என்பது முடியாத காரியம்."

17th March 1955]

SRI M. KALYANASUNDARAM :—" அந்தத் தொழிற்சங்கம் முதலாளிகள் சொல்கிறபடி நாலேமுக்கால் மாத போனஸுக்கு ஒப்புக் கொள்ளுகிறோம் என்று லேபர் கமிஷனருக்குக் கடிதம் எழுதியிருப்பது உண்மையா இல்லையா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அட்ஜுடிகேஷனுக்கு இந்த விஷயம் ரெபர் பண்ணப்பட்ட பிறகுதான் அந்தக் கடிதம் லேபர் கமிஷனருக்கு வந்தது."

Tirumalai-Tirupathi Devasthanam Estate at Tiruvallur.

* 1430 *Q.*—SRI M. DHARMALINGAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount allotted for improving the irrigation sources in Tirumalai-Tirupathi Devasthanam Estate at Tiruvallur now taken over by the Government for the year 1953–54;

(*b*) whether any amount was surrendered unspent; and

(*c*) if so, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU :—" (*a*) The allotment sanctioned for 1953–54 was Rs. 1,01,073.

" (*b*) A sum of Rs. 1,401 was surrendered as being unspent.

" (*c*) After the Andhra became a separate State, the estate was taken over by the Collector of Chingleput on 1st October 1953 and then the rainy season had commenced. So, this small amount was left unspent."

SRI S. RAMALINGAM :—" திருவள்ளூரில் இருக்கக்கூடிய திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்கள் எஸ்டேட் அபாலிஷன் சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறதா ? உட்படுத்தப்படாதிருந்தால் அதை அந்தச் சட்டத்திற்குட்படுத்த தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுப்பார்களா ? "

THE HON. SRI M. A. MANICKAVELU :—" This is an estate that has been taken over by the Government."

MR. SPEAKER :—" We shall now take up question No. 1420. The answer is now ready."

Working of the Prohibition Act.

* 1420 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state with reference to question No. 104 answered on 7th December 1954, the contents of the report submitted to the Planning Commission with regard to the working of the Prohibition Act in this State?

THE HON. SRI B. PARAMESWARAN :—" A copy [a] of the report is placed on the table of the House."

SRI N. K. PALANISAMY :—" ஆந்திராவில் ராமமூர்த்தி கமிட்டியை ஏற்படுத்தி மதுவிலக்கு சட்டம் சம்பந்தமாகப் பரிசீலனை செய்து, பின்னர் அக்கமிட்டியின் ரிப்போர்ட்டு பேரில் மதுவிலக்குச் சட்டத்தை தளர்த்திருப்பது

[a] Printed as Appendix III on page 986 infra.

நம் எல்லோருக்கும் தெரியும். சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய புள்ளி விவரங்களில் மதுவிலக்குக் குற்றம் செய்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதால் மதுவிலக்குச் சட்டம் நம் ராஜ்யத்தில் வெற்றிகரமாக அமுல் நடத்தபடவில்லையென்பது தெரிகிறது. ஆகவே இந்த ராஜ்யத்திலும் ராமமூர்த்தி கமிட்டியைப்போல ஒரு கமிட்டியைப் போட்டு அந்தச் சட்டத்தைத் தளர்த்த முயலுவார்களா ? அல்லது அந்தச் சட்டத்தையே அபாலிஷ் பண்ணுவதற்கு சர்க்கார் முன் வ்ருவார்களா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" ஆந்திராவில் நியமிக்கப்பட்ட ராமமூர்த்தி கமிட்டியைப்போல இங்கும் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி இதனைப் பரிசீலிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இல்லை. சர்க்கார் அகர்வாலா கமிட்டியின் ரிப்போட்டைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்."

MR. SPEAKER :—" Questions are over. On the point raised by the hon. the Deputy Leader of the Opposition, Sri Kalyanasundaram, ruling will be given to-morrow."

SRI S. PANCHAKSHARAM :—" Before that, some of us also want to express our views so that there need not be any necessity for arriving at a final decision."

MR. SPEAKER :—" No discussion on that point is necessary now.

" The hon. Member Sri Gopalan has given notice of a motion under rule 40 of the Assembly Rules. He will now explain the point involved in the motion."

SRI P. G. KARUTHIRUMAN :—" நான் rule 40-ன் கீழ் ஒரு பிரேரணையை நோட்டீஸ் கொடுத்திருந்தேன். அதற்கு கனம் மந்திரி அவர்களும் பதிலுடன் தயாராயிருக்கிறார்கள் என்றும் சொன்னேன். அதை இன்றைக்கு எடுத்துக்கொள்வதாகத் தாங்களும் சொன்னீர்கள். அது என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்."

MR. SPEAKER :—" The hon. Member represented to me that the Hon. Minister was ready with information in regard to the point he proposed to raise. But the Hon. Sri Bhaktavatsalam will not be here to-morrow. So, he wanted the motion of the hon. Member Sri K. P. Gopalan to be taken up to-day."

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—MOTION UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* ATTACK ON PROCESSION OF HOTEL WORKERS IN THE CITY OF MADRAS.

* SRI K. P. GOPALAN :—" Sir, the motion I have given notice of is to call the attention of the Minister for Labour to a matter of urgent public importance, viz., the failure of the police to give protection to the peaceful procession of hotel workers in the City of Madras from the attack of goondas organized and led by the proprietor of Murali Cafe, Triplicane, Madras, on 24th February 1955.

" The main issue involved in this case is this. The workers have got a right to take out peaceful processions. It is the duty of the police to protect the workers while they take such peaceful

17th March 1955] [Sri K. P. Gopalan]

processions. Especially in Madras City whenever the hotel workers raise their demands, the police people unnecessarily interfere and there are so many cases of arrests.''

* THE HON. SRI C. SUBRAMANIAM :—'' Sir, the hon. Member should refer only to the particular incident. He should not generalise cases and then raise a general debate on the conduct of the police. After all, the Police Demand is coming up for discussion to-day. Therefore, the hon. Member should refer now only to the particular incident he has mentioned in the motion.''

SRI K. P. GOPALAN :—'' I am referring to the policy which has led to the police not giving protection . . .''

THE HON. SRI C. SUBRAMANIAM :—'' There is no question of policy involved in this case.''

* SRI K. P. GOPALAN :—'' It is the duty of the police to see that peaceful processions are allowed. If in Madras City peaceful processions are not allowed, it infringes upon the rights of workers to organize processions and it is also detrimental to the normal trade union activities of the workers. As far as this particular incident is concerned, the workers received injuries and they were treated in the Government General Hospital. In order to avert such incidents in future and also to bring this to the notice of the Hon. Minister concerned and the Government, I call the attention of the Hon. Minister and request him to make a statement on the incident.''

* THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' Mr. Speaker, Sir, I suppose that there is no motion moved.'' 9-30 a.m.

MR. SPEAKER :—'' It is a slip of the tongue.''

* THE HON. SRI M. BHAKTAVATSALAM :—'' But the hon. Member has repeated it twice.

'' I would like to make the following statement with reference to the incident referred to by the hon. Member.

'' The proprietor of Triplicane Cafe situated in Pycrofts Road, Triplicane, Madras, dismissed one of the workers on the 26th January last and two others on the 21st of February last. The proprietor of Murali Cafe, situated in the same road, dismissed one of his workers named Ramakrishnan on the 24th of February.

'' All the four dismissed workers are members of the Madras Hotel Workers' Association. This Association took up the cause of the dismissed workers. At about 9-15 p.m. on 24th February 1955, a procession of about 100 hotel workers started from Star Talkies and went to Pycrofts Road. The processionists stopped

in front of the Triplicane Cafe and shouted criticising the action of the proprietor of that cafe in having dismissed some of his workers. There was no response from the proprietor.

" After this, the processionists moved towards Murali Cafe. They stood in front of the cafe and here also they shouted in criticism of the action of the proprietor in having dismissed Ramakrishnan. The proprietor of this cafe rushed towards the processionists and challenged them. As the processionists continued their demonstration, the proprietor and two other persons caught hold of a few bottles of aerated water and dashed them in the midst of the processionists. The proprietor is also alleged to have snatched the flag carried by one of the processionists. The bottles burst open and seven hotel workers in the procession sustained simple injuries.

" Shortly afterwards, Ramakrishnan telephoned to the Police Control Room about the incident. Immediately, a police party went to the spot and prevented further troubles. The injured persons were taken to the Royapetta Hospital for treatment. Sufficient escort was also provided for the processionists until they dispersed.

" A case under section 324, Indian Penal Code (wantonly causing hurt with dangerous weapons) has been registered against the proprietor of Murali Cafe and one of his workers.

" The Hotel Workers' Association took out this procession all on a sudden and without any notice to the police. Hence no policemen were deputed to follow the procession. However, on shouts being heard when they started from the Star Talkies, a police constable was sent to that place from Triplicane Police station to find out details. He found that the procession was moving towards Pycrofts Road which is under the jurisdiction of the Ice House Police station. The incident in front of the Murali Cafe occurred before the police constable could reach the Triplicane Police station and telephone to the Ice House Police station."

Sri S. DAIVASIGAMONEY :—" On a point of information, Sir."

Mr. SPEAKER :—" This is not the time to ask for information. Now we shall resume discussion on Demand XXXII—Community Development Projects."

Sri M. KALYANASUNDARAM :—" Sir, I want to make a personal explanation."

Mr. SPEAKER :—" The hon. Member can do it to-morrow.

" Now we shall continue the discussion on the Demand moved by the Hon. the Minister for Agriculture yesterday."

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1955-56.

(1) DEMAND XXXII—COMMUNITY DEVELOPMENT PROJECTS—*cont.*

SRI G. GOVINDAN :—" கனம் சபாநாயகர் அவர்களே, விவசாய மந்திரி அவர்கள் கொண்டுவந்த மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகளைச் சொல்ல பிரியப்படுகிறேன். உதாரணமாக நேற்றையதினம் விரிவாக மராமத்து இலாகா மந்திரி அவர்கள் சொன்னார்கள். எங்கெங்கு நீர்வளம் குறைவாக இருக்கின்றதோ அங்கெல்லாம் மின்சாரத்தை உபயோகப்படுத்த உதவி செய்வதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். அம்மாதிரி ஏற்பாடு செய்வதற்கு எங்கள் இராமனாதபுரம் ஜில்லாவின் கீழ்ப் பகுதியில் லைசென்சுதார் கம்பெனி இருப்பதால் சர்க்கார் மின்சாரத்தை விரிவுபடுத்தமுடியும் என்றுதான் நான் நினைக்கிறேன். நீர்வளமில்லாத இராமனாதபுரம் ஜில்லாவின் கிழக்குப் பகுதியில் எந்தவிதமான சமுதாய நலத் திட்டமும், தேசீய விஸ்தரிப்புத் திட்டமும், ஸ்தல அபிவிருத்தித் திட்டமும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது கனம் மந்திரி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் பல தடவை எங்கள் ஜில்லாவிற்கு வந்திருக்கிறார்கள். ஆந்திர தேசத்தில் வரண்ட பகுதிகள் ராயலசீமையில் இருக்கிறதென்று சொல்வார்கள். அதேமாதிரி மோசமான வரண்ட பகுதி எங்கள் கிழக்கு இராமனாதபுரம் ஜில்லாவாகும். அங்குள்ளவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சகாரா பாலைவனத்தைவிடக் கேடான பிரதேசம் முதுகுளத்தூர் தாலூகாவாகும். சகாரா பாலைவனம் என்றால் 'எப்படி இருக்கும்' என்று ஒருவர் கேட்டால் எங்கள் முதுகுளத்தூர் தாலூகாவைக் காட்டினால் போதும். சகாரா பாலைவனத்தின் தன்மையைக் கண்டுகொள்ளலாம். உண்மையில் அது சகாரா பாலைவனத்தைவிட மோசமான பகுதியாகும். அங்கு எந்த விதமான வசதியும் கிடையாது. அதிகார வர்க்கத்தில் உள்ளவர்களுடைய உதவியைக் கேட்டால் ஏதோ ஒரு அளவுக்குத்தான் உதவி செய்கிறார்கள். முதுகுளத்தூர் தாலூகாவிலுள்ள மக்கள் வாழ்வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் மத்திய சர்க்காரிடத்தில் அதிகமாக பணத்தை வாங்கி கிழக்கு இராமனாதபுரம் ஜில்லாவில் அதிகமான தேசீய விஸ்தரிப்பு திட்டப்பகுதிகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இராமனாதபுரம் ஜில்லாவில் ஒரு டிவிஷனில் முக்கியமாக மந்திரியாய் இருந்தவரும் அதிக செல்வாக்கு படைத்த எம்.எல்.ஏ.ஆக இருந்தவர் சிவகாசி டிவிஷனைச் சேர்ந்தவராக இருப்பதால் நன்மை கிடைத்திருக்கிறதென்று நினைக்கிறேன். இராமனாதபுரம் டிவிஷன், தேவகோட்டை டிவிஷன் ஆகிய இடங்களுக்கு சட்டசபை அங்கத்தினர்களைக்கொண்ட ஒரு தூதுகோஷ்டியை அனுப்பி அங்குள்ள நிலைமையை பார்க்கச்செய்யவேண்டும். திருவாடானை, முதுகுளத்தூர் எந்த நிலையில் இருக்கின்றன என்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். திருவாடானை, முதுகுளத்தூர் தாலூகாக்களை கனம் மந்திரி அவர்கள் சுற்றிப்பார்த்திருக்காவிட்டாலும் அங்கிருக்கக்கூடிய அதிகாரிகள் அதைப் பற்றி சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். வைகைத் திட்டத்தினால் நீர்வளம் குறைந்துவிட்ட, பாதிக்கப்பட்ட பிரதேசமாக ஆய்விட்ட எங்கள் பிரதேசத்திற்கு நன்மை செய்யவேண்டுமென்றால் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் அதிகமான பிரதேசங்களைச் சேர்க்கவேண்டும். இராமனாதபுரம் தாலூகா, முதுகுளத்தூர் தாலூகா, பரமக்குடி, திருவாடானை, சிவகாசி தாலூகாக்களில் முக்கியமாக அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். 9-33 a.m.

" தேசீய விஸ்தரிப்புத் திட்டப் பகுதிகளில் கைத்தொழில் விஸ்தரிக்கப்படவேண்டும். இராமனாதபுரம் ஜில்லாவில் முக்கியமாக சில ஊர்களில் கைத்தொழில் திறம்பட நடத்தக்கூடிய சகோதரர்கள் இருக்கிறார்கள், நடத்திக்கொண்டே இருக்கிறார்கள். கூட்டுறவு முறையில் கைத்தொழில்கள் ஆரம்பித்துச் செவ்வனே நடத்த முடியாமல் விட்டுவிட்டார்கள். சில கிராமங்களில் முஸ்லிம் பெண்கள் வீட்டை விட்டு வெளியே போகாமல் கையினால் கூடைகள், தொப்பிகள் முதலியவை செய்கின்றார்கள். அவை

[Sri G. Govindan] [17th March 1955

கள் சென்னையில்கூட விற்கப்பட்டு வருகின்றன. அம்மாதிரி சாமன்களைச் செய்வதற்கு அங்கு வேண்டியவசதி இருக்கின்றன. அதை விருத்தி செய்ய சர்க்கார் ஊக்கமளிக்கவேண்டும்.

" உத்தரகோசமங்கை, தேவிபட்டணம் போன்ற இடங்களின் கடற்கரையோரங்களில் சிமிண்டு தயாரிப்பதற்கேற்ற கற்கள் கிடைக்கின்றன. 'சாம்பிள்' கூட என்னிடம் இருந்தது. ஆனால் இப்பொழுது கொண்டுவரவில்லை. இன்னொரு சமயம் கனம் மந்திரியவர்களிடம் காண்பிக்கின்றேன். சிமிண்டுத் தொழிலுக்கேற்ற வசதி தேவிபட்டணம், திருப்புல்லானி போன்ற இடங்களில் இம்மாதிரி கற்கள் அதிகமாக கிடைக்கின்றன. சிமிண்டுக்கு அதிகமான பாலிஷ் ஏற்படக்கூடிய அளவுக்கு இக்கற்கள் இருக்கின்றன என்று அநேகர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால் அரசாங்கத்தார் இதைக் கவனித்து வேண்டுவனசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

" தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் முதுகுளத்தூர், திருவாடானைத் தாலூகாக்களை அவசியம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அங்கு அதிகமான பிற்போக்கு வகுப்பினர்கள் வாழ்கிறார்கள். பாண்டிய வம்சத்தார் தேசத்தை அக்காலத்தில் ஆண்டுவந்தவர்கள் என்று சொல்லப்படும் முக்குலத்தோர்கள் இன்று அங்கு வறுமையினால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளை அபிவிருத்தித் திட்டப் பகுதியில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

9-40 a.m. "நேற்றையதினம் கனம் மராமத்து மந்திரி அவர்கள், ஏற்கெனவே பாதிக்கப்பட்ட பிரதேசம் தங்களுக்குத் தெரியும் என்று சொன்னார்கள். தெரியும் தெரியும் என்று மந்திரி அவர்கள் சொல்லிக்கொண்டே இருந்தால் எங்களுக்கு என்றைக்குத்தான் விமோசனம் கிடைக்குமென்றே தெரியவில்லை. எங்கள் பகுதியை இன்னும் சீர்தூக்கிப் பார்க்கவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். மந்திரி அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது மானாமதுரைக்கு வந்துவிட்டு அப்படியே திரும்பிவிடுகிறார்களேயொழிய திருவாடானை, பரமக்குடி, இராமனாதபுரம், முதுகுளத்தூர் போன்ற வரண்டபிற்போக்கான, நீர்வளமற்ற தாலூகாக்களுக்கு வந்து அங்குள்ள நிலைமையை நேரில் தெரிந்துகொள்வதில்லை. அங்குள்ள மக்களின் கஷ்ட நிலைமையை மந்திரி அவர்கள் நேரில் தெரிந்துகொண்டால்தான் அவர்களுக்கு எந்த வகையில் நிவாரணம் அளிக்கலாம் என்பதை அவர்கள் கவனிப்பதற்கு முடியும். அவர்கள் எங்கள் பக்கத்தை எட்டிப் பார்ப்பதுகூட கிடையாது. தப்பித் தவறி ஒரு சமயம் கனம் ரெவினியு மந்திரி ஸ்ரீ மாணிக்கவேலு நாய்க்கர் அங்கு வந்து சேர்ந்தார்கள். அதன்பின் நான் கனம் மந்திரி அவர்களை எத்தனையோ முறைகள் கேட்டிருந்தாலும் அவர் அங்கு வரவேயில்லை. கனம் மந்திரி அவர்கள் அங்கிருக்கக்கூடிய குறைகளை உணர்ந்து வேண்டுவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தை அளித்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்."

* Sri P. K. GOPALAKRISHNAN :—" ബഹുമാന്യ അദ്ധ്യക്ഷരേ, സാമൂഹ്യവികസനപദ്ധതികൾക്കും ദേശീയവിപുലീകരണപദ്ധതികൾക്കും പ്രദേശികവികസനപദ്ധതികൾക്കും കൂടിച്ചേർന്നുള്ളതാണ് ഈ ധനാഭ്യർത്ഥന. ഈ മൂന്നിനങ്ങളും ഗ്രാമജീവിതത്തെ പുനരുജ്ജീവിപ്പിക്കുന്നതിനുവേണ്ടിയുള്ള പദ്ധതികളായിട്ടാണ് കണക്കാക്കപ്പെടുന്നത്. ഗ്രാമീണജീവിതത്തിന് ഒരു നവോത്ഥാനം നല്കി ഗ്രാമീണരെ സമുദായത്തിന്റെ സാർവ്വത്രികമായ പുരോഗതിയിൽ ഭാഗഭാക്കുകളാക്കുകയെന്നുള്ളതാണ് ഈ സാമൂഹ്യവികസനപദ്ധതികളുടെ ലക്ഷ്യമെന്നു ഗവമ്മേണ്ടിന്റെ പ്രസിദ്ധീകരണത്തിൽ പറഞ്ഞിരിക്കുന്നു. ഗ്രാമീണരുടെ സഹകരണത്തോടുകൂടി ഗ്രാമജീവിതത്തെ പുനരുദ്ധരിക്കുന്നതിനുള്ള ഗവമ്മേണ്ടിന്റെ എല്ലാ സംരംഭങ്ങളേയും കമ്മ്യൂണിസ്റ്റ് പാർട്ടി സ്വാഗതം ചെയ്യുന്നതാണ്. ഇപ്പോഴത്തെ ഈ സാമൂഹ്യവികസനപദ്ധതികൾ ആരംഭിക്കുന്നതിനു മുമ്പ് ഫർക്കാ വികസനപദ്ധതികളെന്നും ഗ്രാമവികസനപദ്ധതികളെന്നും മറ്റുമുള്ള പേരുകളിൽ ചില പദ്ധതികൾ നമ്മുടെ സ്റ്റേറ്റിലുണ്ടായിരുന്നു. ഉത്തരപ്രദേശ്, ബോംബെ, മദ്ധ്യപ്രദേശ് തുടങ്ങിയ സംസ്ഥാനങ്ങളിലും ഇതുപോലുള്ള

17th March 1955] [Sri P. K. Gopalakrishnan]

ചില പദ്ധതികളുണ്ടായിരുന്നു. എന്നാൽ ഈ പദ്ധതികളെയെല്ലാം ക്രോഡീകരിച്ചുകൊണ്ട് ഇന്ത്യയിലെങ്ങുമുള്ള ഗ്രാമങ്ങളുടെ സർവ്വതോമുഖമായ അഭിവൃദ്ധിക്കുവേണ്ടി ഒരു പദ്ധതി ഇതിനുമുമ്പ് ആസൂത്രണം ചെയ്യാൻ കഴിഞ്ഞിരുന്നില്ല. കഴിഞ്ഞ രണ്ടു കൊല്ലംകൊണ്ടാണ് ഈ സാമൂഹ്യവികസനപദ്ധതികൾ ഗവൺമെണ്ടു ആരംഭിച്ചിട്ടുള്ളത്. മുമ്പുണ്ടായിരുന്ന വികസനപദ്ധതികളെയെല്ലാം കേന്ദ്രീകരിച്ചുകൊണ്ട് ഗ്രാമീണജനങ്ങളുടെ ദേശീയബോധത്തെ തട്ടിയുണർത്തി അവരുടെ സഹകരണത്തോടുകൂടി ഗ്രാമജീവിതത്തെ പുനരുജ്ജീവിപ്പിക്കുന്നതിനായി ആസൂത്രണം ചെയ്തിട്ടുള്ള ഒരു പദ്ധതിയാണിത്. അത് സ്വാഗതാർഹവുമാണ്. കമ്മ്യൂണിസ്റ്റുകാർ ഇതിനു എതിരല്ലെന്ന് കമ്മ്യൂണിസ്റ്റ് പാർട്ടിയുടെ പേരിൽ വ്യക്തമാക്കുവാൻ ഞാൻ ആഗ്രഹിക്കുന്നു.

"എന്നാൽ ഈ പദ്ധതി നടപ്പിൽവരുത്തുന്നതിന് ഗ്രാമീണരുടെ യഥാർത്ഥമായ സഹകരണം നേടാൻ ഗവൺമെണ്ട് ഉദ്യമിക്കുന്നില്ലെന്നുള്ള പരമാർത്ഥം വ്യക്തമാക്കാതിരിക്കാൻ നിവൃത്തിയില്ല. ഈ നാട്ടിലെ അനുദ്യോഗസ്ഥസംഘടനകളുടേയും സ്ഥാപനങ്ങളുടേയും സഹകരണത്തോടുകൂടിയല്ലാതെ ഈ പദ്ധതി വിജയപ്രദമാകാൻ പോകുന്നില്ല. ഈ പദ്ധതിക്കായി ഗവൺമെണ്ട് കഴിഞ്ഞയാണ്ടിൽ ചെലവഴിച്ച സംഖ്യകൾ പരിശോധിച്ചാൽ ഉദ്ദേശിച്ചപോലുള്ള സഹകരണം നാട്ടുകാരിൽനിന്നു ലഭിക്കുന്നില്ലെന്നു വ്യക്തമാകുന്നതാണ്. സാമൂഹ്യവികസനപദ്ധതികൾക്കായി കഴിഞ്ഞ കൊല്ലത്തെ ബഡ്ജററിൽ നീക്കിവച്ചിരുന്ന തുകയിൽ പലയിനങ്ങളിലും മുഴുവൻ ചെലവായിട്ടില്ല. ചില ഉദാഹരണങ്ങൾ ചൂണ്ടിക്കാണിക്കാം. ആരോഗ്യവും ഗ്രാമശുചീകരണവും എന്ന ഇനത്തിന് 13,68,900 ക. നീക്കിവച്ചിരുന്നതിൽ 11,04,700 ക. മാത്രമേ ചെലവായിട്ടുള്ളു. ബഡ്ജററിൽ കൊള്ളിച്ചിരുന്നതിൽ 20 ശതമാനം ചെലവായിട്ടില്ല. വിദ്യാഭ്യാസത്തിന് 7,36,500 ക. വച്ചിരുന്നതിൽ 5,56,0[illegible]0 ക. മാത്രമേ ചെലവാക്കാൻ കഴിഞ്ഞിട്ടുള്ളു. അതും 20 ശതമാനം കുറവാണ്. ഗ്രാമങ്ങളിൽ ഗതാഗതസൌകര്യങ്ങൾ വർദ്ധിപ്പിക്കുന്നതിന്നായി 17,49,900 ക. മാററിവച്ചിരുന്നതിൽ 13,35,300 ക. മാത്രമേ ചെലവാക്കിയിട്ടുള്ളു. അതായത്, 25 ശതമാനം കുറച്ച്. ഗ്രാമങ്ങളിലെ കുടിൽവ്യവസായങ്ങളും കരകൌശലങ്ങളും അഭിവൃദ്ധിപ്പെടുത്താനായി നീക്കിവച്ചിരുന്നത് 4,64,900 ക. ആണ്. അതിൽ 1,50,900 ക. മാത്രമേ ചെലവാക്കിയിട്ടുള്ളു. അതായത്, നീക്കിവച്ചിരുന്ന തുകയുടെ 60 ശതമാനം കുറച്ചാണു ചെലവാക്കിയിട്ടുള്ളത്. ഇങ്ങനെ ഏതു ഇനം എടുത്തു പരിശോധിച്ചാലും വേണ്ടത്ര തുകകൾ ചെലവുചെയ്യാൻ കഴിയാതെ വന്നിട്ടുണ്ടെന്നുള്ളത് ഗ്രാമീണരുടെ യഥാർത്ഥമായ സഹകരണം നേടാൻ ഗവൺമെണ്ടിനു സാധിച്ചിട്ടില്ലെന്നുള്ളതിനെയാണ് കാണിക്കുന്നത്.

"ഈ പദ്ധതികൾക്കായി ഗ്രാമീണരിൽനിന്ന് 50 ശതമാനം സംഭാവന ഗവൺമെണ്ട് പ്രതീക്ഷിക്കുന്നുണ്ട്. നാട്ടിലെ അനൌദ്യോഗികസംഘടനകളുടേയും സ്ഥാപനങ്ങളുടേയും സഹകരണം തേടുകയെന്നതിനെക്കാൾ ഗവൺമെണ്ടിൻെറ സ്വന്തം അധികാരപ്രമത്തമായ ഉദ്യോഗസ്ഥവൃന്ദത്തിൻെറ സഹായത്തെ ആശ്രയിച്ചുകൊണ്ട് ഈ പദ്ധതികൾ നടപ്പിൽവരുത്തുവാനുള്ള ഒരു യത്നമാണ് ഗവൺമെണ്ട് ചെയ്തുകൊണ്ടിരിക്കുന്നത്. അതു ബഡ്ജററിലെ കണക്കുകൾകൊണ്ടുതന്നെ വളരെ വ്യക്തമാകുന്നുണ്ട്. സാമൂഹ്യവികസനപദ്ധതികൾക്കായി 117 ലക്ഷം ഉറുപ്പിക വച്ചിട്ടുള്ളതിൽ സൂപ്പർവിഷനും ഡിസ്ട്രിക്ട് എസ്റ്റാബ്ലിഷ്മെണ്ടുകൾക്കുമായി 18 ലക്ഷം ചെലവാകുന്നു. അതായത്, ചെലവിൻെറ 16 ശതമാനം ഉദ്യോഗസ്ഥന്മാരുടെ ശമ്പളത്തിനുവേണ്ടിയാണ് പോകുന്നത്. ദേശീയവിപുലീകരണപദ്ധതികൾക്കായി 61,28,700 ക. വച്ചിട്ടുള്ളതിൽ 24 ലക്ഷവും സൂപ്പർവിഷനു എസ്റ്റാബ്ലിഷ്മെൻറിനുമായിട്ടാണ് ചെലവാകുന്നത്. അതായത്, ആകെ ചെലവിൻെറ ഏകദേശം 40 ശതമാനം ഉദ്യോഗസ്ഥന്മാരുടെ ശമ്പളത്തിനായി ചെലവാകുന്നു. ഇങ്ങനെ നീക്കിവയ്ക്കുന്ന തുകയുടെ ഒരു നല്ല ഭാഗം ചെലവുചെയ്തു അധികാരപ്രമത്തമായ ഒരു ഉദ്യോഗസ്ഥവൃന്ദത്തെ പുലർത്തിക്കൊണ്ട് അവരുടെ സഹകരണത്തോടും സഹായത്തോടുംകൂടിമാത്രം ഈ പദ്ധതികൾ നടപ്പിൽവരുത്താമെന്ന വ്യാമോഹമാണ് ഗവൺമെണ്ടിനുള്ളതെങ്കിൽ അതു വളരെ അപകടകരമാണെന്ന് ഞാൻ ഓർമ്മിപ്പിച്ചുകൊള്ളുന്നു. ബാക്കി സംഖ്യകൾ ഗ്രാമങ്ങളിലെ കൃഷി, ജലസേചനം, വിദ്യാഭ്യാസം, സാമൂഹ്യവിദ്യാഭ്യാസം, ആരോഗ്യപരിപാലനം, ഗതാഗതസൌകര്യങ്ങൾ വർദ്ധിപ്പിക്കൽ തുടങ്ങിയുള്ള ചില ഇനങ്ങൾക്കായിട്ടാണ് ചെലവാക്കാൻ ഉദ്ദേശിച്ചിട്ടുള്ളത്. ഈ ഇനങ്ങളെല്ലാംതന്നെ അതാതു സ്ഥലങ്ങളിലെ തദ്ദേശ സ്വയംഭരണസ്ഥാപനങ്ങളും പഞ്ചായത്തു ബോർഡുകളും മററും നടപ്പിൽവരു

ത്തിക്കൊണ്ടിരിക്കുന്ന കാര്യങ്ങളാണ്. തദ്ദേശഭരണസ്ഥാപനങ്ങളുടേയും പഞ്ചായത്തുകളുടേയും സഹകരണത്തോടുകൂടി അവയുടെ പ്രവർത്തനപദ്ധതികളുടെ കൂട്ടത്തിലുൾപ്പെടുത്തി അവയെക്കൊണ്ട് ഈ പദ്ധതികൾ നടപ്പിൽവരുത്തിക്കാൻ എത്രമാത്രം സാദ്ധ്യതയുണ്ടെന്ന് അന്വേഷിച്ചതിന്നുശേഷമാണോ ഗവർമ്മേണ്ട് ഇങ്ങനെ വമ്പിച്ചചെലവു ചെയ്ത് ഒരു പ്രത്യേക ഉദ്യോഗസ്ഥവൃന്ദത്തെ നിയമിക്കാൻ തീരുമാനിച്ചത് എന്ന് ആലോചിക്കേണ്ടിയിരിക്കുന്നു. സാമൂഹ്യവികസനപദ്ധതികൾ ഏർപ്പെടുത്തുന്നതിന്ന് ഒരു പ്രത്യേക ഡിപ്പാർട്ടുമെണ്ടു വേണ്ടെന്നു ഞാൻ തീർത്തുപറയുകയാണെന്ന് ധരിക്കരുത്. എങ്കിലും പഞ്ചായത്തുകൾ തുടങ്ങിയുള്ള തദ്ദേശസ്ഥാപനങ്ങളെക്കൊണ്ട് ഈ പദ്ധതികൾ നടപ്പിൽ വരുത്തിക്കാൻ കഴിയുകയില്ലേ എന്ന കാര്യം ഗവർമ്മേണ്ട് ഗൌരവപൂർവ്വം ആലോചിക്കേണ്ടതുണ്ടെന്നാണ് ഞാൻ പറയുന്നത്. ഇന്നത്തെ രീതിയനുസരിച്ചു വമ്പിച്ച തുകകൾ ഭരണച്ചെലവിന്നായി പൊയ്പ്പോവുകയും തുച്ഛമായ ഒരു ഭാഗം മാത്രം ജനങ്ങളുടെ ആവശ്യത്തിന്നു ഉപകരിക്കുകയും ചെയ്യുന്നുവെന്നു പറയുമ്പോൾ തദ്ദേശസ്വയംഭരണസ്ഥാപനങ്ങൾ മുഖാന്തിരം ഈ പദ്ധതികൾ നടപ്പിൽവരുത്താൻ സാധിക്കുകയില്ലേ എന്ന് ആലോചിച്ചുനോക്കേണ്ടതു് ഗവർമ്മേണ്ടിൻെറ ചുമതലയാണ്.

"ഇനി ഈ പദ്ധതികളുടെ നടത്തിപ്പിൽ കാണുന്ന ചില ദോഷങ്ങളെ ചൂണ്ടിക്കാണിക്കാൻ ഞാൻ ആഗ്രഹിക്കുന്നു. ഈ പദ്ധതികളുടെ പ്രവർത്തനത്തിന്നു നാട്ടുകാരിൽനിന്നു 50 ശതമാനം സംഭാവന കിട്ടണമെന്നാണ് ഗവർമ്മേണ്ടിൻെറ നില. എന്നാൽ ഇന്ന് നാട്ടിലെ സ്ഥിതി എന്താണ്? ദാരിദ്ര്യംകൊണ്ടും തൊഴിലില്ലായ്മകൊണ്ടും പട്ടിണികൊണ്ടും മററു് എണ്ണമററ ദുരിതങ്ങൾകൊണ്ടും ആളുകൾ ആത്മഹത്യയ്ക്കുപോലും തയ്യാറാകുന്ന ഒരു ഘട്ടത്തിലാണ് 50 ശതമാനം സംഭാവന ജനങ്ങളിൽനിന്നു കിട്ടിയാലേ ഈ പദ്ധതികൾ നടപ്പിൽ വരുത്തൂ എന്ന് ഗവർമ്മേണ്ട് നിർബ്ബന്ധം പിടിക്കുന്നത്. അതുകൊണ്ടാണ് ബഡ്ജററിൽ ഗവർമ്മേണ്ട് നീക്കിവയ്ക്കുന്ന തുകകൾ ചെലവാക്കാൻ സാധിക്കാതെ വരുന്നത്. കഴിഞ്ഞ കൊല്ലത്തെ ബഡ്ജററിൽ ലോക്കൽ ഡെവലപ്പ്മെൻറു് പദ്ധതികൾക്കായി നീക്കിവച്ചിരുന്ന തുക ലാപ്സാകാൻ പോവുകയാണെന്നു ബഹുമാനപ്പെട്ട മന്ത്രിയുമായി സംഭാഷണം നടത്തിയപ്പോൾ എനിക്ക് മനസ്സിലാക്കാൻ കഴിഞ്ഞിട്ടുണ്ട്. അമ്പതു ശതമാനം നാട്ടുകാരിൽനിന്നു കിട്ടിയാലേ ഗവർമ്മേണ്ട് നീക്കിവച്ചിരിക്കുന്ന തുക ചെലവാക്കൂ എന്നു നിർബ്ബന്ധം വയ്ക്കുകയാണെങ്കിൽ പല പദ്ധതികളും നടപ്പിലാക്കാൻ കഴിഞ്ഞില്ലെന്നുവരും. വളരെ അധികം തുക ലാപ്സായിപ്പോവുകയും ചെയ്യും. ഈ നിർബ്ബന്ധം ഗവർമ്മേണ്ടു ഉപേക്ഷിക്കണമെന്നു ഞാൻ അഭ്യർത്ഥിക്കുന്നു."

9-50 a.m. *SRI A. SENAPATHI GOUNDER:—"கனம் சபாநாயகர் அவர்களே, சமுதாய நல அபிவிருத்தி திட்டம், தேசிய விஸ்தரிப்பு திட்டம், ஸ்தல அபிவிருத்தி திட்டம், ஆகிய திட்டங்கள் நமது சர்க்காரின் நல்ல எண்ணத்தை காட்டுகிறது. அதாவது நமது அரசாங்கம் நகரங்களை விட்டு, சிறிது சிறிதாக கிராமங்களுக்கு நகர்ந்து கிராம மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய முயற்சிக்கிறார்கள் என்பதை இந்த திட்டங்கள் காட்டுகின்றன. எங்கள் பிரதேசமாகிய தாராபுரம், ஈரோடு தாலூகாக்களில் சமுதாய அபிவிருத்தி திட்டங்களும், ஸ்தல அபிவிருத்தி திட்டங்களும் சிறந்த முறையில் நடைபெற்றுவருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதாவது, விவசாயிகளுக்கு கடன் வசதி கொடுப்பது, விவசாய இயந்திர சாதனங்கள் பம்ப் செட் போன்றவற்றை விவசாயிகளுக்கு உடனடியாக சப்ளை செய்வது இவைகள் நல்ல வகையில் முன்னேறியிருக்கிறது என்றே சொல்ல வேண்டும். ஆனால் சில ரோடு போடும் வேலை, கட்டட வேலை இவைகளில் காலதாமதங்களும், கிராம வாசிகளுக்கு சில குறைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அதாவது விவசாயிகளுக்கு **Loan** கொடுப்பது இயந்திர சாமான்களை சப்ளை செய்ய ஏற்பாடு செய்வது போன்றவற்றை நிர்வகிக்கும் அதிகாரிகள் மிக பாராட்ட தகுந்த முறையில், குறுகிய கால அளவில் அவைகளை தந்து, நல்ல விதமாக உதவி செய்து வருகிறார்கள். ஆனால் ரோட், கட்டட வேலைகளை செய்ய தனியாக என்ஜினியரிங் படித்துவிட்டு வரும் சில நபர்கள், கிராம மக்களோடு பழகுவதில் சில முரண்பாடுகளை வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. கிராம மக்களின்பேரில் நல்லெண்ணம் உள்ளவர்களை அந்த மாதிரி வேலைகளுக்கு ஏற்படுத்தினால், இப்பொழுது காணப்படும் குறையையும் நீக்கி விடலாம்.

17th March 1955] [Sri A. Senapathi Gounder]

"இப்போது பல இடங்களில் புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு யாரை உபாத்தியாயராக போடுவது, யார் போடுவது, எந்த இடத்திலிருந்து உபாத்தியாயர் வருவார் என்பதுகூட தெரியாமல் இருக்கிறது. ஆகையால் இந்த பள்ளிக்கூடங்களுக்கு உடனடியாக உபாத்தியாயர்களைப்போட ஏற்பாடு செய்யவும், உபாத்தியாயர்களை நியமிக்கும் உரிமையையும் சமுதாய அபிவிருத்தி அதிகாரிகளுக்குக் கொடுத்தால் மிகவும் நல்லதாக இருக்கும். ஏனென்றால், ஜில்லா கல்வி அதிகாரிக்கு ஏற்கனவேயே பல பெரிய பொறுப்புகள் இருக்கின்றன. இந்த பொறுப்புக்களுடன், புதியதாக அபிவிருத்தி திட்டம் தடை பெறுகிற இடங்களிலுள்ள பள்ளிகூடங்களுக்கு உபாத்தியாயர்களை உடனடியாக நியமிக்கும் பொறுப்பையும் ஏற்க முடியாத நிலையில் கஷ்டப்படுகிறார். ஆகவே, கல்வி வளர்ச்சியை முன்னிட்டு இந்த புதிய பள்ளிக்கூடங்களுக்கு உபாத்தியார்களை நியமிக்கும் பொறுப்பை சமுதாய அபிவிருத்தி திட்டம் அதிகாரிகளுக்கு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் இந்த கட்டடங்கள், ரோடுகள் போடுவதற்கு **Estimate** போடுவது என்பது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. ஆகையால் காலதாமதமும் ஆகின்றது. சீக்கிரத்தில் அந்த வேலைகளை ஆரம்பிக்கக்கூடிய லாயக்கில்லாமலும் இருக்கிறது. இதைத் திருத்த கனம் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறேன். மேலும் நமது சமுதாய அபிவிருத்தி திட்ட வேலைகளை எல்லாம், கனம் அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் கவனித்து, கண்காணித்து வருகிறார்கள். குறைகளை எடுத்துச் சொன்னால், உடனடியாக நிவர்த்தி செய்கிறார்கள் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

"மேலும் இந்த அபிவிருத்தி வேலைகளையெல்லாம் நல்ல விதமாக நடத்தி, மக்களுக்கு நல்ல பணியாற்ற வேண்டுமென்றால், அதற்குதக்க அதிகாரிகளை நியமிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். தற்சமயம் என்னுடைய பிரதேசத்தில் நல்ல அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆகையினால் எங்கள் பிரதேசம் நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. அதுபோல எந்தெந்த இடங்களில் நல்ல சேவை மனப்பான்மையுடைய அதிகாரிகள் இருக்கிறார்களோ அந்த இடங்களெல்லாம் நல்ல விதமாக முன்னேற்றம் அடைகிறது. மற்றும் சில காரியங்களை செய்வதற்கு இந்த இலாகாவுக்கு தனிப்பட்ட சுதந்திரம் இல்லாமலிருக்கிறது. ஏதாவது வேண்டுமென்றால், கலெக்டர் அவர்களையும், மற்றும் பல இலாகா தலைவர்களையும் கேட்டுத்தான் ஒவ்வொரு காரியமும் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த மாதிரி சந்தர்ப்பங்களில், மற்ற அதிகாரிகளும் இந்த அபிவிருத்தி விஷயத்தில் ரொம்ப சிரத்தை யெடுத்து அதில் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். அபிவிருத்தி வேலையென்றால், அந்தப் பேப்பரை முதலில் அனுப்பிவைக்கும்படியான மனப்பான்மை அந்த அதிகாரிகளுக்கும் இருந்தால் வேலைகள் சீக்கிரம் முடியும். இந்த சமுதாய அபிவிருத்தி திட்டம் ஏற்படுத்திய பிறகு, ஏகதேசமாக எங்கள் தாலூகா பூராவும் அனேக இடங்களில் பல ரோடுகள் போடப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டு ஆஸ்பத்திரிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் திட்ட காலத்திற்கு பிறகு யாருடைய பராமரிப்பில் இருக்க வேண்டுமென்பது முடிவு கட்டப்பட வேண்டும். திட்ட காலம் ஒரு வருஷமாக இருக்கலாம் அல்லது இரண்டு வருஷங்களாக இருக்கலாம். அதற்குப் பிறகு, இந்த ஆஸ்பத்திரிகளை யார் நடத்துவது, ஜில்லா போர்டா, கவர்மெண்டா என்பது தீர்மானிக்கப்படவேண்டும். கவர்மெண்டு எடுத்து நடத்தினால்தான் மிகவும் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

"மேலும் கிராம ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் கிடைப்பது கடினமாகயிருக்கிறது. அவர்களை கிராமத்திற்குப் போகச் சொன்னால், எங்களுக்கு அங்கு போதிய வருமானம் வருவதில்லை, எங்கள் குடும்பத்திற்கு வேண்டிய கல்வி வசதி கிடையாது என்பது போன்ற குறைகளை சொல்லிக் கொண்டு, வராமல் இருந்துவிடுகிறார்கள். ஆகையால் கிராமங்களுக்கு போய் சேவை செய்யும் டாக்டர்களுக்கு, சர்க்கார் சம்பளத்தை அதிகப்படியாகக் கொடுத்து அவர்களை கிராமத்திற்கு வரும்படியாக செய்ய வேண்டும். மேலும் கிராம ஆஸ்பத்திரிகளில் டாக்டருக்கு சிறிது நேரத்திற்குத் தான் வேலையிருக்கும். ஆகையால் மற்ற காலத்திற்கு, அவர்களுக்கு

[Sri A. Senapathi Gounder] [17th March 1955

ஒரு கார் அல்லது ஜீப் போன்றவற்றைக் கொடுத்து சுற்றுப்புறங்களில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் சென்று வைத்தியம் செய்து வரும்படியான வசதியை, இந்த அபிவிருத்தி திட்டத்தின் மூலம் செய்து தரக் கோருகிறேன். தாராபுரம் தாலூகாவில் மிகவும் பஞ்ச பிரதேசமாக யிருக்கிற இரண்டு பிர்க்காக்கள்தான் தேசிய அபிவிருத்தி திட்டத்தில் இருக்கிறதே தவிர மேலும் நான்கு பிர்க்காக்கள் சேர்க்கப்பட வில்லை. கனம் அமைச்சர் அவர்கள் அந்த பிர்க்காக்களையும் தேசிய அபிவிருத்தி திட்டத்தில் சேர்த்து அந்தப் பஞ்ச பிரதேசங்களுக்கும் இந்த சேவை பயன்படும்படியாக செய்ய கோறுகிறேன். மேலும் அமராவதி நீர்பாசனத்தில் பலன் அடையக்கூடிய பிரதேசங்களை சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கொண்டு வந்து, உடுமலைபேட்டை, தாராபுரம் தாலூகாக்களையும் அதில் சேர்த்து பலன் அளிக்கும்படியாக கேட்டுக்கோள்ளுகிறேன். இந்த அபிவிருத்தி விஷயத்தில் கனம் அமைச்சர் அவர்கள் மிகவும் சிரத்தை காட்டுவதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்திக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.''

9-59 a.m. *SRI B. K. NALLASWAMI :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். சமுதாய அபிவிருத்தி திட்டத்தினால் எங்கள் தாலூகாவில் ஆறு கிராமங்கள்தான் நன்மை அடைந்திருக்கின்றன. இந்த மூன்று வருஷங்களில் இந்த வருஷம்தான் உருப்படியான சில வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. காரணம் எந்த வேலையைச் செய்வது என்று முடிவு செய்திருந்தாலும் டில்லியிலிருந்து அனுமதி கிடைத்த பிறகுதான் அந்த வேலைகளைச் செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். சமுதாய திட்ட அமுல் நடப்பதில் அப்படிப்பட்ட நிலைமை இருந்து கொண்டிருக்கின்றன. இதனால் ஒரு சிறிய காரியம் செய்ய வேண்டும் என்றாலும் கூட ஒரு வருஷமாகிறது அனுமதி கிடைப்பதற்கு என்று சொன்னால் அது மிகையாகாது. அதனால் அடிப்படையில் இருக்கும் இந்த சிக்கலை நீக்குவது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

"நம்முடைய தேசம் பூராவும் அடிப்படையில் வைத்துக்கொள்வதை விட பரவலான முறையில், ராஜ்ய சர்க்கார் திட்டங்களுக்கு வேண்டிய விதிகளை நிர்ணயித்துக்கொள்ள நாம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டால் வேலை துரிதமாக நடைபெறும்.

"மற்றும் வேலைகள் துரிதமாக நடைபெறாததற்குக் காரணம் ரோடுகளைப் போடுவதென்றாலும் ஆஸ்பத்திரிகளைக் கட்டுவதென்றாலும் துரிதமாகபூமியையோ அல்லது அதற்கு வேண்டிய நிலத்தையோ சில பேர்கள் சுலபமாக விடுவதில்லை. அதனால் ரொம்ப வேலைகளும் இன்னும் சில சமயங்களில் ஆஸ்பத்திரிகள் கட்டுவதும் தடைபட்டு விடுகின்றன. இதற்கெல்லாம் தனியாக ஒரு சட்டம் இருந்தால் நல்லது என்று கருதுகிறேன். அவசர நிமித்தம் எடுத்துக் கொள்வதற்கு சில அதிகாரங்கள் அரசாங்கத்திற்கு இருந்தது. அது இப்பொழுது இல்லை. இம்மாதிரி கம்யூனிட்டி பிராஜெக்ட் பிரதேசங்களில் அவசரமாக சில ரோடுகளைப் போடுவதற்கும் ஆஸ்பத்திரிகளைக் கட்டுவதற்கும் நிலத்தை எடுத்துக்கொள்ள கூடிய அதிகாரம் கம்யூனிட்டி பிராஜெக்ட் அதிகாரிகளுக்கு இருக்க வேண்டியது ரொம்பவும் அவசியம். அப்படி இருந்தால் வேலைகள் கொஞ்சம் சீக்கிரமாக நடக்கும் என்று கருதுகிறேன்.

"இந்த கம்யூனிட்டி பிராஜெக்ட் மான்யத்தில் சென்ற வருஷம் கிராம கைத்தொழில் அபிவிருத்திக்காக நாலு லட்சத்தி அறுபத்தி நாலாயிரத்தி சொச்சம் அனுமதிக்கப்பட்டது. பின்னால் லட்சத்தி சொச்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷம் ஐந்து லட்சத்தி முப்பத்திரண்டு ஆயிரம் சொச்சம் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் திட்டம் தயாராக இருக்கிறதா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால் இந்த கிராம கைத்தொழில் அபிவிருத்தி திட்டம் பிற்போக்காக இருந்து கொண்டிருக்கிறது. தட்டாரபாளையம் என்ற ஊரில் தட்டார்கள் வசிக்கக்கூடிய இடங்களில் சில கொல்லர் பட்டரைகளில், பழைய காலத்தில் விவசாயக் கருவிகளை எப்படி தயாரித்து வந்தார்களோ அப்படியே தான் இப்பொழுதும் தயாரித்து வருகிறார்கள். அதை அபி

17th March 1955] [Sri B. K. Nallaswami]

விருத்தி செய்வதற்காக சில யோசனைகள் இருந்து வருகிறது. இதுவரையிலும் எந்த விதமான உறுப்படியான காரியங்களும் செய்யப்படவில்லை. அது மாத்திரம் அல்ல. இன்னும் விவசாயிகளுக்கு உப வருவாய் வரக் கூடிய பல திட்டங்களை இந்தப் பிரதேசங்களில் எடுத்துச் செய்யலாம். அப்படி எடுத்துச் செய்யும்போது கம்யூனிட்டி பிராஜெக்ட் பிரதேசங்களில் முதலில் எடுத்துச் செய்வதற்கு புனராலோசனை செய்து நடத்தலாம் என்று தோன்றுகிறது. தேனீ வளர்ப்பு முதலியவைகளை பரவலாகச் செய்தால் ஒவ்வொரு சிறிய விவசாயிக்கும் வருஷம் ரூ. 20-க்கு மேல் உப வருமானம் கிடைக்கும். இது விஷயத்தில் இப்பொழுது கவனம் செலுத்தப்படவில்லை. இன்னும் கோழி வளர்ப்பு, வாத்துகள் வளர்ப்பது பன்றிகள் வளர்ப்பது முதலியவைகள் பல கிராமங்களில் பழைய முறையிலேயே நடந்துகொண்டுவருகின்றன. அதை நவீன முறையில் செய்வதற்கு உத்சாகம் அளித்தால் அதன் மூலம் நாம் டாலர்களைக்கூட சம்பாதிக்க முடியும்.

(Deputy Speaker in the Chair.)

"அந்தப் பிரதேசங்களில் இன்னும் பஞ்சாயத்து போர்டுகளை அமைக்கவில்லை. அந்தப் பிரதேசங்களில் பஞ்சாயத்து போர்டுகளை அமைத்து ஒவ்வொரு ஊரிலும் டெவெலப்மெண்ட் ஆபீசர்களையும் நியமித்தால் ரொம்பவும் நன்றாக இருக்கும். பஞ்சாயத்துகளிடம் வேலைகளை ஒப்படைத்துவிடலாம். அத்துடன் கைக்குத்தல் அரிசியை உபயோகிக்க நாம் பிரசாரம் செய்யலாம். அதன் மூலம் இந்த பிரதேசங்களில் மில்களை எடுத்துவிடலாம். அதைப்பற்றி கம்யூனிட்டி பிராஜெக்ட் கமிட்டி ஆலோசனை செய்ய வேண்டும். இதை முதலில் பரீட்சார்த்தமாக கம்யூனிடி பிராஜெக்ட் பிரதேசத்திலாவது செய்ய வேண்டும். கைக்குத்தல் அரிசி உற்பத்தி செய்வதற்கு நாம் ஏற்பாடு செய்தால் கிராமங்களில் இன்னும் அதிகப்படியான சத்துள்ள உணவு கிடைக்கும். அதனால் வேலையில்லா திண்டாட்டம் ஒழிவதற்கும் சாதகமாக இருக்கும்.

"நமது அரசாங்கம் முற்றிலும் கவனிக்காமல் இருக்கும் மற்றொரு தொழில் மண் பாண்ட தொழில். மத்திய அரசாங்கம் மண் பாண்ட தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு சிரத்தை எடுத்துக்கொண்டு வேலை செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால் நம்முடைய அரசாங்கம் இது விஷயமாக எந்த விதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை என்பதைப் பார்த்தால் அது ரொம்பவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. அந்தத் தொழில் நாகரீகத்திற்குச் சின்னமாக இருக்கும் தொழில். அது இப்பொழுது அழிந்து விடக்கூடிய நிலையில் இருந்து கொண்டு வருகிறது. கிராமங்களில் மண் பாண்டங்கள் செய்வதற்கு வேண்டிய மண் கிடைப்பது கிடையாது. விறகும் சரியாக கிடைப்பது இல்லை. அதனால் மண் பாண்டங்கள் செய்வதற்கு என்று தரிசு நிலங்களையும் அவர்களுக்கு மண் கிடைக்கக் கூடிய நிலங்களையும் ஜாரி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய உதவியும் செய்ய வேண்டும். காடுகளுக்குப் பக்கத்தில் இருக்கும் மண் பாண்டம் செய்கிறவர்களுக்கு காடுகளிலிருந்து விறகுகளை வெட்டிக் கொள்வதற்கும் அவர்களுக்கு தாராளமாக பர்மிட்டுகள் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால் ரொம்பவும் நன்மையாக இருக்கும்.

"அடுத்தபடியாக கம்யூனிட்டி பிராஜெக்ட் ஏரியாக்களில் மின்சாரம் முக்கியமாகக் கொடுக்கப்படுகிறது. இப் பிரதேசங்களில் மின்சாரம் ஆறு மாதங்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். முழு வருஷத்திற்கும் மின்சாரம் கொடுத்து காரண்டி வாங்குவது போல் ஆறு மாதங்களுக்குக் கொடுத்தாலும் முழு வருஷ காரண்டியை வாங்குகிறார்கள். அப்படி வாங்க வேண்டிடிய அவசியம் இல்லை. அதைப்பற்றி ஜனங்கள் கிளர்ச்சி செய்து கொண்டு வருகிறார்கள். ஆறு மாதம் மின்சாரம் கொடுக்கும்போது மினிமம் காரண்டியும் ஆறு மாதங்களுக்குத்தான் வாங்க வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை. அதை சமுதாய அபிவிருத்தி திட்ட மந்திரி கவனித்து வேண்டிய ஏற்பாடு செய்வார்கள் என்று கருதுகிறேன்.

[Sri B. K. Nallaswami] [17th March 1955

"ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டுகிற விஷயத்திலும் பணம் ஒன்றும் ஒதுக்கப்பட்டதாகவே தெரியவில்லை. இதில் ரொம்ப கஷ்டங்கள் இருக்கின்றன. ஹரிஜனங்கள் பிறருடைய பூமியில் குடியிருந்து வருவதால் அவர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டு வருகிறார்கள். இந்த கம்யூனிட்டி பிராஜெக்ட் ஏரியாவிலும் வீடு கட்டுவதற்கு யாராவது ஜாமீன் கொடுத்தால் தான் அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு பணம் கொடுக்கப்படும் என்ற முறையில் அரசாங்கம் சொல்லுவதாக தெரியவருகிறது. அப்படிச் சொல்லுவதால் பணக்காரர்களிடத்திலும் நிலச்சுவான்தார்களிடத்திலும் ஹரிஜனங்களை அடிமைப்படுத்துவதாகத்தான் முடியும். ஆகையால் இந்த முறையை எடுத்துவிட்டு ஹரிஜனங்களை நம்பி வீடுகளையே ஜாமீனாக வைத்துக்கொண்டு பணம் கொடுக்கலாம் என்று இருக்கவேண்டும். இந்த மாதிரியான சிக்கல்களையெல்லாம் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இன்னும் ஒரு முக்கியமான விஷயம் இருக்கிறது. உழைப்பை கம்யூனிட்டி பிராஜெக்ட் ஏரியாவில் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லுகிறார்கள். பல இடங்களில் அப்படி பயன்படுவதாக இல்லை. காரணம் அங்கு வேண்டிய பிரசாரம் இல்லை. அந்த வேலைகளையெல்லாம் கண்ட்ராக்டுக்கு விட்டு அரசாங்கம் கொடுக்கும் பணத்தையே வைத்துக்கொண்டு பல வேலைகள் செய்வதில் சரி செய்து விடுகிறார்கள். அப்படி இல்லாமல் மக்கள் உத்சாகமாக இதில் பங்கெடுத்துக்கொள்வதற்கு பிரசாரகர்களை நியமிக்கவேண்டும். அதனால் இது விஷயமாக தேவையான பிரசாரகர்களை நியமிக்க வேண்டியது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது.

"இந்தப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்களைக்கூட **Basic** ஸ்கூல்களாக மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால் குடிசைத் தொழில் அபிவிருத்தித் திட்டம், மற்ற தேசீய திட்டங்கள் எல்லாம் மிக நன்றாக அமுல் செய்யும்போது, இந்த **Basic** ஸ்கூல்களையும் அந்தப் பிரதேசங்களுக்கே மாற்றினால், அத்திட்டங்களுக்கு ஒத்தாசையாகவும் ஒத்துழைப்பு கொடுக்கக் கூடியதாகவும் இருக்கும். ஆகையால், இந்த விஷயத்திலும் அரசாங்கம் முக்கிய கவனஞ்செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னொன்று இந்த திட்ட வேலைகளைச் செய்வதற்கு முதலில் அட்வான்ஸ் கொடுக்க சர்க்கார் முன் வரவேண்டும். எங்கள் பிரதேசத்தில் சில ஊர்கள் இருக்கின்றன, அங்கு உழைக்கக் கூடியவர்கள் இருக்கிறார்களே தவிர முன் பணம் கொடுக்கக் கூடியவர்கள் இல்லை. அந்தமாதிரி இடங்களுக்கெல்லாம், நேரடியாக கம்யூனிடி பிராஜெக்ட் அதிகாரிகளின் மூலமாக, அத்திட்டங்களை நிறைவேற்ற முதலில் பணம் செலவு செய்து, அதன்பின், கிராம மக்களிடமிருந்து உழைப்பைப் பெற்று, அதற்காக சரி செய்து கொள்ள வகை செய்ய வேண்டும். இப்போது இருக்கும் முறையில் அந்த மாதிரி சௌகரியங்கள் இல்லாமலிருக்கிறது."

10–10 a.m. *SRI A. K. SUBBIAH :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சமுதாய அபிவிருத்தி திட்டம் சம்பந்தமாக சில யோசனைகளை சர்க்காருக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திட்டம் தஞ்சாவூர் ஜில்லாவில், அமுல் ஆக்கப்பட்டு வருகிறது. என்றாலும், குறிப்பாக தேசீய விஸ்தரிப்புத் திட்டம் சீர்காழி, மாயூரம், கும்பகோணம், பாபநாசம் இந்நான்கு தாலூகாக்களிலும் அமுல் ஆக்கப்பட்டு வருகிறது. மற்ற பின்தங்கிய, பிற்போக்கான தாலூகாக்கள் அநேகம் இருக்கின்றன. அந்த தாலூகாக்களையும் இந்த திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அரந்தாங்கி, பட்டுக்கோட்டை தாலூகாக்கள் மிக பின்தங்கிய தாலூகாக்கள். அடுத்தபடியாக திருத்துறைப்பூண்டி தாலூகாவில் **Block** டெவலப்மெண்ட் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது. அந்த மாதிரி அமுலாக்கப்பட்ட பிரதேசங்களில் ஏழைகள் வசிக்கும் கிராமங்களும் இருக்கின்றன. அந்த கிராமங்களில், இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் அதிக கஷ்டம் இருக்கிறது. காரணம் என்னவென்றால் அத்திட்டத்திற்காக அங்கிருக்கும் ஏழை ஜனங்கள் 25 சத விகிதம் செலவைக் கொடுக்கவேண்டும். மேலும், அக்கிராம பஞ்சாயத்து போர்டோ அல்லது ஜில்லா போர்டோ அதற்காக செலவாகும் பணத்தில் 25 சத விகிதம்

17th March 1955] [Sri A. K. Subbiah]

கொடுக்கவேண்டும். எங்கள் ஜில்லா போர்டு இந்தப் பணத்தைக் கொடுக்க முன் வருவதில்லை. எங்கள் ஜில்லா போர்டை எடுத்துக் கொண்டால் அப் போர்டில் பணமில்லை என்று அதன் தலைவர் சொல்லிவிட்டார். பஞ்சாயத்து போர்டுகள் இந்த பணத்தைக் கொடுக்கக் கூடிய வருமான முள்ளதாக இல்லை. அங்கிருக்கும் ஏழை ஜனங்கள் சர்க்கார் கேட் கும் 25 சத விகிதம் பணத்தைக் கொடுக்க சக்தியற்றவர்களாக இருக்கி ருர்கள். ஆகவே இம்மாதிரியான, ஏழை மக்கள் வசிக்கும் கிராமங்களில் சர்க்கார் தங்களுடைய செலவிலேயே, இந்த விஸ்தரிப்புத் திட்டம், Block அபிவிருத்தித்திட்டம் போன்றவைகளை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். ஹரிஜனங்களுக்கு இத்திட்டத்தின் மூலம் வசதி கள் செய்து கொடுக்கும் முயற்சியில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஹரி ஜனங்கள் இத்திட்டத்திற்காக ஒரு பகுதி பணத்தை கொடுத்தாகவேண்டு மென்று சொன்னுல் அது முடியாத காரியமாகிவிடும். ஹரிஜனங்களில் பெரும்பாலானவர்கள் பண்ணை விவசாயிகளாக இருக்கிருர்கள். அவர் கள் தாங்கள் உழைப்பினுல் 25 சத விகிதம் அத்திட்டத்தை நிறைவேற்ற கொடுக்கவேண்டுமென்றுல் அதைச் செய்ய அவர்களால் முடியாது. பண்ணைக்காரர்கள் பண்ணை வேலை செய்யவேண்டுமென்று அவர்களை தினமும் நிர்ப்பந்தம் செய்கிருர்கள். பண்ணை வேலை செய்யவில்லை என்றுல் அவர்களுக்கு உணவுக்கு வழியில்லை. இந்த நிலைமையில் அவர்கள் பண்ணை வேலை செய்வார்களா, அல்லது விஸ்தரிப்புத் திட்டத் தின் கீழ் ரோடு வேலை, அல்லது குளம் வெட்டும் வேலையைச் செய் வார்களா என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். அவர்கள் இந்த அபி விருத்தி திட்டத்தில் ஈடுபட்டால் பண்ணை வேலைக்கு வரவில்லை என்று பண்ணையிலிருந்து வெளியேற்றி விடுவார்கள் அல்லது அவர்களுடைய ஊதியத்தைப் பிடித்து விடுவார்கள். ஆகவே இம்மாதிரி கஷ்டங்கள் இருக்கின்றன. குறிப்பாக தஞ்சாவூர் பிரதேசங்களில் ஹரிஜன சேரிகளுக்கு செய்யக்கூடிய அபிவிருத்தி வேலைகள் சகலவற்றையும் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாங்களும் அவ்வபிவி ருத்தித் திட்டக் கமிட்டியில் அங்கம் வகிக்கிறேம். அங்கே இந்த மாதிரி யான யோசனைகளை நாங்கள் சொன்னுல் கலெக்டர் சொல்லுகிருர்கள், ‘ சர்க்காருடைய சட்டப் பிரகாரம், 25 சத விகிதம், அத்திட்டத்தின் செலவுக் காக, அந்தந்த பிரதேச மக்கள்தான் கொடுக்கவேண்டுமென்று இருப்ப தால்தான், ஒன்றும் அவ்வித யோசனையை எடுத்துக் கொள்ளமுடியாது ’ என்கிருர். ஆகவே, அந்த ஏழை ஹரிஜனங்களுக்கும், இன்னும் ஏழை ஜாதி இந்துக்கள் இருக்கக்கூடிய பிரதேசங்களுக்கும் சர்க்கார் செலவிலேயே இம்மாதிரியான அபிவிருத்தி திட்டங்களைக் கொண்டுவரவேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். சில திட்டங்கள் அமுலாக்குவதில் காலதாமதம் ஆகிறது. அவைகளையும் துரிதமாக அமுலுக்குக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சில திட்டங்களை காண்ட்ராக்டுக்கு விடுவதால் அதை சந்தேகிக்கும் நிலைமை வருகிறது. அந்தந்த பிரதேசங்களிலிருக்கும் மக்களிடமே, அவ்வேலைகளை ஒப்படைக்கவேண்டும். அவர்களிடமே அத்திட்டத்திற்கு வேண்டிய ரூபாய்களைக் கொடுத்து அவ்வேலையைச் செய்யச் சொல்ல வேண்டும். மேலே இருக்கும் அதிகாரிகள் அவைகளை கண் காணிக்கவேண் டும். அப்படிக் கில்லாமல், ஒரு கிணறு வெட்டவேண்டுமென்றுல் இரண் டாயிரம் ரூபாய் செலவு செய்ய சாங்ஷன் செய்கிருர்கள். அந்த ரூபாய் களை காண்ட்ராக்டரிடம் கொடுத்து அந்த குறிப்பிட்ட வேலையைச் செய்யச் சொல்லுகிருர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் கிணறு தோண்டவேண்டுமென் றுல், 500 அல்லது 750 ரூபாய்க்குள்ளே, கிணறு தோண்ட முடியும். இந்தக் கிணற்றுக்காக சாங்ஷன் ஆகும் இரண்டாயிரம் ரூபாய் பணத் தில் காண்ட்ராக்டர்கள் சரி பாதிக்குமேல் கொள்ளை யடிக்கிருர்கள். அந்த மாதிரி கொள்ளையடிக்க வசதி செய்துகொள்ள, அங்கிருக்கும் அதிகாரி களுக்கு லஞ்சம் கிஞ்சம் கொடுத்து காண்ட்ராக்ட் எடுத்துக் கொள்ளுகிருர் களோ என்று சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, பிரதேச கிமிட்டிகளிடமே இம்மாதிரி வேலைகளை ஒப்புவிக்கவேண்டுமென்று கோரு கிறேன். இதில் இன்னெரு கஷ்டமும் இருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லா வில் பெரும்பாலான கிராமங்கள், மடாதிபதிகள், கோவில்காரர்கள்,

[Sri A. K. Subbiah] [17th March 1955

இவர்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. அந்த பிரதேசங்களில் பஞ்சாயத்து போர்டுகள் கிடையாது. ஜில்லா போர்டு, அங்கு எந்தவித மான உதவியும் செய்வதில்லை. மடாதிபதிகள் கோவில்காரர்கள்தான் அந்த பிரதேசங்களுடைய அபிவிருத்திக்கு உதவிசெய்யவேண்டும். ஆனல் உண்மையில் அவர்கள் எந்த உதவியும் செய்வதில்லை. இம்மாதிரி யான பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு எந்த விதமான நன்மைகளுக்கும் வழி இல்லாமலிருக்கிறது. இப்பிரதேசங்களை அரசாங்கம், தன் நேரிடை யான அதிகாரத்திற்குள் எடுத்துக் கொள்ளவேண்டும். அல்லது, அரசாங் கம் அம்மடாதிபதிகளையும், கோவில்காரர்களையும், நிர்பந்தம் செய்து, அவ்வபிவிருத்தித் திட்டத்திற்கான பணத்தை வசூல் செய்து அப்பிர தேசங்களிலுள்ள மக்களுக்கு வேண்டிய சலுகைகளை, உதவிகளைச் செய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

" அடுத்தபடியாக இத்திட்ட நடவடிக்கைகளைப்பற்றி ஆங்காங்கு இருக்கும் மக்களுக்கு நல்ல விளம்பரம் செய்யப்படுவதில்லை. ஏதாவது ஒரு திட்டம் நிறைவேற்றியிருந்தாலும் அங்கிருக்கும் மக்களுக்கு அத்திட்டத்தைப் பற்றிய விவரங்கள் தெரிவதில்லை. அத்திட்ட நடவடிக்கை களைப்பற்றி எல்லோருக்கும் தெரிவதற்காக தமிழில் அச்சடித்து ஜனங் களுக்கு விநியோகிக்கவேண்டும். நல்ல முறையில் அதைப்பற்றி பிரசாரமும் செய்யப்படவேண்டும்.

" திருத்துறைப்பூண்டி-வேதாரண்யம் ரோடு போடப் பட்டிருக்கிறது. அந்த ரோடில் பஸ்களும் போகின்றன. இந்த ரோடில் ஓரிடத்தில் இடையிலே, ஒரு பெரிய கால்வாய் ஓடிக்கொண்டிருக்கிறது. அதற்கு பாலம் கட்ட ஒரு ஆண்டு காலமாக நாங்கள் சொல்லிவருகிறோம். அதைக் கட்ட இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. யாரோ ஒரு இன்ஜி னீரைக் கேட்கவேண்டும், அவ்விஞ்ஜினீர் பார்வையிட்டு என்ன சொல்லு கிறர் என்பதைத் தெரிந்து கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கலெக்டர் அவர்கள் சொல்லுகிறார்கள். இந்தப் பாதை மிக மோசமான பாதை. மழை காலத்தில் இவ்வாய்க்காலில் பெரும் வெள்ளம் வருவதால், அந்தப் பாதையில் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. ஆகவே, அந்தப் பாலத்தை இந்த ஆண்டிலேயே கட்டி முடிப்பதற்கு திட்டம் கொண்டுவர, சம்பந்தப்பட்ட இன்ஜினீயருக்கு, சர்க்கார் உத்திரவு பிறப் பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

10–18 a.m. *SRI S. THINAKARASAMY THEVAR :—"கனம் உதவி சபா நாயகர் அவர்களே, என்னைச் சிறிது நேரத்திற்கு முன் கனம் சபாநாயகர் பேச அழைத்த போது சபையில் நான் இல்லாமலிருந்ததற்காக மிகவும் வருந்துகிறேன்.

" நமது மாகாணத்தில் இந்தத் திட்டம் மிகவும் விசேஷமான வெற்றி அடைந்திருக்கிறது. அம்மாதிரியான விசேஷ வெற்றிக்கு இரண்டு காரணங் கள் இருக்கின்றன. ஒன்று அந்தத் திட்டத்தை நிர்வகிக்கும் இலாகாவின் திறமை; அடுத்தாற்போல மக்களுடைய ஒத்துழைப்பு. இந்த இரண்டு காரணங் களினல் தான் அந்தத் திட்டம் இந்த ராஜ்யத்தில் விசேஷ வெற்றியை அடைந்திருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்லிவிடலாம்.

" குறிப்பாக மிகவும் அனுபவம் வாய்ந்த உலகத்தில் நடந்து கொண் டிருக்கும் நுட்பமான விஷயங்கள் எல்லாவற்றையும் உணர்ந்த கனம் பக்தவத்சலம் அவர்கள் இந்த இலாகாவின் பொறுப்பை நிர்வகித்து வருவதே அந்தத் திட்டத்தின் வெற்றிக்கு முக்கியமான காரணம் என்று இந்தச் சபையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

" அடுத்தாற்போல அந்த இலாகாவின் டைரக்டராக இருக்கும் ஸ்ரீ வெங்கடாசலபதி அவர்களும்கூட நல்ல அனுபவம் வாய்ந்தவர். மக்க ளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் மிக்கவர். விடா உழைப் பும், முயற்சியும் உடையவர். அவர் இந்த இலாகாவின் டைரக்டராக இருப்பதும் ஒருபெரிய அனுகூலம் என்பதையும் சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியாது.

17th March 1955] [Sri S. Thinakarasamy Thevar]

" எவ்வளவுக்கெவ்வளவு இந்த திட்டங்களுக்கு மக்களின் ஒத்துழைப்பு கிடைக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு இந்தத் திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக நடந்தேறும் என்று சொன்னால் மிகையாகாது. ஒரு சில பிராந்தியங்களைத் தவிர மற்ற எல்லாப் பிராந்தியங்களிலும் மக்கள் மிகுந்த ஆர்வத்தோடு விசேஷ ஒத்துழைப்பைக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். மக்களின் ஒத்துழைப்புள்ள பிராந்தியங்களில் இந்தத் திட்டங்கள் விசேஷ வெற்றியும் பெற்றிருக்கின்றன.

" இந்தத் திட்டத்தில் முக்கியமாக மூன்று பெரும் பிரிவுகள் இருக்கின்றன. அதாவது சமுதாய நலத்திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம், ஸ்தல அபிவிருத்தித் திட்டம் என்பதாக மூன்று வகையான அம்சங்கள் இருக்கின்றன.

" சமுதாய நலத்திட்டம் என்பது பெரும்பாலும் நீர்வளப்பமுள்ள பகுதிகளில் செய்யப்படுகின்றன. சமுதாய நலத்திட்டம் நடைப் பெற்று வரும் பிரதேசங்களிலுள்ளவர்கள் நல்ல பாசன வசதி உடையவர்கள்.

" ஆனால் தேசீய விஸ்தரிப்புத் திட்டம் பெரும்பாலும் பஞ்சப் பிரதேசங்களில், மானாவாரிப் பிரதேசங்களில் நடைபெற்று வருகின்றன. அந்தப் பிரதேசத்திலுள்ளவர்களில் பெரும்பாலோர் பாசன வசதியற்றவர்கள். ஆகவே சமுதாய நலத்திட்டத்தைக் காட்டிலும், தேசீய விஸ்தரிப்புத் திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டியதே ரொம்பவும் நியாயமாகும். ஆனால் அப்படி நிதி ஒதுக்கப்படவில்லை.

" மானாவாரி, பஞ்சப் பிரதேசங்களில் அமுல் செய்யப்பட்டுவரும் தேசீய விஸ்தரிப்புத் திட்டத்திற்கு அந்தப் பிராந்தியங்களிலுள்ள மக்கள் நிறைய தங்கள் உழைப்பைக் கொடுக்கிறார்கள். ஆகவே இன்னும் கொஞ்சம் அதிகப் பணம் ஒதுக்கி தேசீய விஸ்தரிப்புத் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

" அதோடு அம்மாதிரியான திட்டங்களை மேற்கொள்ளும்போது, அந்தத் திட்டங்களுக்குச் செலவாகும் தொகையில் பாதியை அந்தந்தப் பிரதேச மக்களே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் பஞ்சப் பிரதேசங்களில் உள்ள மக்கள் தேக உழைப்பைக் கொடுக்க தாராளமாக முன் வருகிறார்கள். ஆனால் பண உதவியை அவர்களிடமிருந்து எதிர்ப்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. இருந்தாலும் செலவாகும் மொத்த பணத்தில் கால் பங்கை அந்தந்தப் பிரதேசங்களிலும் மக்கள் உழைப்பின் மூலம் கொடுக்கவேண்டுமென்றும், பாக்கியுள்ள முக்கால் பங்கை சர்க்காரே செலவழிக்க முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்கு மக்கள் உழைப்பின் மூலமாகப் பாதித் தொகையும், சர்க்கார் பாதித் தொகையும் கொடுக்கலாம் என்பதும் என் அபிப்பிராயம். ஆனால் சில பகுதிகளில் அங்காங்குள்ள கலெக்டர்கள் என்ன சொல்லுகிறார் என்றால், இந்த ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆகும் பாதிப் பணத்தை ரொக்கமாக மக்கள் கொடுக்கவேண்டுமென்றும், சர்க்கார் பாதிப் பணம் போட்டு செய்வார்கள் என்றும் சொல்லுகிறார்களாம். இது சரியல்ல. மக்களுடைய பாதிப் பங்கை தங்கள் சரீர உழைப்பின் மூலமாகக் கொடுக்க முன் வந்தாலும் அதை சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே என் அபிப்பிராயம்.

" அடுத்தாற்போல தேசீய விஸ்தரிப்புத் திட்ட பிராந்தியங்களில், அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக ஜில்லா அதிகாரிகள் எல்லாம் ஒன்றுகூடி மாதம் ஒரு முறைகூட்டம் நடத்தி வருகிறார்கள். இது சம்பந்தமான கிராம முன்னேற்றத் திட்டங்களை எல்லாம் அந்தக் கூட்டத்தில் விவாதித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்றும் சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எல்லா இலாகாக்களையும் சேர்ந்த ஜில்லா அதிகாரிகள் ஒன்று கூடி மாதாமாதம் பேசுகின்றார்கள் என்பது உண்மை. பேச்சுத்தான் அந்தக் கட்டத்தில் அதிகமாகப் போய்விட்டதே தவிர தேசீய விஸ்தரிப்புத் திட்டங்களை எப்படி நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டுவருவது என்கிற உருப்படியான யோசனைகள் எதுவும் அக்கூட்டங்

[Sri S. Thinakarasamy Thevar] [17th March 1955

களில் கவனிக்கப் படுவதில்லே யென்பதை நான் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்கு முக்கியமான காரணம் ஒவ்வொரு இலாகா அதிகாரியும் தங்களுடைய இலாகாக்களின் நலனைப் பெரிதாகக் கருதுகின்றார்களே தவிர, இந்த தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தைப் எதோ அடிஷனல் வேலேயாக கருதி ஓய்வு நேரங்களில்தான் பார்பது என்ற மனப்பான்மையோடு வேலே செய்து வருகிறார்கள். அந்த மாதிரியாக அவர்கள் நினைக்க சர்க்கார் விடக்கூடாது. தேசீய விஸ்தரிப்புத் திட்டவேலேயே, அவரவர்களுடைய இலாகாவின் வேலேயை விட முக்கியமான வேலேயாகக் கருதவேண்டுமென்று ஒரு நிபந்தனையைப் போடுவது மிகவும் முக்கியமாகும்.

" மானுவாரி பஞ்சப் பிரதேசங்களில் மின்சாரத்தை துரிதமாக விஸ்தரிக்க வேண்டும். அதோடு அந்த பிரதேசங்களில் மின்சாரத்தை விஸ்தரிக்கும்போது விவசாயிகளுக்குக் கொஞ்சம் சலுகை காண்பிப்பதும் அவசியமாகும். விவசாயப் பகுதிகளில் விவசாயத்திற்கென கொடுக்கப்படும் மின்சார விஸ்தரிப்பு திட்டம் எங்கெங்கு அமுலாக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் அந்த விஸ்தரிப்பு திட்டங்கள் சிக்கனமான முறையில் அதாவது **Special guarantee** திட்டத்தில் விஸ்தரிப்பு திட்டங்களை அமுல் நடத்தாமல் **Tariff guarantee** திட்டத்தில்தான் விஸ்தரிப்பு முறை அமுலாக்கப்படவேண்டும். இல்லேயேல் விவசாயிகள் அதன் மூலம் ஏற்படும் பெரும் துகைபளுவை தாங்கமுடியாது. 5 குதிரை பவருடைய மின்சார மோட்டார் ஒன்றுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 50 மேல் போகாத வரவு இருந்தால்தான் விவசாயிக்கு கட்டுபடியாகும். இல்லேயேல் விவசாயிக்கு நஷ்டம் தான் ஏற்படும். குறிப்பாக ஒரு ஹார்ஸ் பவர் சப்ளே செய்வதாக இருந்தால் காரண்டித் தொகை 50 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. ஐந்து ஹார்ஸ் பவராக இருந்தால் காரண்டித் தொகை 200 ரூபாய் கட்ட வேண்டியதாக இருக்கிறது. சாதாரணமாக ஒரு விவசாயினுடைய வருமானமே 200 ரூபாய் இருக்காது. அவர் 200 ரூபாய் காரண்டித் தொகையைக் கட்டிவிட்டால் பின்னர் அவரால் என்ன செய்ய முடியும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். இது விஷயத்தில் அவர்களுக்கு ஸ்பெஷல் சலுகை காண்பிக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். குறிப்பாக டாரிப் **(Tariff scheme)** காரண்டியாக ஆக்கிவிட்டால் விவசாயி அதிக துகை கட்டவேண்டி வராது. உதாரணமாக 20 கிணற்றுக்கு மின்சாரம் சப்ளே செய்வதன் மூலம் திட்டம் **Special guarantee**-யில் இருந்தால் அதை 40 கிணறுகளுக்கு விஸ்தரிப்பதின் மூலம் **Tariff guarantee** ஆக்கிவிடலாம். இதை கனம் மந்திரி அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" அடுத்தபடியாக திருமங்கலம் தாலுகாவில் தான் இந்த திட்டமே ஆதியில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. அந்தப் பிரதேசத்திலுள்ள மக்கள் விசேஷ ஒத்துழைப்பை அளித்தார்கள். பணத்தாலும், தேகத்தாலும் தங்கள் ஒத்துழைப்பை அளிக்க அந்தப் பிரதேச மக்கள் மிக ஆர்வத்துடன் முன் வந்திருக்கிறார்கள். கல்லுப்பட்டி, வேளாம்பூர் ஆகியவை பல உட்கடையுள்ள கிராமம். அங்கெல்லாம் மின்சார வசதியே கிடையாது. உடனடியாக அந்தப் பிரதேசங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள் பிராந்தியத்திலேயே பெரியாறு மின்சாரத் திட்டம் **(Hydro-electric scheme)** மிக முக்கியமான திட்டமாகும். மதுரை ஜில்லாவிலே உண்மையிலேயே அது நல்ல திட்டமாகும். இதை நிறைவேற்றுவதில் சர்க்கார் விசேஷ கவனம் செலுத்தி வருகிறார்கள். விசேஷ முயற்சியோடு இந்தத் திட்டத்தை எவ்வளவு சீக்கிரமாக நிறைவேற்றமுடியுமோ அந்த அளவுக்கு நிறைவேற்றவேண்டுமென்று சர்க்காருக்கு ஆர்வம் இருக்கிறது. ஆனால், நடைமுறையில் 'பிரேக்' இருந்துகொண்டேயிருக்கிறது. சர்க்கார் என்ன தான் ஆர்வமாக இருந்தாலும் வேலே என்னவோ துரிதமாக நடைபெறுமலிருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லே. முற்போக்கான முறையில் காரியங்கள் நடைபெறுமலிருப்பதற்குக் காரணம் **Departmental delay** என்று தான் நான் நினைக்கிறேன். இந்த இலாகாவில் பழைய ஆட்களுக்கு வருஷா வருஷம்

17th March 1955] [Sri S. Thinakarasamy Thevar]

extension கொடுத்துக்கொண்டிருப்பதுதான் வேலை தாமதமாக நடப்பதற்குக் காரணமாக இருக்குமோ என்னவோ. பெரிய பெரிய ஆபீசர்களுக்கு திருப்பித் திருப்பி 'எக்ஸ்டன்ஷன்' கொடுத்துக் கொண்டிருந்தால் ஆபத்துதான். புதிதாக வந்தால் தான் வேலையில் ஆர்வமும், திட்டத்தைச் சீக்கிரம் நிறைவேற்ற வேண்டுமென்ற உற்சாகமும் இருக்க முடியும். பழைய ஆட்களுக்கு 'எக்ஸ்டென்ஷன்' கொடுக்கும்போது, அவர்களுடைய அனுபவத்தைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்று வழக்கமாகச் சொல்லப்படுகிறது. அந்தப் பொறுப்பை புதிதாக வரும் உத்தியோகஸ்தருக்குக் கொடுத்தாலும் அனுபவமும், திறமையும் தானே சேர்ந்து விடும். புதிதாக ஒருவரைப் போட்டுவிட்டால் வேலை அப்படியே நின்றுபோய்விடுமா? எப்படியும் வேலை நடந்தே தீரும். இன்னும் திறமையாகக்கூட நடக்கும். வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு அதற்குப் பிறகும் ஐந்து வருஷம் வரையில் 'எக்ஸ்டன்ஷன்' கொடுப்பது என்பதைத் தவிர்க்கவேண்டும். ஏதோ அவசியம் எக்ஸ்டன்ஷன் கொடுத்துத்தான் தீரவேண்டுமென்றால் ஒரு வருஷத்திற்குத்தான் கொடுக்கலாமேயொழிய பரம்பரை பாத்தியமாக பல வருஷங்களுக்கு எக்ஸ்டன்ஷன் கொடுப்பதென்பது சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். பெரியாறு மின்சாரத் திட்டம் மிக நல்ல திட்டம். சர்க்கார் அதை ஆர்வத்தோடு சீக்கிரம் நிறைவேற்றவேண்டுமென்று இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது அந்த எண்ணம் நிறைவேறாமலிருப்பதற்கு **department delay** இருந்தால் அதை உடனடியாகத் தவிர்க்கவேண்டும். இது விஷயத்தை சர்க்கார் பரிசீலனை செய்து கூடிய சீக்கிரம் அந்தத் திட்டத்தை அமுல் நடத்தி முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்."

* **Sri M. NARAYANAN NAMBIAR** :—" മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഗ്രാമങ്ങളുടെ സർവ്വതോമുഖമായ അഭിവൃദ്ധിയെ ലക്ഷ്യമാക്കിക്കൊണ്ടാണ് സാമൂഹ്യ വികസനപദ്ധതികൾ ഏർപ്പെടുത്തുന്നതെങ്കിൽ ആ പദ്ധതികൾ ഏർപ്പെടുത്തുന്നതിനുള്ള സ്ഥലങ്ങൾ തിരഞ്ഞെടുക്കുമ്പോൾ ഏററവും പിന്നോക്കം നില്ക്കുന്ന പ്രദേശങ്ങൾക്കു മുൻഗണന നൽകേണ്ടതാണെന്ന് പ്രത്യേകം പറയേണ്ടതായിട്ടില്ലല്ലോ. എന്നാൽ തെക്കൻകർണ്ണാടകജ്ജില്ലയെ സംബന്ധിച്ചിടത്തോളം ഗ്രാമവികസനപദ്ധതികൾ ഏർപ്പെടുത്തുന്നതിന്നു സ്ഥലം തിരഞ്ഞെടുത്തപ്പോൾ പിന്നോക്കം നില്ക്കുന്ന പ്രദേശങ്ങൾക്കു വേണ്ടുവോളം മുൻഗണന നല്കിയിട്ടില്ലെന്നുള്ളതു ഖേദപൂർവ്വം പറയേണ്ടിയിരിക്കുന്നു. തെക്കൻ കർണ്ണാടകത്തിൽ വളരെക്കാലമായി അങ്ങേയററം അവഗണിക്കപ്പെട്ടിരുന്നതും ഏററവും പിന്നോക്കം നില്ക്കുന്നതുമായ പ്രദേശങ്ങളാണ് കാസർഗോട് താലൂക്കിലെ കാസർഗോട്ട്, ഹോസ്ദുർഗ്ഗ്, നീലേശ്വരം എന്നീ ഫർക്കകൾ. ഈ ജില്ലയിലെ ഒരു ന്യൂനപക്ഷ ഭാഷ സംസാരിക്കുന്ന ആളുകളുടെ ദിക്കാണ് മേൽ പ്രസ്താവിച്ച മൂന്നു ഫർക്കകളും. അതിനെ എല്ലാ കാര്യത്തിലും അവഗണിക്കുകയെന്നുള്ളത് ബ്രിട്ടീഷ്കാരുടെ കാലത്ത് നടപ്പുണ്ടായിരുന്ന ഒരു ഏർപ്പാടാണ്. സ്വാതന്ത്ര്യം കിട്ടി, കോൺഗ്രസ്സ് ഭരണം വന്നിട്ടും ആ ഏർപ്പാട് ഇന്നും തുടർന്നുവരികയാണെന്നുള്ളത് ഖേദപൂർവ്വം ഗവർമ്മേണ്ടിനെ ഓർമ്മിപ്പിച്ചുകൊള്ളുന്നു. തെക്കൻ കർണ്ണാടകത്തൽ 1948 ൽ ഫർക്കാഡെവലപ്പ്മെൻറ് സ്കീം ഏർപ്പെടുത്താനായി തിരഞ്ഞെടുത്തതു കമ്പള എന്ന സ്ഥലമാണ്. അതിനു ശേഷം അതിൻെറ ഇടത്തുഭാഗം കിടക്കുന്ന മഞ്ചേശ്വരം തിരഞ്ഞെടുത്തു. അടുത്തതായി അതിനെ തൊട്ടു വലത്തുഭാഗം കിടക്കുന്ന കാസർകോഡ് തിരഞ്ഞെടുക്കേണ്ടതായിരുന്നു. പക്ഷെ അതിനെ ഗവർമ്മേണ്ട് അവഗണിച്ചു. പിന്നീടു തിരഞ്ഞെടുത്തത് കാസർക്കോഡ് താലൂക്കിനു പുറത്തു പുത്തൂർ താലൂക്കിലുള്ള സുള്ളിയാ ഫർക്കയാണ്. ദേശീയവികസനപദ്ധതി വന്നപ്പോൾ നീലേശ്വരം ഫർക്കയിലെ 8 ഗ്രാമങ്ങളെ സുള്ളിയാ ബ്ലോക്കിലുൾപ്പെടുത്തി. മുമ്പു ഫർക്കാ ഡെവലപ്പ്മെൻറ് പദ്ധതി നടപ്പിലിരുന്നപ്പോൾ ആ ഗ്രാമങ്ങളെ പയ്യന്നൂർ ബ്ലോക്കിലാണ് ഉൾപ്പെടുത്തിയിരുന്നതു്. രണ്ടു പ്രത്യേക കലക്ടർമാരുടെ ഭരണത്തിൻ കീഴിലുള്ള പയ്യന്നൂർ ബ്ലോക്കും നീലേശ്വരവുംകൂടി കൂട്ടിച്ചേർത്തിരുന്നതു നിമിത്തം നീലേശ്വരത്തു നടത്താൻ നിശ്ചയിച്ചിരുന്ന പ്രവൃത്തികളൊന്നും വേണ്ടിടത്തോളം പുരോഗമിച്ചില്ല. ദേശീയവികസനപദ്ധതി വന്നപ്പോൾ ഈ എട്ടു ഗ്രാമങ്ങളെ പയ്യന്നൂർ ബ്ലോക്കിൽനിന്നു വേർപെടുത്തി സുള്ളിയാ ബ്ലോക്കിനോടു കൂട്ടിച്ചേർത്തു. നീലേശ്വരവും സുള്ളിയയും തൊട്ടുകിടക്കുന്ന പ്രദേശങ്ങളല്ല. അവ തമ്മിൽ 50–60 മൈൽ അകലമുണ്ടു്. ഇടയ്ക്കു കിടക്കുന്ന കാസർകോഡ്, ഹോസ്ദുർഗ്ഗ് ഫർക്കകളെ ബ്ലോക്കിൽ ഉൾപ്പെ 10-30 a.m.

ടുത്തിയിട്ടില്ല. ഇങ്ങനെ വളരെ അകലെ കിടക്കുന്ന സുള്ളിയാ ബ്ലോക്കുമായി നീലേശ്വരത്തെ കൂട്ടിയിണക്കിയിരിക്കുന്നതുകൊണ്ടു ദേശീയവികസനപദ്ധതിയനുസരിച്ചുള്ള പ്രവൎത്തനങ്ങളും അവിടെ വേണ്ടുവോളം പുരോഗമിച്ചിട്ടില്ല. കാസർകോഡ്, ഹോസ്ദുൎഗ്ഗ് ഫർക്കകളെക്കൂടി ഉൾപ്പെടുത്തി നീലേശ്വരത്തിന് ഒരു പ്രത്യേക ബ്ലോക്ക് അനുവദിക്കാൻ ഗവൎമ്മേണ്ടിനുള്ള തടസ്സമെന്താണെന്ന് മനസ്സിലാക്കാൻ പ്രയാസമായിരിക്കുന്നു. കഴിഞ്ഞ കൊല്ലവും ഞാൻ ഈ പ്രശ്നം ഇവിടെ ഉന്നയിച്ചിട്ടുള്ളതാണ്. ദേശീയവികസനപദ്ധതികളുടെ ചാൎജ്ജ് വഹിക്കുന്ന ബഹുമാനപ്പെട്ട കൃഷിമന്ത്രി കാസർഗോട്ട് വന്നിരുന്നപ്പോൾ ഇക്കാൎയ്യത്തെക്കുറിച്ചു നാട്ടുകാർ അദ്ദേഹത്തോടു നിവേദനങ്ങൾ നടത്തുകയുണ്ടായി. നീലേശ്വരവും കാസർഗോട്ടും ഹോസ്ദുൎഗ്ഗും കൂട്ടിച്ചേൎത്ത് ഒരു പ്രത്യേക ബ്ലോക്ക് അനുവദിക്കേണ്ടതിന്റെ ആവശ്യം അദ്ദേഹത്തിന് ബോദ്ധ്യപ്പെട്ടതായി മനസ്സിലാക്കാൻ കഴിഞ്ഞിട്ടുണ്ട്. കഴിഞ്ഞ ഒക്ടോബറിൽ പുതിയ ബ്ലോക്കുകൾ തിരഞ്ഞെടുത്തപ്പോൾ ഈ സ്ഥലങ്ങളുടെ കാൎയ്യം ഗവൎമ്മേണ്ട് പരിഗണിക്കുമെന്നു നാട്ടുകാർ പ്രതീക്ഷിച്ചിരുന്നു. പക്ഷെ അതുണ്ടായില്ല. അതിനു പകരം കണ്ടാപൂർ താലൂക്കിലെ ചില സ്ഥലങ്ങളാണ് തിരഞ്ഞെടുത്തത്. എല്ലാ വിധത്തിലും വളരെ പിന്നണിയിൽ കിടക്കുന്ന ഹോസ്ദുൎഗ്ഗ് താലൂക്കിനേയും കാസർഗോഡ് താലൂക്കിനേയും ഗവൎമ്മേണ്ട് ഇങ്ങനെ അവഗണിക്കുന്നതു് കഷ്ടമാണ്. അടുത്തുതന്നെ കുറെ പുതിയ ബ്ലോക്കുകൾ തിരഞ്ഞെടുക്കാൻ പോകുന്നുണ്ട്. ആ അവസരത്തിലെങ്കിലും ഈ സ്ഥലങ്ങളെ ഉൾപ്പെടുത്തി നീലേശ്വരത്തേക്കു ഒരു പ്രത്യേക ബ്ലോക്ക് അനുവദിക്കാൻ ഗവൎമ്മേണ്ട് ശ്രദ്ധ വെയ്ക്കുമെന്നു ഞാൻ പ്രതീക്ഷിക്കുന്നു. ആ പ്രതീക്ഷ ബഹുമാനപ്പെട്ട മന്ത്രി നിറവേററുമെന്ന് വിശ്വസിക്കുകയും ചെയ്യുന്നു.

"കാസർഗോഡ് താലൂക്കിൽ ചില കുടിൽ വ്യവസായങ്ങളെല്ലാമുണ്ട്. അവയെല്ലാം ഇന്ന് പ്രോത്സാഹനമില്ലാത്തതുനിമിത്തം നശിച്ചുകൊണ്ടിരിക്കുകയാണ്. ആ പ്രദേശത്തേക്കു ദേശീയവികസനപദ്ധതി വ്യാപിപ്പിക്കുകയാണെങ്കിൽ ഈ കുടിൽവ്യവസായങ്ങളെ ഉദ്ധരിച്ചു അവയ്ക്കു ഒരു നവജീവൻ നൽകാൻ സാധിക്കും. മൺപാത്രനിൎമ്മാണവ്യവസായം, ഇരിമ്പുവ്യവസായം ഓട്ടുവ്യവസായം മുതലായി പല കുടിൽവ്യവസായങ്ങളും അവിടെയുണ്ട്. അവയെല്ലാം ഇന്നു വളരെ മന്ദീഭവിച്ചുകിടക്കുകയാണ്. ഗവൎമ്മേണ്ടിൽനിന്നു ഇവയ്ക്കു യാതൊരു പ്രോത്സാഹനവും കിട്ടുന്നില്ല. കൂടാതെ വളരെയധികം തോടുകളും ചാലുകളുമുള്ള ഒരു പ്രദേശമാണതു്. അത്യാവശ്യമുള്ള പല സ്ഥലങ്ങളിലും പാലങ്ങളില്ലാത്തതുനിമിത്തം ഗതാഗതത്തിന്നു് വളരെ അസൌകൎയ്യങ്ങളുണ്ട്. സ്കൂൾകുട്ടികൾക്കു സ്കൂളിൽ പോകാൻപോലും കഴിയാതെവരുന്നുണ്ട്. ദേശീയവികസനപദ്ധതിയിൽ ഈ സ്ഥലത്തെ ഉൾപ്പെടുത്തുകയാണെങ്കിൽ നാട്ടുകാൎക്കു അത്യാവശ്യമായ പല പദ്ധതികളും നടപ്പിലാക്കാൻ സാധിക്കും. നാട്ടിന്നു ആകപ്പാടെ വലിയ പുരോഗതിയുമുണ്ടാകും. അതുകൊണ്ടു ഈക്കാൎയ്യം ഗവൎമ്മേണ്ട് അനുതാപപൂൎവ്വം പരിഗണിക്കണമെന്നു വീണ്ടും അപേക്ഷിച്ചുകൊള്ളുന്നു.

"ലോക്കൽ ഡെവലപ്പ്മെൻറ് വർക്കുകളുടെ നടത്തിപ്പിനെപ്പററി രണ്ടുവാക്കു് പറയുവാനാഗ്രഹിക്കുന്നു. ലോക്കൽ ഡെവലപ്പ്മെൻറ് പദ്ധതികൾക്കു വേണ്ടിവരുന്ന ചെലവിൻെറ പകുതി നാട്ടുകാർ വഹിക്കണമെന്നാണ് വച്ചിരിക്കുന്നതു്. പഞ്ചായത്തുബോഡുകളുള്ള സ്ഥലങ്ങളിലാണെങ്കിൽ നാലിലൊന്ന് പഞ്ചായത്തുകളും നാലിലൊന്നു ജനങ്ങളും വഹിക്കണം. ഇന്ന് സാമ്പത്തികത്തകൎച്ചകൊണ്ട് നാട്ടുകാൎക്കു അവരുടെ വിഹിതം പണം ഉണ്ടാക്കിക്കൊടുക്കാൻ നിവൃത്തിയില്ലാതെവരുന്നുണ്ട്. തൻമൂലം വളരെ അത്യാവശ്യമുള്ള പല പദ്ധതികളും നടപ്പിലാക്കാൻ ഗവൎമ്മേണ്ടു് തയ്യാറാകുന്നില്ല. തെക്കൻ കന്നാടകത്തെ സംബന്ധിച്ചിടത്തോളം പറയുകയാണെങ്കിൽ ലോക്കൽ ഡെവലപ്പ്മെൻറ് സ്കീമിൽ ഉൾപ്പെടുത്തി പല സ്കീമുകളും ഗവൎമ്മേണ്ട് അംഗീകരിച്ചിട്ടുണ്ടായിരുന്നവെങ്കിലും അടുത്തകാലത്തുമാത്രമാണ് ചിലതെല്ലാം നടപ്പിൽവരുത്തുവാനുള്ള ശ്രമം ആരംഭിച്ചിട്ടുള്ളതു്. ഉദ്യോഗസ്ഥന്മാർ പദ്ധതികളുടെ എസ്റ്റിമേററു താമസിച്ചുണ്ടാക്കിയതുകൊണ്ടു പണി ആരംഭിച്ചിട്ടുള്ളതു് ഡിസെമ്പറിലും ജനുവരിയിലുമൊക്കെയാണ്: മാൎച്ച് മാസത്തിനകം ആ പണികൾ പൂൎത്തിയാക്കാനൊ ബഡ്ജററിൽ കൊള്ളിച്ചിട്ടുള്ള തുകകൾ ചിലവാക്കാനോ സാദ്ധ്യമല്ലാത്ത മട്ടിലാണ് പണികൾ ആരംഭിച്ചിട്ടുള്ളതു്. അതുകൊണ്ടു് ബഡ്ജററിലുള്ള തുക ഒട്ടുമുക്കാലും ലാപ്സായിപ്പോകാനാണ് വഴികാണുന്നതു്. അങ്ങിനെ സംഭവിക്കാതിരിക്കുന്നതിനും ഇക്കൊല്ലം മിച്ചമുള്ള സംഖ്യകൾ അടുത്ത കൊല്ലത്തേക്ക് മാററിവെയ്ക്കുന്നതിനുമുള്ള ഒരു പ്രത്യേക ഏൎപ്പാടു് ബഹുമാനപ്പെട്ട മന്ത്രി ചെയ്യുമെന്ന് ഞാൻ ആശിക്കുന്നു.

17th March 1955] [Sri M. Narayanan Nambiar]

" വടക്കെ മലബാറിൽ ഏററവും പിന്നണിയിൽ നിൽക്കുന്ന ഒരു പ്രദേശമാണ് കുറുമ്പ്രനാട്ട് താലൂക്ക്. ആ പ്രദേശത്തേക്ക് ഒരു ദേശീയ വികസനപദ്ധതി അനുവദിക്കുമെന്ന് കഴിഞ്ഞകൊല്ലം നാട്ടുകാർ പ്രതീക്ഷിച്ചിരുന്നു. പക്ഷെ അതു സംഭവിച്ചില്ല. കുറുമ്പ്രനാട്ട് താലൂക്കിലെ ഏററവും പിന്നണിയിൽ കിടക്കുന്ന പ്രദേശങ്ങളിലേക്ക് ഒരു ബ്ലോക്ക് അടുത്ത തവണയെങ്കിലും അനുവദിക്കണമെന്ന് ബഹുമാനപ്പെട്ട മന്ത്രിയോട്ട് അഭ്യർത്ഥിച്ചുകൊള്ളുന്നു.

" സാർ, ഏററവുമധികം പിന്നണിയിൽ കിടക്കുന്ന കാസർഗോട്, ഹോസ്ദുർഗ്ഗ്, നീലേശ്വരം എന്നീ മൂന്നു ഫർക്കകളിലേയ്ക്കുകൂടി ദേശീയവികസനപദ്ധതി വ്യാപിപ്പിക്കണമെന്ന് ഞാൻ വീണ്ടും അപേക്ഷിക്കുന്നു. അതോടൊപ്പംതന്നെ ഞാൻ ആദ്യം പറയാൻവിട്ടുപോയ ഒരു സംഗതികൂടെ പ്രത്യേകം എടുത്തുപറഞ്ഞുകൊള്ളട്ടെ. ഈ മൂന്നു ഫർക്കകളും മലനാട്ട് ഏരിയയിൽപെട്ടതാണ്. അമ്പതോളം ഗ്രാമങ്ങളും രണ്ടു ലക്ഷത്തിൽപരം ജനങ്ങളുമുള്ള കാസർഗോട്ട് താലൂക്ക് മുഴവൻ ദേശീയ വികസനപദ്ധതിയിൽ ഉൾപ്പെടുത്തുകയാണെങ്കിൽ ആ നാട്ടിനും ജനങ്ങൾക്കും വളരെ അഭിവൃദ്ധിയുണ്ടാകുമെന്ന് മാത്രമല്ല വളരെ കാലമായി അവഗണിക്കപ്പെട്ടിരുന്ന ഒരു പ്രദേശത്തോട്ട് വൈകിയിട്ടാണെങ്കിലും നീതി ചെയ്തു എന്ന ആശ്വാസം ഗവർമ്മേണ്ടിനുമുണ്ടാകും. നീലേശ്വരം ബ്ലോക്കിലെ ഗ്രാമസേവകന്മാരെ വേണ്ടവിധത്തിൽ നിയന്ത്രിക്കാനും അവരുടെ പ്രവൃത്തികളുടെ മേൽനോട്ടം വഹിക്കാനും സുള്ളിയാ ബ്ലോക്കിലുള്ള മേലുദ്യോഗസ്ഥന്മാർക്ക് സാദ്ധ്യമല്ലാത്ത നിലയിലാണ് ഇന്നിരിക്കുന്നത്. അതുകൊണ്ട് നീലേശ്വരത്തെ പ്രവർത്തനങ്ങൾ വളരെ മോശമായ ഒരു നിലയിലാണ് നടന്നുകൊണ്ടിരിക്കുന്നത്."

*SRI S. R. ARUMUGAM :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதலில் ஒரு வேண்டுகோள். என்னைக் கூப்பிடும்போது 'ஸ்ரீ எஸ். ஆர். ஆறுமுகம் (கோயமுத்தூர்)' என்று முதலில் சொல்லி விட்டால் நலமாக இருக்கும். ஏனென்றால் என்னுடைய பெயருக்கும் ஸ்ரீ ஆர். எஸ். ஆறுமுகம் என்ற அங்கத்தினரின் பெயருக்கும் அடிக்கடி பத்திரிகையில் தவறுதலாக வந்துவிடுகிறது. ஆகவே, என்னைப் பேச தாங்கள் கூப்பிடுவதற்கு முன்பு 'ஸ்ரீ எஸ். ஆர். ஆறுமுகம் (கோயமுத்தூர்)' என்று கூப்பிட்டுவிட்டால் தகராறு இருக்காது என்று தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். 10-40 a.m.

" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எப்பொழுது பார்த்தாலும் க்ஷேமநல சர்க்காரைப்பற்றியும், சோஷலிசப் பாணியில் சமுதாயத்தை அமைப்பது பற்றியும் எல்லோரும் பேசிக்கொண்டிருக்கிறோம். க்ஷேமநல சர்க்கார் என்றால் என்ன? எந்த ஒரு நாட்டில் வறுமை இல்லையோ, எழுத்தறிவின்மை இல்லையோ, சுரண்டல் இல்லையோ அங்குதான் க்ஷேமநல சர்க்கார் இருக்கிறது என்று சொல்லப்படும். க்ஷேமநல சர்க்காரை உருவாக்கு வதற்காகத்தான் நம்முடைய மத்திய சர்க்கார் ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஐந்தாண்டு திட்டங்களில் எல்லாவித திட்டங்களும் அடங்கியிருக்கின்றன. ஆனால், அதற்குத் தேவையான பணம் மட்டும் போதாமல் உள்நாட்டில் வரியின் மூலமும், கடன் வாங்குவதன் மூலமும், வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்குவதன் மூலமுமாகவும் பணத்தை தயார் செய்துகொண்டு வைத்திருந்தாலுங்கூட ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பிட்டிருக்கக்கூடிய வேலைகளையெல்லாம் நிறைவேற்று வேண்டிய தொகையில் பாதித்தொகைதான் வசூலாகிக்கொண்டிருக்கிறது. மற்ற பாதித்தொகையை எந்த முறையில் வசூலிப்பது என்று திட்டம் தயாரித்தவர்கள் யோசனை செய்தார்கள். ஆண்டவனருளால் நம் நாட்டில் ஜனத்தொகை குறைவேயில்லை. பாதித் தொகையை ஜனங்களுடைய உழைப்பின் மூலமாக பெறலாமென்பதற்காக ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பித்து அது நடைபெற்று வருகிறது.

" ஐந்தாண்டு திட்டத்தில் சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசீய வளர்ச்சித் திட்டங்கள், ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவைகள் இடம் பெறுகின்றன. அபிவிருத்தித் திட்டங்களுக்கு மக்களுடைய ஒத்துழைப்பு மிகவும் முக்கியமாகும். மக்களுடைய ஒத்துழைப்பின் மூலமாக இப்படிப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றமுடியும். மக்களுக்கும் சர்க்காருடைய அபிவிருத்தித் திட்டங்களில் ஒரு நம்பிக்கை ஏற்படும். பின்னால் ஏற்படக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை பொது மக்களுடைய திட்டங்கள் என்று சொல்வதற்கு அவர்களுக்கு ஒரு உறுதியிருக்கிறது.

[Sri S. R. Arumugam] [17th March 1955

"அங்கத்தினர்கள் அவரவர்களுடைய ஜில்லாக்களைப்பற்றி பேசும் போது, தங்களுடைய ஜில்லாக்களில் ஏழைகள் இருக்கிறார்கள், ஆகவே, பாதித் தொகை கொடுக்கமுடியாமலிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். என்னுடைய ஜில்லாவாகிய கோயமுத்தூர் ஜில்லாவில் 40 ஆலைகள் இருக்கின்றன. சிமிட்டி உற்பத்தித் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. இத்தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் சுமார் 75 ஆயிரம் பேர்களுக்குமேல் இருப்பார்கள். பெரும்பாலும் கிராமப்பகுதி களிலிருந்து வரக்கூடியவர்கள். மாதம் சராசரி ஐந்து நாட்களுக்காவது அவர்களுக்கு விடுமுறை கிடைக்கலாம். மாதத்தில் ஐந்து நாட்கள் விடு முறை நாட்கள் இருந்தாலும் அதில் ஒரு நாளாவது கிராம அபி விருத்தியில் அவர்கள் செலவிடுவார்களானால் கிராமம் முன்னேற்றமடை யும் என்பதில் சந்தேகம் இல்லை. ஜனங்களிடமிருந்து எதிர்பார்க்கக்கூடிய பணத்திற்குக் பதிலாக உழைப்பையும் ஏற்றுக்கொள்ளலாம் என்று திட் டம் இருக்கிறது. தொழிளாலர்கள் கிராம அபிவிருத்தியில் மாதத்திற்கு ஒரு நாளாவது ஈடுபடுவார்களானால் தொழிலாளர் உலகத்திற்கும் நல்லது, பொதுஜனங்களுக்கும் நல்லது, சர்க்காருக்கும் நல்லது. நான் இங்கிருக் கக்கூடிய தொழிலாளர் தலைவர்களெல்லோரையும் கேட்டுக்கொள்ளு கின்றேன்: இனிமேலாவது தங்கள் தங்களுடைய தொகுதிகளிலுள்ள தொழிலாளர் நண்பர்களை மாதம் ஒரு நாள் கிராம சேவையில் ஈடு படுவதற்கு ஊக்குவிக்கவேண்டுமென்றும், அதற்கான முயற்சியை அவர் கள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

"சமூக நலத்திட்டம் குறிப்பிட்ட டெவலப்மெண்ட் பிளாக்குகளில் வேலை செய்து வருகின்றது. சமுதாய நலத் திட்டத்தில் ஒரு கிராமம் தன்னுடைய சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ளுவதற்குப் போதுமான வசதிகள் இருக்கின்றன. கிராமங்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்வதற்கு ஆங்காங்கு அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். சமுதாய நலத் திட்ட டெவலப்மெண்ட் பிளாக்கில் இருக்கக்கூடிய அதிகாரிகள் நல்ல முறையில் வேலை செய்து வருகின்றார்கள். அந்த பிளாக்குகளைப்போல் இன்னும் அதிக இடங்களில் பரவவேண்டுமென்று எங்கள் ஜில்லாவில் அனேக கிராமத்தவர்கள் ஆசைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

"தேசீய விஸ்தரிப்புத்திட்டம் இப்பொழுது நல்ல முறையில் வேலை செய்து வருகின்றது. குறிப்பாக புஞ்சைப் பிரதேசத்திற்கு நன்மை அளித் திருக்கிறது. பல்லடம் தாலூகா தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கு முன்னால் மோசமான நிலைமையில் இருந்தது. ஆனால், தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தில் பல்லடம் தாலூகாவைச் சேர்த்துக்கொண்ட தற்குப் பின்னால் பழைய மோசமான நிலைமை மாறி புத்துணர்ச்சி பெற்று நல்ல நிலைமைக்கு இப்பொழுது திரும்பியிருக்கிறதென்று சொன் னால் அது மிகையாகாது. சமுதாய அபிவிருத்தித் திட்டங்களும், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்களும் எந்தெந்த பிரதேசங்களில் நடைபெறுகின் றனவோ அந்தந்த பிரதேசங்கள் நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்து வருகின்றன. மேற்சொன்ன இரு திட்டங்களின் கீழ் வராத பிரதேசங் களும் அபிவிருத்தி அடையவேண்டுமென்பதற்காக நம்முடைய சர்க்கார் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தத் திட் டமும் கிராம அபிவிருத்திக்கு மகத்தான சேவை செய்திருக்கிறதென்றால் அது மிகையாகாது. எங்களுடைய தாலூகாவில் ரோடு வசதி இல்லாத கிராமங்கள் இருக்கின்றன; ஆஸ்பத்திரி வசதி இல்லாத கிராமங்கள் இருக்கின்றன; பள்ளிக்கூடம் இல்லாத கிராமங்களும் எத்தனையோ இருக் கின்றன. அம்மாதிரி கிராமங்கள் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு அபிவிருத்தி அடையும்படிச் செய்ய வேண்டு மென்ற நோக்கம் சர்க்காருக்கு இருக்கிறதென்பதை தெரிந்து கொள்ளுகி றோம். நம்முடைய சர்க்கார் கிராம அபிவிருத்திக்காக எவ்வளவு அதிக மான ஊக்கம் எடுத்துக்கொண்டு வருகிறார்களோ அதே மாதிரி எங்கள் ஜில்லா கலெக்டராக இருக்கும் ஸ்ரீ நம்பியார் அவர்கள் சர்க்காரின் திட்டங்களை எங்கள் ஜில்லாவில் நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சியை நாங்கள் இந்தச் சமயத்தில் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவர் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று, அந்தந்த கிராமத்திற்குத்

17th March 1955] [Sri S. R. Arumugam]

தேவையான காரியங்களைத் தெரிந்துகொள்ளுகிறார். அந்தந்தக் கிராமத் தேவையை அப்போதைக்கப்போது அவருக்கு எழுதியனுப்புமாறு கேட்டு, அவைகளை உடனுக்குடன் கவனிப்பதாகவும் சொல்லிவருகிறார். கிராமங்களிலிருந்து எழுதி வந்தவுடனே அவைகளை உடனே கவனித்து, அந்த ஸ்தலத்திற்கு நேரில் சென்று அந்தக் கிராமத்திற்குத் தேவையானதை உடனடியாகச் செய்து வருகிறார். ஆகையால் அவர்களுடைய சேவையை நான் இந்தச் சமயத்தில் பாராட்டுவது என்னுடைய கடமையென்றுநான் நினைக்கிறேன்.

" அடுத்தபடியாக, **Community Project** திட்டம், தேசிய விஸ்தரிப்புத் திட்டம், ஸ்தல அபிவிருத்தி திட்டம் ஆகிய திட்டங்கள் இருக்கக் கூடிய இடங்களில், மாணவர்களையும் அந்த வேலைகளில் ஈடுபடுத்துவது மிகவும் அவசியமானது. மாணவர்கள் தங்கள் படிப்பு காலம் முடிந்த பிறகு, சும்மா வேலையில்லாமல் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் தொடர்பு இல்லாமல் போகிறது. காலேஜ் படிப்பு படித்த மாணவர்களுக்கு தகப்பனை கண்டால் பிடிக்காத நிலையிலிருக்கிறது. இதற்குக் காரணம் நமது கல்வியின் தரம் அம்மாதிரி இருக்கிறது. இந்த மாதிரியான தேசிய அபிவிருத்தி திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்தினால் அவர்களுக்கு தேசிய மனப்பான்மை ஏற்படுவதுடன், பொது மக்களுடன் பழக சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இப்போது சர்க்கார் உத்தியோகங்களுக்கு சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்தல் நடைபெறுகிறது. அப்படி தேர்ந்து எடுக்கப்படும் நபர்களுக்கு, **Community Project, National Extension Service Scheme** இவைகள் இருக்கக் கூடிய ஸ்தலங்களில் குறைந்தது ஆறு மாத காலம் வேலை செய்த பிறகு தான் உத்தியோகம் கொடுக்கப்படும் என்ற நிபந்தனை போடுவது அவசியமாகும். சர்க்கார் இதை கவனித்து, அம்மாதிரி செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். 10-45 a.m.

" அடுத்தபடியாக எங்களுடைய தாராபுரம் தாலூகாவில் பல்லடத்தில், பூமியிலிருந்து பலவித நல்ல கற்கள் கிடைக்கின்றன. அவைகளை எந்த முறையில் உபயோகப்படுத்துவது என்று யாருக்கும் தெரியாமலிருக்கிறது. ஏதோ சில சமயங்களில் வியாபாரிகள் வருகிறார்கள். ராத்தல் கணக்கில் அவைகளை வாங்கிக்கொண்டு போகிறார்கள். அந்த கற்களின் மதிப்பு எவ்வளவு யிருக்குமென்று ஒருவருக்கும் தெரியவில்லை. தேசீய விஸ்தரிப்பு திட்டம் நடைபெறுகிற எங்களுடைய தாலூகாவில், சர்க்கார் இந்த கற்கள் சம்பந்தமான ஒரு **Pilot Scheme**-ஐ ஏற்படுத்தி, இந்த விலை உயர்ந்த கற்களை சேகரித்து, ஆராய்ச்சி செய்து கூட்டுறவு முறையில் **processing** செய்ய முயற்சி எடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அடுத்தபடியாக தேசீய விஸ்தரிப்பு திட்டத்தில் பஞ்ச பிரதேசங்களுக்கு அதிகப்படியான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. எங்கள் தாலூகாவில் உள்ள இந்த மாதிரி பஞ்ச பிரதேசங்களில் ஏரிகளும், குட்டைகளும், குளங்களும் மிகச் சிறிய அளவில் இருக்கின்றன. அவைகளைக் கட்டவேண்டுமென்று விண்ணப்பம் போடுகின்றோம். அப்படிப் போடும்போது, அந்த திட்டத்திற்கு ஏதாவது ஒரு ஆட்சேபணை இருந்தால் கூட, திட்டத்தை கைவிட்டு விடுகிறார்கள். இந்த மாதிரியாக நாலு வருஷங்களாக ஒரு திட்டம் கைவிடப்பட்டுக்கொண்டு வருகிறது. பல்லடம் தாலூகாவில் ஒரு கிராமத்தில் திட்டம் போடப்பட்டு கைவிடப்பட்டுக்கொண்டு வருகிறது, இதுபற்றி விவசாய மந்திரி அவர்களிடம் சொல்லியிருக்கிறோம். யாரோ ஒருவர் ஆட்சேபணை செய்தால் திட்டத்தை கைவிடுவது சரியல்ல என்பது என் அபிப்பிராயம். கனம் மந்திரி அவர்கள் தயவு செய்து இதை நேரிடையாக கவனித்து, அந்த திட்டத்தை பூர்த்தியடையச் செய்ய ஒரு முயற்சி எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

" தேசீய விஸ்தரிப்புத் திட்டம் **Community Project** திட்டம் இருக்கக் கூடிய **area**-க்களில் ஹரிஜனங்களுக்கு ஏதோ நன்மையிருப்பதாக தெரிகிறதே தவிர, குறிப்பாக யாதொரு நன்மையுமில்லை. ஹரிஜன சமூகம் முன்னுக்கு வரவேண்டுமென்றால் ஹரிஜனப் பெண்கள்

[Sri S. R. Arumugam] [17th March 1955

அதிகமாக படிக்க வேண்டும். இந்த **Community Project** திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் இவைகள் இருக்கக்கூடிய **area**-க்களில் மாதர் நல இலாகா என்று ஒன்றிருக்கிறது. அந்த இலாகாவில் இருக்கக் கூடியவர்கள் சாயந்திர வேளையில் ஹரிஜனப் பெண்களுக்கு படிப்பு சொல்லி கொடுக்க வேண்டும். ஹரிஜன பெண்கள் பள்ளிக்கூடங்களுக்கு சரியாக வருவதில்லை என்று பொதுவாக புகார் சொல்லப்படுகிறது. ஹரிஜன மக்கள் பள்ளிக்கூடங்களுக்கு வருமாறு ஏதாவது ஒரு தூண்டுதலான காரியம் இருந்தால்தான் வந்து படிப்பார்கள். அதற்காக நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். அதாவது, பள்ளிக்கூடத்திற்கு வரும் ஹரிஜனப் பெண்களுக்கு ஆறு மாதத்திற்கு ஒரு தடவை ஒரு புடவையும், ஆண்களுக்கு ஒரு வேஷ்டியும் குழந்தைகளுக்கு ஒரு **trouser**-ம் சட்டையும் கொடுத்தால், இன்னும் அதிகமாக ஹரிஜன மக்கள் படிப்பதற்கு முன் வருவார்கள். எனக்குத் தெரிந்த ஊர்களில் இந்த மாதிரி பரிசுகள் கொடுப்பதால், ஹரிஜன மக்கள் அதிகமாகஅங்கு படிக்க முன் வந்திருக்கிறார்கள். ஆகையால் **National Extension Service** திட்டம் நடக்கக்கூடிய இடங்களிலாவது இந்த யோசனையை அமுல் நடத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக தேசீய விஸ்தரிப்பு திட்டம் இருக்கக்கூடிய இடங்களுக்கு கண்டிப்பாக மின்சார வசதி உடனடியாக கொடுக்கவேண்டும். அதற்கும் ஐந்து வருஷ திட்டம் என்று போடுவதில் பிரயோஜனமில்லை. இந்த விஸ்தரிப்பு திட்டங்கள் இருக்கக்கூடிய இடங்கள் எல்லாம் மாதிரி பிளாக்குகளாக அமைய வேண்டும். எல்லா விதத்திலும் அவை சுய தேவையை அடைய வேண்டும். தவிரவும் இப்போது இருக்கக்கூடிய **Current charge** குறைக்கப்படவேண்டியது மிகவும் முக்கியமானது. அதையும் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்."

10-50 a.m. **Sri K. MADHAVAN NAMBIAR** :—"മിസ്റ്റർ ഡെപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, പിന്നോക്കം നിൽക്കുന്ന പ്രദേശങ്ങളെ അഭിവൃദ്ധിപ്പെടുത്തുന്നതിന്നുവേണ്ടി കമ്മ്യൂണിററി പ്രോജക്ടുകൾ, ദേശീയവികസനപദ്ധതികൾ മുതലായവ പ്രയോജനപ്പെടുന്നുണ്ടെന്നുള്ളതിന്ന് സംശയമില്ല. അവ നാട്ടിൻെറ നന്മയ്ക്ക് ആവശ്യവുമാണ്. പക്ഷെ ഈ പദ്ധതികളുടെ പ്രവൃത്തിസമ്പ്രദായത്തിൽ ഒരു മാററം കൂടിയേ തീരൂ. 'കാൽ പണത്തിൻെറ പൂച്ച അരപ്പണത്തിൻെറ നെയ്യ് കുടിച്ചു' എന്നു പറഞ്ഞമാതിരിയാണ് ഇന്നത്തെ കമ്മ്യൂണിററി പ്രോജക്ടുകളിലെ പ്രവർത്തനം. പാലക്കാട്ട് പ്രോജക്ടിനെ ഉദാഹരണമായെടുത്തുകൊണ്ട് ഒന്നുരണ്ട് കാര്യങ്ങൾ ഞാൻ ചൂണ്ടിക്കാണിക്കാം. റോഡു വെട്ടുന്നതിനും, വളക്കുഴികൾ നിർമ്മിക്കുന്നതിന്നും ഹൈസ്കൂൾ വിദ്യാർത്ഥികളെ ഉപയോഗിക്കുക പതിവുണ്ട്. വിദ്യാർത്ഥികളെ സേവനം ചെയ്യുവാൻ പരിശീലിപ്പിക്കലാണ് ഇതുകൊണ്ടു് ഉദ്ദേശമെങ്കിൽ സ്വാഗതാർഹംതന്നെ. പക്ഷെ ഉദ്ദേശിച്ച ഫലമല്ല ഇതിൽ കാണുന്നതു്. 200 വിദ്യാർത്ഥികൾ 20 ദിവസം അവിടെ ക്യാമ്പു ചെയ്തു എന്നുവെയ്ക്കുക. ക്യാമ്പ് ചെലവിന്നുവേണ്ടി ദിവസമൊന്നിന്ന് ആൾക്കു 2 ക. വീതം ചെലവാക്കുന്നുണ്ടു്. ഇതു് തികച്ചും വിദ്യാർത്ഥികൾക്കു് ലഭിക്കുന്നുമില്ല. ദിവസം രണ്ടു മണിക്കൂർ വീതമാണ് ഇവർ ജോലി ചെയ്യുന്നതു്. ഇരുപതു് ദിവസത്തേക്കു് 200 വിദ്യാർത്ഥികൾക്കു് ക്യാമ്പ് ചിലവിന്നായി 8,000 ക. ആവുന്നുണ്ടു്. ഒന്നേകാലും ഒന്നരയും ഉറുപ്പിക കൂലിക്കു് എത്ര തൊഴിലാളികളെ വേണമെങ്കിലും കിട്ടും. രണ്ടു് മണിക്കൂറിന്ന് 2 ക. വീതം ചെലവു ചെയ്തു വിദ്യാർത്ഥികളെക്കൊണ്ടു് റോഡു വെട്ടിക്കുന്നതിനു പകരം തൊഴിലാളികളെക്കൊണ്ടു് ചെയ്യിച്ചിരുന്നെങ്കിൽ അതിൻെറ അഞ്ചിരട്ടിയോ പത്തിരട്ടിയോ ജോലി നടത്താൻ സാധിക്കുമായിരുന്നു. ഇതൊരു ക്യാമ്പിൻെറ സംഗതിയാണ്. ഇതുമാതിരി പല ക്യാമ്പുകളും പ്രവർത്തിച്ചിട്ടുണ്ടു്. മറെറാരു സംഗതി കഴിഞ്ഞ കൊല്ലത്തിൽ കൃഷി ഡിപ്പാർട്ടുമെൻറിൽനിന്ന് 10 ലക്ഷം സെസ്ബേനിയ നട്ടുപിടിപ്പിച്ചിട്ടുണ്ടെന്ന് പറയുന്നു. കമ്മ്യൂണിററി പ്രോജക്ടുകാരും 10 ലക്ഷം സെസ്ബേനിയ നട്ടുപിടിപ്പിച്ചിട്ടുണ്ടെന്ന് അവകാശപ്പെടുന്നു. രണ്ടുംകൂടെ 20 ലക്ഷം സെസ്ബേനിയ കാണേണ്ടതാണ്. പക്ഷെ പത്തു ലക്ഷമേ ആകെക്കൂടി കാണുന്നുള്ളൂ. ബാക്കി പത്തു ലക്ഷം എവിടെ പോയെന്നറിയുന്നില്ല. അതിന്നുശേഷമാണ് കൃഷി ഡിപ്പാർട്ടുമെൻറിൻെറ പ്രവർത്തനം അവിടെ ഇല്ലാതായതു്.

17th March 1955] **[Sri K. Madhavan Nambiar]**

"റോഡുകൾ നിർമ്മിക്കുന്നതിന് 50 ശതമാനം ചെലവ് ജനങ്ങളുടെ സംഭാവനയാണെന്നാണ് വപ്പ്. പക്ഷെ യഥാർത്ഥത്തിൽ നടക്കുന്നതെന്താണെന്ന് അന്വേഷിച്ചാൽ മനസ്സിലാവും ഗവൺമെണ്ട് ചെലവാക്കുന്ന പണംകൊണ്ടു മാത്രമാണ് റോഡുപണി നടത്തുന്നതെന്ന്. ജനങ്ങളുടെ സംഭാവന പിന്നെ എന്തിന്? ഇതിന്റെ കമ്മിററിതന്നെ ശരിയായ രീതിയിലല്ല പ്രവർത്തിച്ചുകൊണ്ടിരിക്കുന്നത്. ജനങ്ങളും ജനപ്രതിനിധികളുമായി കൂടിയാലോചിച്ചുകൊണ്ടല്ല സ്കീമുകൾ തയ്യാറാക്കുന്നത്. ചെലവിന്റെ കണക്കുകൾ ഗവൺമെണ്ട് ശരിയായി പരിശോധിക്കുന്നില്ല. ജനങ്ങളെ അറിയിക്കുന്നുമില്ല. അതൊരു രഹസ്യസംഗതിയായിട്ടാണ് കാണുന്നത്. അതുകൊണ്ടു പല കൃത്രിമങ്ങളും നടക്കുന്നുണ്ടെന്നു വിചാരിക്കാനേ ന്യായം കാണുന്നുള്ളു. മാത്രമല്ല ജനങ്ങളുടെ സഹകരണവും താല്പര്യവും ഒന്നിനൊന്നു കുറഞ്ഞുവരുന്നതായിട്ടാണ് കാണുന്നത്. ഇത്തരം പദ്ധതികൾ നടപ്പിൽവരുത്തുമ്പോൾ, വിശേഷിച്ചും ജനങ്ങളുടെ സഹകരണത്തോടുകൂടി അവ നടപ്പിലാക്കണമെന്ന് ഗവൺമെണ്ട് ആഗ്രഹിക്കുന്നുണ്ടെങ്കിൽ ജനങ്ങളുമായും ജനപ്രതിനിധികളുമായും കൂടിയാലോചിച്ചിട്ടുവേണം പദ്ധതികൾ അംഗീകരിക്കാൻ.

"വടക്കേ മലബാറിലെ ലോക്കൽ ഡവലപ്പ്മെന്റ് പദ്ധതികളുടേയും ദേശീയവികസനപദ്ധതികളുടേയും നടത്തിപ്പു നോക്കിയാൽ പല തകരാറുകളും കൃത്രിമങ്ങളും നടക്കുന്നതായി കാണാൻ സാധിക്കും. അവിടെ ധാരാളം റോഡുകൾ വെട്ടിയിട്ടുണ്ടെങ്കിലും അവയെല്ലാം ഉപയോഗശൂന്യമായി കിടക്കുകയാണ്. ഒരു കൊല്ലം കഴിഞ്ഞാലും ആ റോഡുകൾ കേടുപാടുകൾ തീർത്ത് നന്നാക്കിയിടുക എന്നൊരേർപ്പാടില്ല. അതുകൊണ്ടാണ് ആ റോഡുകളെല്ലാം ഉപയോഗശൂന്യമായിപ്പോയിട്ടുള്ളത്. വളക്കുണ്ടു കഴിച്ചു, കക്കൂസ് നിർമ്മിച്ചു എന്നൊക്കെയുള്ള റിപ്പോർട്ട് വെറും ബോഗസ്സ് റിപ്പോർട്ടുകളാണ്. ഈ പദ്ധതികളുടെ നടത്തിപ്പ് ഡിസ്ട്രിക്ട് ബോഡുകൾമുഖേനയും പഞ്ചായത്തുകളുള്ള ദിക്കുകളിൽ അവ മുഖേനയും നടപ്പിൽ വരുത്തണമെന്നാണ് ഞാൻ പറയുന്നത്. മലബാറിലേക്ക് മാററിവച്ചിരുന്ന 5 ലക്ഷം ഉറുപ്പിക, സ്കീമുകൾ ഇല്ലാത്തതുനിമിത്തം ചെലവാക്കാൻ സാധിച്ചിട്ടില്ല, അത് ലാപ്സാവാൻ പോവുകയാണ് എന്നു ബഹുമാനപ്പെട്ട മന്ത്രി പറഞ്ഞതായി എന്റെ ഒരു സ്നേഹിതൻ ഇവിടെ പറഞ്ഞു. എന്തുകൊണ്ടാണ് സ്കീമുകൾ ഇല്ലാതെ വന്നതെന്നു ചോദിച്ചാൽ ഗവൺമെണ്ട് ജനങ്ങളുമായും ജനപ്രതിനിധികളുമായും കൂടിയാലോചിക്കാത്തതുകൊണ്ടാണെന്നുള്ളത് തർക്കമററ സംഗതിയാണ്. താസിൽദാർമാർക്കാണ് ഈ പദ്ധതികളുടെ നടത്തിപ്പിന്റെ മുഴുവൻ ഉത്തരവാദിത്വവും. അവർക്ക് വേറെ വേണ്ടുവോളം ജോലിയുണ്ട്. അതുകൊണ്ട് പദ്ധതികളെപ്പററി ശരിയായി അന്വേഷിക്കാനൊ നടക്കുന്ന പണികളുടെ മേൽനോട്ടം വഹിക്കുവാനൊ സാധിക്കുന്നില്ല. ആ ഒരൊററ കാരണംകൊണ്ടാണ് സ്കീമുകൾ ഇല്ലാതെ വന്നതും പണം ലാപ്സാവാൻ പോകുന്നതും. അതുകൊണ്ട് പഞ്ചായത്തു ബോഡുകളുടേയും ഡിസ്ട്രിക്ട് ബോഡുകളുടെയും ചുമതലയിൽ ഈ പ്രവൃത്തി നടത്തിച്ചാൽ ഇതു കൂടുതൽ നന്നായി നടത്താൻ സാധിക്കുമെന്നാണ് എന്റെ വിശ്വാസം. ബഹുമാനപ്പെട്ട മന്ത്രി അതേക്കുറിച്ചു കാര്യമായി ആലോചിക്കുമെന്നു ഞാൻ പ്രതീക്ഷിക്കുന്നു. സ്കീമുകൾ പൂർത്തിയാക്കുന്നതിന്നുള്ള കാലാവധിയും വർദ്ധിപ്പിക്കണം. അടുത്തുതന്നെ പതിനാല് ദേശീയവികസന ബ്ലോക്കുകൾ കമ്മ്യൂണിററി പ്രോജക്കുകളായി മാററാൻ പോവുകയാണെന്ന് ബഹുമാനപ്പെട്ട ധനകാര്യമന്ത്രിയുടെ ബഡ്ജററ് പ്രസംഗത്തിൽ പറഞ്ഞിട്ടുണ്ട്. ആ കൂട്ടത്തിൽ പയ്യന്നൂർ, മട്ടന്നൂർ, കൂത്തുപറമ്പ്, മാടായി എന്നീ ബ്ലോക്കുകൾ ഒരു കമ്മ്യൂണിററി പ്രോജക്ടാക്കി മാററുമെന്ന് ഞാൻ പ്രതീക്ഷിക്കുന്നു. മട്ടന്നൂർ, കൂത്തുപറമ്പ്, മാടായി, പയ്യന്നൂർ മുതലായ ഫർക്കകളിൽ ഇന്നുതന്നെ ദേശീയവികസനപദ്ധതിയിൽ ഉണ്ട്. അതു കമ്മ്യൂണിററി പ്രോജക്ടാക്കി മാററണം. ഈ ഫർക്കകൾ വളരെ പിന്നോക്കം നിൽക്കുന്ന സ്ഥലങ്ങളാണ്. അവയ്ക്കു മദ്ധ്യത്തിലായിട്ടാണ് ഇരിക്കൂർ ഫർക്ക സ്ഥിതി ചെയ്യുന്നത്. ഇരിക്കൂർ ഫർക്കയെ പയ്യന്നൂർ ബ്ലോക്കിൽ ഉൾപ്പെടുത്തിയിട്ടില്ല. വ്യവസായങ്ങളൊന്നും ഇവിടങ്ങളിലില്ല. പറയത്തക്ക കുടിൽവ്യവസായങ്ങൾ പോലും അവിടെയില്ല. കൃഷിയും വളരെ മോശമാണ്. അഞ്ചോ ആറോ മേനിയിൽ കൂടുതൽ അവിടെ വിളയുണ്ടാകുന്നില്ല. മററ് ഏത് കാര്യം നോക്കിയാലും ഈ പ്രദേശങ്ങൾ വളരെ പിന്നോക്കമാണ്. വൈദ്യസഹായത്തിന്നുള്ള സൌകര്യങ്ങളൊ ആശുപത്രികളൊ ഒന്നുമില്ല. എത്രയോ പ്രൈമറി സ്കൂളുകളും മിഡിൽ സ്കൂളുകളും ഇനിയും അവിടെ സ്ഥാപിക്കേണ്ടതായിട്ടുണ്ട്. ഗതാഗതസൌകര്യങ്ങൾ വളരെ വളരെ മോശമാണ്. റോഡുകൾ വളരെ കുറച്ചേയുള്ളു. ഉള്ള റോഡുകൾ ഉപയോഗശൂന്യമായി കിടക്കു

[Sri K. Madhavan Nambiar] [17th March 1955

കയുമാണ്. ഉദാഹരണമായി എൻെറ നിയോജകമണ്ഡലത്തിൽ ഉരുവച്ചാൽ-കാരക്കണ്ടാട്ട് എന്നൊരു റോഡുണ്ട്. ഈ റോഡ് എത്രയോ കാലമായി ഉപയോഗശൂന്യമായി കിടക്കുകയാണ്. ഫർക്കാ ഡെവലപ്പ്മെൻറിൻേറയും ദേശീയവികസനപദ്ധതിയുടേയും ഇതുവരെയുള്ള പ്രവർത്തനംകൊണ്ട് ഒന്നുംതന്നെ വളരെ പ്രധാനമായ ഈ റോഡ് റിപ്പേർ ചെയ്യുന്നതിന് സാധിച്ചിട്ടില്ല. കമ്മ്യൂണിററി പ്രോജക്ട് ആരംഭിച്ചാൽ മാത്രമേ ഇത്തരം റോഡുകൾ ഇനി ഉപയോഗപ്രദമാക്കാൻ സാധിക്കുകയുള്ളൂ.

"മേല്പറഞ്ഞ ഫർക്കകളിൽ വിദ്യുച്ഛക്തി എത്തുന്ന കാലം ഊഹിക്കാനുംകൂടി വയ്യ. ചുരുക്കത്തിൽ സാമ്പത്തികമായും, സാമൂഹ്യമായും സാംസ്കാരികമായും വിദ്യാഭ്യാസപരമായും കാർഷികമായും, വ്യാവസായികമായും വളരെ പിന്നണിയിൽ കിടക്കുന്ന പ്രദേശങ്ങളാണ ഈ ഫർക്കകൾ. അതുകൊണ്ട് അടുത്ത കമ്മ്യൂണിററി പ്രോജക്ടുകളായി മാററുന്ന ഫർക്കകളിൽ മേല്പറഞ്ഞ ഫർക്കകളെക്കൂടി ഉൾപ്പെടുത്തേണമെന്നും അങ്ങിനെ പിന്നോക്കം നില്ക്കുന്ന ഈ പ്രദേശങ്ങളെ മുന്നണിയിലേക്ക് കൊണ്ടുവരേണമെന്നും ഒരിക്കൽകൂടി അഭ്യർത്ഥിച്ചുകൊണ്ട് എൻെറ പ്രസംഗം അവസാനിപ്പിക്കുന്നു."

10–55 a.m.

* **Sri A. S. SAHAJANANDA**:—"கனம் தலைவர் அவர்களே, சர்க்கார் கொண்டு வந்திருக்கும் அபிவிருத்தி திட்டங்கள் பொது ஜனங்களுக்கு ரொம்பவும் உபயோக கரமானது. சர்க்கார் செய்யவேண்டிய வேலைகள் எல்லாவற்றையும் சேர்த்து இப்போது சமீபத்தில் இப்படி திட்டங்களாக கொண்டு வந்திருப்பது கண்டு சந்தோஷப்படுகிறேன். நீண்டகாலமாக செய்ய வேண்டிய வேலைகள் இப்போது சமீபத்தில் துரித மாகமுன்னேற்றம் அடைகின்றன. சர்க்கார் இந்த தேசிய, சமுதாய, ஸ்தல அபிவிருத்தி திட்டங்களுக்காக ரூபாய் 2,68,84,400 ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தத் தகவலை அன்றைய தினம் கனம் நிதி மந்திரி அவர்கள் சொல்லிவிட்டு, ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ரூபாய் 10, அல்லது 15 கோடி வரையில் செலவு செய்ய சர்க்கார் முன்வந்துள்ளதாக தெரிவித்தார்கள். இந்த அபிவிருத்தி வேலைகளுக்கு மத்திய சர்க்கார் நிறைய கிராண்டு கொடுக்கிறார்கள். நமது ராஜ்ய சர்க்காரும் இதற்கு நிறைய கிராண்டு கொடுக்கிறார்கள். பொது ஜனங்களுடைய ஒத்துழைப்பினாலும் இந்த வேலைகள் நடை பெறுகின்றன. இவற்றில் மின்சார வசதி குடி தண்ணீர் வசதி, கல்வி, சுகாதாரம் வைத்திய உதவிகள் போன்ற, மக்களுக்கு இன்றியமையாத பல காரியங்கள் உள்ளன. ஆனால் நான் இந்த சமயத்தில் என்ன சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் என்றால், ஹரிஜன சமூகமானது மிகவும் பிற்பட்டு இருக்கிறது. ஆகையால் சர்க்கார் ஒவ்வொரு கிராமத்திற்கும் போய் இந்த மூன்று வகை திட்டங்களைக் கொண்டு, அபிவிருத்தி செய்ய முயற்சி எடுக்கும்போது முதலில் சேரிக்கு வேண்டிய வசதிகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சேரிகளுக்கு பல தேவைகள் இருக்கின்றன. அதாவது, பள்ளிக்கூடங்கள், மயானம், வழிபாதைகள் தேவைப்படுகின்றன. இந்தக் குறைகளை நிவர்த்தி செய்ய சர்க்கார் முதலில் முயற்சி எடுக்க வேண்டும். பிறகு தான் கிராமத்திற்கு வேண்டிய வசதிகளை செய்ய வேண்டும். கிராம மக்களுக்கு வசதிகள் செய்யக்கூடாது என்றுநான் சொல்லவில்லை. ஹரிஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்களை செய்துவிட்டு தான் கிராம மக்களுக்குச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"முக்கியமாக தென் ஆற்காடு ஜில்லாவில் 2,343 கிராமங்கள் இருக்கின்றன. இவைகளில் Labour School 176 இருக்கின்றன. இந்த திட்டங்களின் கீழே இந்த ஐந்தாண்டில், அதாவது 1946-லிருந்து 1950 வரைக்கும், 11 பள்ளிக்கூடங்கள் தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கிணறுகள் 35 தான் தோண்டியிருக்கிறார்கள். மனைக்கட்டுகள் 162 தான் வாங்கியிருக்கிறார்கள். இதை பார்க்கும் போது மிக பரிதாபகரமாக இருக்கிறது. இந்த சமயத்திலாவது ஹரிஜனங்களுக்கு அதிகப்படியான வசதிகளைச் செய்து கொடுக்கும்படியாக சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் நான் குறிப்பிட விரும்புவது, எந்த ஸ்தலத்திற்கு போனாலும், ஹரிஜனங்கள் விண்ணப்பம் செய்யவில்லை அல்லது கேட்டுக்கொள்ள வில்லை என்று சொல்லாமல், அங்கு நேரில் ஹரிஜனங்களுக்கு கிணறுகள் இருக்கின்றனவா, பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ச்சி

17th March 1955] [Sri A. S. Sahajanandam]

செய்து, அந்த சௌகரியங்களை செய்து கொடுப்பது சர்க்காருடைய கடமை யாகும். சர்க்கார்தான் அவர்களுக்கு **guardian** ஆக இருக்க வேண்டும். அவர்களுக்கு சர்க்காரை கேட்க போதிய உணர்ச்சி கிடையாது. மேலும் சர்க்கார் **Cummunity Project** வேலைகளுக்கு ஹரிஜனங் களிடமிருந்து பண உதவி எதிர்பார்க்க கூடாது. அவர்கள் பணம் கொடுக்க வசதியற்றவர்களாக இருக்கிறார்கள். ஏதோ தொழில் செய்து வயிறு பிழைக்கலாம் என்றுவந்தால், ஹரிஜனங்களுக்கு மிராசுதார்கள் தொந் திரவு கொடுக்கிறார்கள். ஆகையால் சர்க்கார் ஹரிஜனச் சேரிகளுக்கு செய் யும் காரியங்களை எல்லாம் இலவசமாக செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.''

*Sri S. **RADHAKRISHNAN** :—'' கனம் உதவி தலைவர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் பிர்க்கா டெவலப்மெண்ட் வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. மற்ற அங்கத்தினர்கள் சொல்லியதுபோல் அல்லாமல் என்னுடைய தொகுதி தனி சிறப்புள்ளது. பிர்க்கா டெவலப்மெண்ட் விஷயமாக அங்கு நடக்க வேண்டிய வேலைகளைப்பற்றி ஏற்கனவே சென்ற பட்ஜெட்டில் நான் பேசியபோது சொல்லியிருக்கிறேன். என்னுடைய பிர்க்காவில் குறைகள் தனிப்பட்ட முறையில் இருக்கின்றன. அதனால் அதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு மறுபடியும் கொண்டுவர விரும்புகிறேன். 11-01 a.m.

that I shall take into account the several important suggestions made by them. I would once again appeal to the hon. Members to give their fullest co-operation and help the people in taking full advantage of the facilities that are available to them under the various schemes. I do hope that the hon. Member who moved the cut motion will not press it.''

* **Sri G. GOVINDAN** :—" சபாநாயகர் அவர்களே, **on a point of order.** கனம் மந்திரியார் அவர்கள் பதில் சொல்லும்போது, எங்கள் பக்கத்திலுள்ள பிற்போக்கான பகுதிகளுக்கு சமுதாய அபிவிருத்தித் திட்டம், தேசீய விஸ்தரிப்பு திட்டம், இவைகளை இப்போது கொண்டுவர முடியாது, அவைகளை நிறைவேற்ற பணம் படைத்தவர்கள், செல்வாக் குள்ளவர்கள் முன் வந்தால் தான் கொடுக்கப்படும் என்று சொன்னார் கள். இது எப்படி இருக்கிறதென்றால், பசியாக இருக்கிற ஒருவனைப் பார்த்து, நீ நெல்விளைவித்து, அருவடை செய்து, அரிசியாக்கி சமைத்துச் சாப்பிடு என்று சொல்லுவது போலிருக்கிறது.''

Mr. SPEAKER :—" இது **point of order** ஆகாது."

* **The Hon Sri M. BHAKTAVATSALAM** :—" நான் கனம் அங் கத்தினருக்குச் சொல்லுகிறேன், கம்யூனிடி பிராஜக்ட், அவருடைய பகு திக்குக் கிடையாது என்று சொல்லவில்லை, பணக்காரர்கள், செல்வாக் குள்ளவர்கள் இருக்கு மிடங்களுக்குத் தான் அத்திட்டங்கள் விஸ்தரிக்கப் படுமென்றும் சொல்லவில்லை. உங்கள் ஊருக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லக்கூடாது. நேஷனல் எக்ஸ்டன்ஷன் **Scheme** வேறு கிராமங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். உங்கள் கிராமத்திலுள்ள லோக் கல் டெவலப்மெண்ட் **Scheme**-ல் நீங்சள் அக்கரை காட்டாமல் இருந் தால் என்ன செய்வது, எப்படி கம்யூனிடி பிராஜக்ட் **Scheme**-ஐ அங்கு விஸ்தரிப்பது என்று தான் சொன்னேன்."

* **Sri M. PALANIYANDI** :—" கனம் மந்திரி அவர்கள் பதில் சொல் லும் போது, இனி எல்லா இடங்களுக்கும் கம்யூனிடி பிராஜக்டை, ஆரம் பிக்க போவதாக உறுதி கூறி இருப்பதால், அதன் காரணமாக, நான் இந்த வெட்டுப் பிரேரேபணையை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறேன்."

The cut motion **was** by leave, withdrawn.

Mr. SPEAKER :—" I shall now put the original Demand to vote. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,68,84,400 under Demand XXXII—Community Development Projects.' "

The Demand was put and carried and the Grant was made.

(2) DEMAND XIV—POLICE.

The Hon. Sri C. SUBRAMANIAM :—" Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'*That the Government be granted a sum not exceeding Rs.* 5,24,63,500 *under Demand XIV—Police.*'

[17th March 1955

MR. SPEAKER :—" Motion moved—

' That the Government be granted a sum not exceeding Rs. 5,24,63,500 under Demand XIV—Police.'

" I must inform the House that the House will sit to-day till 2 p.m. The Hon. Minister will reply to the debate to-morrow."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I move—

' That the allotment of Rs. 5,24,63,500 under Demand XIV—Police be reduced by Rs. 100. ' "

MR. SPEAKER :—" Motion moved—

' That the allotment of Rs. 5,24,63,500 under Demand XIV—Police be reduced by Rs. 100."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Mr. Speaker, Sir, the Hon. Minister has moved the Demand. There is a slight increase in the amount that he has asked for under this head. In this State the strength of the Police officials has been increased slightly. In 1939–40, when the revenues of the State amounted to about Rs. 16 crores, about one-sixteenth of that sum was spent on Police. In 1946–47 about one-fourteenth of the total revenues was spent on Police. But now about one-nineth of the total revenues is spent on Police. Sir, I would not grudge this expenditure if it had helped to maintain law and order in the State and if it had helped to establish tranquillity in the State. I shall quote figures from the Report for the year 1953. Last year's report is not available. The report is published with G.O. No. 1378, dated the 15th October 1954. The information in the Report has to be restricted because it is stated that the Inspector-General of Police has been asked to see that under no circumstances the Report goes beyond 40 pages. So, it is a concise report. It is stated therein, ' The year 1953 registered a general increase in the total volume of crime.' So, in spite of the fact that the strength of the Police Force has been increased and the fact that large amounts have been allotted for and spent on Police, crimes are on the increase. Various reasons for this increase have been stated in this report. The Government have also approved those reasons. One factor is stated to be the prevalence of adverse economic conditions. Of course, commission of crimes has a bearing on the social and economic conditions prevailing in the country. It is also stated in the report that in Tanjore the agrarian situation has become calm due to the enactment of the Tanjore Tenants and Pannaiyal Protection Act. So, it is quite clear that unless and until we introduce agrarian reforms, unless the people are contented and unless we eradicate the poverty of the people, there will be such crimes. But increase to such an extent is regrettable. It has got to be looked into very seriously.

12-10 p.m. " Sir, if we analyse the figures for the last ten years from 1944 to 1953, we will see that in 1944 the total number of cognizable crimes was 43,877. But now it has increased

17th March 1955] [Sri T. C. Narayanan Nambiar]

to 72,880. In 1944 the number of murders was 762 but now it has increased to 971. The number of cases relating to rioting and unlawful assembly rose from 670 to 1,350. The number of dacoity cases rose from 159 to 239. Of course, the number of robbery cases has decreased from 512 to 503. The number of house-breaking cases has also increased from 5,720 to 12,724. So also the number of ordinary thefts has increased from 21,955 to 34,292. Like this I can quote a number of items where these cases are on the increase. Sir, I have been hoping that the police would detect these crimes and book the culprits but I am sorry to say that they have miserably failed. As I have already stated, the social and economic conditions of the people have a bearing on these crimes. But it has been stated that the increase in crimes is due to the efficiency of the police in detecting and registering cases. I do not agree with that view. Sir, apart from the cases registered by the police, so many thousands of cases would have gone unnoticed for want of detection by the police. So, this increase is due to unemployment of people, closure of so many factories, rise in the cost of living, fall in prices and the emigration of rural people to towns. All these factors have contributed to the increase in the number of crimes and the most important thing of all is that our police have failed to detect such cases. The old method, the old approach, the old mode of activities would not do nowadays. The Government and the police are viewing the 'legal' and legitimate struggles waged by labour and peasantry in a very reactionary manner. I do not understand why even in the year 1955 the struggles of workers and peasants are being considered as anti-social activities. Now that socialism has been declared to be the objective of this country and the Government, I hope in future the 'legal' struggles conducted by workers and tenants would not be treated as anti-social activities. Sir, it has been stated that the waging of struggles on the issue of bonus, pay, security of tenure and reduction of *waram* and rent is an anti-social activity. What does it show? It shows the view and the perspective of the Government. They want the police to be the watch-dogs of our State by following the ideology of the Government. The police treat those workers and peasants who wage 'legal' struggles as anti-social elements. This is not the way in which they should be treated. I hope the Government will not take up such an attitude in future.

" Now I come to answers given by the Hon. Minister in charge of Police on the floor of this House. Some of the answers given by him were unfortunate and regrettable. Recently the Hon. Minister answering a question said that there were two cases of suicide and four cases of murder every month in Malabar. Even this morning while answering a question put by the hon. Member, Sri Gopalakrishnan, the Hon. Minister said that in 1954 there were 24 cases of suicide in Malabar. So also in answering my question on the 16th February 1955, he had the 'generosity' to say that there were 28 cases of murder within seven months in Malabar. Sir, does it show that the people in Malabar are fond of suicides and murders? No, Sir, not in the least. Does it mean that the people of Malabar

[Sri T. C. Narayanan Nambiar] [17th March 1955

are a criminal class? No, Sir, not in the least. The very figures quoted by the Hon. Minister show that the crimes committed in that small land, in that part of the land, in that little land, in that beautiful land and in that peaceful land of Malabar are less as compared to Coimbatore or other districts. In the Coimbatore district, 4,660 crimes were committed but in Malabar only 2,806 crimes were committed. In the districts of South Kanara and the Nilgiris it may be even less.''

Mr. SPEAKER :—'' The hon. Member has got two more minutes.''

Sri T. C. NARAYANAN NAMBIAR :—'' So I would request the Hon. Minister to see that some effective steps are taken to put down these crimes. It has been stated that some preventive measures are being taken in that direction.

'' Sir, courtesy week is being observed by the police. It is no good police people observing the week themselves. Some responsible leaders like the Hon. Sri C. Subramaniam, the former Chief Minister, Sri Rajagopalachari, the Hon. Sri Kamraj Nadar, the Hon. the Speaker and . . .''

Mr. SPEAKER :—'' The hon. Member need not drag in my name.''

Sri T. C. NARAYANAN NAMBIAR :—'' I meant the Hon. Sri Sivashanmugham Pillai. So, responsible leaders in whom the people have trust and confidence, should address our constabulary and impress upon them the fact that they are part and parcel of the people. They should infuse patriotism in them so that they can detect a large number of cases. If that is not done, the mere observance of the courtesy week would not solve the problem.

'' Now I come to the Vigilance Committee. It has been stated that only men of integrity would be taken into that committee. In this connection, may I state humbly but at the same time seriously that some of the members of that Committee are drunkards and ex-convicts. Some of them are also of a criminal type who aid the police in receiving bribes. We do not want such people in the Vigilance Committee and I hope the Government will modify
12–20 p.m. their attitude in respect of this matter. I find that efforts are being made to expand the usefulness of the Forensic Science Laboratory in the C.I.D., Madras.

'' With regard to the suppression of immoral traffic, I have got facts and figures. There is no use of rounding up these unfortunate victims of society, if I may say so. They should be sent to the rescue homes. I would request that a Special Officer should be appointed to detect such cases.''

* Sri O. A. NANJAPPA :—'' கனம் சபாநாயகர் அவர்களே நான் இந்தப் போலீஸ் மானியத்தை ஆதரித்துப் பேசுவதற்கு முன்பாக, பத்திரிகை நிரூபர்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் முன்பு ஹரிஜன மானியத்தைப் பற்றி பேசும்போது, அதை எல்லாப்

17th March 1955] [Sri O. A. Nanjappa]

பத்திரிகைகளிலும் ஸ்ரீ ஓ. ஏ. நஞ்சய்யா (கோயம்புத்தூர்) பேசினர் என்று குறிப்பிட்டிருந்தது. ஆனல் என் பெயர் ஓ. ஏ. நஞ்சப்பா (சேலம்). என்று அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்."

MR. SPEAKER :—" நீங்கள் அவர்களுக்கு இப்படி நேரிடையாக சபையில் விஷயத்தைத் தெரிவிக்கக்கூடாது. எதையும் என் மூலமாகத் தான் தெரிவிக்க வேண்டும். நீங்கள் அவ்விஷயத்தை எனக்குத் தெரியப் படுத்தியிருந்தால் நான் அவர்களுக்கு இவ்விஷயத்தைத் தெரியப்படுத்தி யிருப்பேன்."

SRI O. A. NANJAPPA :—" கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் கோரியிருக்கிற போலீஸ் மானியத்தை நான் ஆதரிக்கின்றேன். அதோடு மிகச் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் இன்றைய தினம் போலீஸ்காரர்களாக பணியாற்றி வருகிருர்கள். குறிப்பாக ஹரிஜனங்கள் மிக அதிகமாக போலீஸ்காரர்களாக இருக்கிருர் கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகவும் குறைவானதாகும். அதோடு சேலம் ஜில்லாவிலுள்ள போலீஸ்காரர்கள் என்னிடம் வந்து பல குறைபாடுகளை தெரிவித்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்களுக்கு தற்போது ஒரு நாளைக்குப் 12 அணு தான் தினப்படி கொடுக்கிருர்கள். அது மிகவும் குறைவு. அவர்களுக்கு தினப்படி ரூபாய் 1-4-0 கொடுக்க வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

" அதோடு போலீஸ்காரர்கள், ஹெட் கான்ஸ்டேபிள்கள், சப்-இன்ஸ் பெக்டர்கள் வரை மிகவும் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பதவி வகிப்பதால் அவர்களுடைய பிள்ளைகளுக்கு பத்தாம் வகுப்பு வரையிலா வது இலவசக் கல்வி அளிக்க சர்க்கார் முன் வரவேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

" அதோடு போலீஸ் இலாகாவில் வேலை செய்து கொண்டிருக்கிற ஹரிஜன, தாழ்த்தப்பட்டவர்களுக்கு சரியாகப் பிரமோஷன் கொடுப்பதே யில்லை. சேலம் ஜில்லாவில் மாத்திரம் அனேக தாழ்த்தப்பட்ட இன சப்-இன்ஸ்பெக்டர்கள் பிரமோஷனே இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். ராஜ்யம் பூராவும் எவ்வளவு பேர்கள் இப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள் என்று எனக்குத் தெரியாது. பொதுவாக நல்ல யோக்கியதாம்சங்கள் உள்ள தாழ்த்தப்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு உடனடியாக பிரமோஷன் கொடுக்க தக்க ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" அதோடு அவர்களுக்கு இலவசமாக நல்ல உடைகள் அளிக்க வேண் டும். அதற்குப் பணமில்லையென்று சொல்லாமல் வேறு இனத்தில் அணு வசியமாகச் செலவு செய்யும் பணத்தைக் குறைத்து இந்த இனத்தில் அதிகப் படுத்தலாம். குறிப்பாக அவர்களுக்கு வருஷத்திற்கு இரண்டு பூட்ஸ் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த பூட்ஸின் விலையே 60 ரூபாய்க்கு மேல் ஆகிறதாம். அவ்வளவு விலை உயர்ந்த பூட்ஸ்களை எதற்காக அவர்களுக்கு சப்ளை செய்ய வேண்டும். பூட்ஸ்களுக்குப் பதிலாக பத்தும் பதினைந்து ரூபாயில் நல்ல சப்பல்ஸ் கொடுக்கலாம். இதனுல் லட்சக் கணக்கான ரூபாய்கள் மிச்சமாகும். அதோடு பிரிட்டிஷ் ஏகாதி பத்ய காலத்தில் அவர்களுக்கு சப்பல்ஸ் தான் வழங்கப்பட்டது. அந்தக் காலத்தில் அவர்கள் திறமையாக நடந்து கொண்டதைவிட இப்போது ஒன்றும் குறைவாக இவர்கள் நடந்து கொள்ளவில்லை. ஆகவே முன்பு வழங்கப் பட்டபடியே அவர்களுக்கு சப்பல்ஸ் வழங்க சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" சேலம் ஜில்லாவிலுள்ள போலீஸ்காரர்களில் பலர் என்னிடம் வந்து பல சமயங்களில் பலவிதமான புகார்களைச் சொல்லியிருக்கிருர்கள். இதை ஐ.ஜி.-யினுடைய கவனத்திற்கு எடுத்துப் போகக் கூடிய தைர்யம் எங்களுக்கு இல்லையென்று நினைப்பது தவறு. சர்க்காருடைய போலீஸ்

நிர்வாகத்தில் தலையிடுவது அவ்வளவு சிலாக்கியமானது அல்ல என்பதற் காகவே நான் கனம் மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு சிலவற்றை இப்பொழுது கொண்டுவர விரும்புகிறேன்.

" ஒரு போலீஸ்காரர் கார்டில் தூங்கி விட்டார் என்றால் உடனே அவருக்கு ஸிவியர் பனிஷ்மெண்டு கொடுக்கப்படுவதாகவும், வேலையை விட்டே நீக்கி விடுவதாகவும் அறிகிறேன். சேலம் ஜில்லாவில் மாத்திரம் வேலையை விட்டு நீக்கப்பட்டவர்கள் 40 பேர்களுக்கு மேல் இருக்கும் என அறி கிறேன். இது சரியல்ல. இம்மாதிரி குற்றம் செய்த போலீஸ்காரர்களின் பேரில் தக்க நடவடிக்கை எடுப்பதை நான் வேண்டாமென்று சொல்ல வில்லை. அதற்காக வேலையைவிட்டு நீக்குவது அவ்வளவு சரியல்ல. அம் மாதிரி வேலையை விட்டு நீக்கியவர்களையெல்லாம் கனம் காமராஜர் ஆட்சி காலத்திலேயே திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொண்டு விட்டால் அவர் களுடைய குடும்பத்தவர் நம் சர்க்காரை வாழ்த்துவார்கள் என்று சொல்லிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

12-27 p.m. * SRI P. VENKATESHA SHOLAGAR :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ராஜ்யத்தில் போலீஸ்காரர்கள் சட்டம், அமைதி ஒழுங்கைப் பாது காப்பதற்காகவே இருக்கிறார்கள் என்று உண்மையிலே சொன்னால், நடை முறையில் அவர்கள் சட்டம் அமைதி ஒழுங்கைப் பாதுகாப்பதற்கே பணியாற்ற வேண்டுமென்பதை சர்க்காருடைய ஞாப கத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

" இன்றைய தினம் அவர்கள் அப்படி நடந்து கொள்ளாதது தான் மிகவும் வருந்தவேண்டிய விஷயமாகும். சட்டம், அமைதி, ஒழுங்கு என் கின்றதன் பெயரில் அவர்கள் சாதாரண ஏழை எளிய மக்களை மிகவும் துன்பப்படுத்தி வருகிறார்கள்.

" குறிப்பாக மரியாதை வாரம் என்று அவர்கள் கொண்டாடுகிறார்கள். ஏகாதிபத்ய காலத்திலிருந்து போலீஸ்காரர்களுடைய மனப்பான்மை மாற வேண்டுமென்பதற்காகவே சர்க்காரால் இந்த மரியாதை வாரம் கொண் டாடப்பட வேண்டுமென்ற ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நோக்கம் சரி யாக இன்று நிறைவேற்றப்படவில்லை. ஆனால் ஓரளவு அவர்களுடைய மனப்பான்மையில் மாறுதல் இருக்கிறதென்பதை நான் ஒப்புக்கொள்ளு கிறேன். அதே சமயத்தில் பல இடங்களில் சகல முறைகளிலும் மாறுதல் ஏற்படவில்லையென்பது ஊன்றி கவனிக்கப்பட வேண்டும். குறிப்பாக இன் றைய தினம் பணக்காரர்கள், பெருந்தனக்காரர்கள், பெரு நிலச்சுவாந் தார்கள் ஆகியோர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றால் பெஞ்சியைக்காட்டி உட்காரச் சொல்லுகிறார்கள், அல்லது நாற்காலியைக் கொண்டு வந்து போட்டு உட்காரச் சொல்லுகிறார்கள். ஆனால் அதே சமயத்தில் ஏழை மக்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனால் அவர்களை நிற்க வைத்து மிகக் கேவலமாகப் பேசுவது, மிக உதாசீனமாக நடத்துவது ஆகியவை இன்றைக்கும் நடைபெற்றே வருகின்றது. இதை யாரும் மறுக்க முடி யாது. ஏழை மக்கள் இன்றைய தினம் போலீஸ் ஸ்டேஷன்களில் அடித்துத் துன்புறுத்தப்பட்டு வருவதை நாம் மறந்துவிட முடியாது.

" குறிப்பாக இந்த நாட்டு மக்கள் எல்லோரும் காந்திஜீயைப் போற்றி னார்கள் என்றால் அதற்கு முக்கியமான காரணம் காந்திஜீ என்ன சொன்னாரோ அதைக் காரியத்தில் நடை முறையில் அவரே செய்து காட்டி னார். அதைப் போலவே இன்றைய தினம் ஏழை எளிய மக்களின் பேரில் இந்த சர்க்கார் அனுதாபத்தைக் காட்டவேண்டுமென்று சொல்லிப் பிரயோஜனமில்லை. அமைதி, சட்டம், ஒழுங்கு என்பதன் பெயரால் ஏழை எளிய மக்கள் அடித்துத் துன்புறுத்தப்படாமல் பார்த்துக் கொள்வதும் மிக அவசியமாகும். மரியாதை வாரம் கொண்டாடுகிற காலங்களில் போலீஸ்காரர்கள், ஏழை எளிய மக்களிடமும் மரியாதையாக நடந்து கொள்ள தக்க ஏற்பாட்டைச் செய்து காண்பிக்க சில வழி வகை செய் வதும் அவசியமாகும். சட்டத்தையும், அமைதியையும், ஒழுங்கையும் பாது காக்கிறோம் என்று சொல்லும்போது சகல மக்களின் நன்மையையும்,

17th March 1955] [Sri P. Venkatesha Sholagar]

சகல மக்களுடைய உரிமைகளையும் பாதுகாக்க அதிகாரிகளின் நடவடிக்கைகள் தக்க உருப்படியான முறையில் பாரபக்ஷமின்றி நடைபெறுகிறதா என்பதை மந்திரிகள் நிதானமாய் கவனிக்கவேண்டும்.

"நேற்றையதினம் நான் வேள்க்குடியைப் பற்றி ஒரு கேள்வி கேட்டேன். அது சம்பந்தமாக ஏதோ கோர்ட்டில் வழக்கு இருப்பதாகப் பதில் கூறிவிட்டார்கள். அதைப் பற்றி நான் அதிகமாக இப்பொழுது கூறுவதற்க்கும் வழி இல்லை. வழக்கு நடப்பதற்கு முன்பு அங்கு நடந்த சில விஷயங்களைப் பற்றி நான் மட்டும் சில விபரங்களை சொல்ல விரும்புகிறேன். கடந்த ஒரு வருஷத்திற்கு முன்பாக தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டப்படி தங்களுக்குள்ள உரிமைகளை வாரம் குத்தகை கூலி வேண்டுமென்று கேட்ட விவசாயிகள் மீது அடக்குமுறை கையாளப்படுகிறது. மிராசுதார்களின் செய்கையையும் அடக்கு முறையையும் குறித்து **17** முறை அதிகாரிகளுக்கும் மந்திரிகளுக்கும் **34** பெட்டிஷன்கள் எழுதி அனுப்பப்பட்டும் இன்று வரை அந்த மிராசுதார் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்குப் பிறகு அங்கிருக்கும் விவசாயிகள்மீது மூன்று கேசுகளைப் போலீசார் போட்டார்கள் அந்த மூன்று கேசுகளும் தோர்த்து விட்டன. அதன் பிறகு கேசு போடுவது நிறுத்தப்பட்டு ரௌடிகளை விட்டு அடிக்கச் செய்தார்கள். **17** முறை போட்ட பெட்டிஷன்களுக்குப் பிறகு அங்கு நடந்ததை நான் கூறுகிறேன். 'மிராசுதார்கள் விவசாயிகளைத் தாக்கப் போகிறார்கள் என்று பயமாக இருக்கிறது, ரௌடிகள் வந்திருக்கிறார்கள்' என்று **16**-ந் தேதியன்று விவசாயிகள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். **17**-ந் தேதி காலையில் கலவரம். கலவரம் நடந்ததற்கு முன்னாடி போலீஸ் வந்திருக்கிறது. அங்குள்ள விவசாயிகள் என்ன நினைத்துக் கொண்டிருந்தார்களென்றால், தாங்கள் முதல் நாள் பெடிஷன் கொடுத்திருந்ததற்காக அதன் பேரில் போலீஸ்காரர்கள் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகத் தான் வந்திருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், நடந்தது என்ன ? பொழுது விடிந்ததும் விவசாயிகளைப் பார்த்து 'படவாக்களா, "கம்ப்ளெயின்ட்"களா கொடுத்திருக்கிறீர்கள் ?' என்று மிராசுதார்கள் கேட்டு, மிராசுதார்கள் வீட்டிலேயே போலீஸ்காரர்களை உட்கார வைத்து விட்டு, தடிக்கம்பை எடுத்துக்கொண்டு, பிஸ்டலையும் எடுத்துக்கொண்டு கிளம்பி விட்டார்கள். இந்த நிலைமையில் சமீப காலத்தில் மிராசுதார்களுக்கு இம்மாதிரி பிஸ்டல்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. காலி வேட்டு போட்டு, அடுத்துள்ள கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்த முருகையன் என்பவனைத் தாக்கியிருக்கிறார்கள். தாக்கப்பட்ட அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டுபோக அங்குள்ள மக்கள் பயப்பட்டார்கள். போலீஸ் ஆட்களே அவனை ஆஸ்பத்திரிக்கு தூக்கிக் கொண்டுபோய் சிகிச்சை அளித்திருக்கிறார்கள். கேசு போடப்பட்டிருக்கிறது. தன்னுடைய கடையில் வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தவன் பேரிலேயே கேசு போடப்பட்டிருக்கிறது. அத்துடன் **4** ஹரிஜனங்கள் அடிபட்டார்கள். கை முறிந்து மண்டை உடைந்து, ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆஸ்பத்திரியில் இருந்தார்கள் இருந்ததாகக் கணக்கும் இருக்க வேண்டும். மிராசுதாருடைய ஆட்கள் ஒரு ஆள் கூடஆஸ்பத்திரியில் தங்கி மருந்து போட்டுக் கொண்டது கிடையாது. ஆனால், பத்திரிகையில் பார்க்கும்போது, சட்டசபையில் கொடுக்கப்படும் பதிலைப் பார்க்கும்போது, "அவர்களும் இவர்களும் அடிபட்டார்கள், ஆனால், மிராசுதார்கள் பக்கம் அதிகப் பேர் அடிபட்டார்கள்" என்று மிகைப்படுத்தப்படுகிறது, இந்தமாதிரியான நிலைமையில் சர்க்கார் சட்டத்தை நிரைவேற்றப்படும் தன்மையைக்காணும் அங்கிருக்கின்ற ஏழை ஹரிஜனங்கள், யார் மூலம் தங்களுடைய நியாயத்தைப் பெறுவது என்று தெரியாமல் தவித்துக்கொண்டு இருக்கின்றார்கள். நாங்கள் பொறுப்புள்ள சட்டசபை மெம்பர்கள் இதில் நாங்கள் தலையிடலாமென எங்களிடம் வந்து மக்கள் அவர்கள் குறைகளைச் சொல்கிறார்கள். நாங்களும் அதிகாரிகளைப் பார்த்து பலமுறை சொல்லி உள்ளோம். நான் நேரில் மன்னார்குடி டிப்டி கலெக்டரிடம் போய்ச் பல முறை சொல்லியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வடமாதிமங்கலம் ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார் கரும்பு போடப்போகும் நிலத்தில் பயிர் செய்துகொண்டுவந்த விவசாயிகள் அந்த நிலத்திலிருந்து அப்புறப்படுத்துகிறார்கள். அதற்காக போலீஸ்காரர்கள் உதவி செய்

[Sri P. Venkatesha Sholagar] [17th March 1955

கிறார்கள். பண்ணை ஆட்களை கூப்பிட்டு 'வேலை வேண்டாமென்றும்' விவசாயியைக் கூப்பிட்டு, 'நிலம் வேண்டாமென்றும்' கையெழுத்துப் போட்டுக் கொடு, இல்லாவிட்டால் குளத்தில் மீன் பிடித்ததாகச் சொல்லி கேஸ் போட்டு விடுவேன் என்று போலீஸ் பெரிய அதிகாரிகளே விவசாயிகளை மிரட்டக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வடபாதிமங்கலத்தில் ஏற்பட்ட நிலைமையைப்பற்றியும் வேளக்குடியில் உள்ள நிலமைகளையும் கலெக்டரிடம் எடுத்துச் சொல்வதற்காக பாதிக்கப்பட்ட 5,000 ஜனங்களை நான் அழைத்துக் கொண்டு ஊர்வலமாக மன்னார்குடி கலெக்டர் ஆபீசுக்கு தாலூகா விவசாய சங்க மூலமாக சென்றோம். அப்பொழுது கலெக்டர் ஊரில் இல்லாததால், அங்கு ஒரு கூட்டத்தைக் கூட்டி நிலைமையை எடுத்துப் பேசிவிட்டு வந்துவிட்டோம். அதன் மூலமும் எந்தவிதப் பயனுமில்லை, சமீபத்தில் நடைபெற்ற வேளக்குடி கலவரம் சம்பந்தமாக நான் ஒரு அவசரக் கேள்வி கொடுத்திருந்தேன். 'வழக்கு நடக்கும்போது பதில் சொல்வதற்கில்லை" என்ற முறையில் பதில் கொடுக்கப்படுகிறதென்றால் சட்டசபைக்கு விஷயங்களை எப்படி கொண்டுவர முடியும். விவசாயிகள் அடிக்கப்பட்டதோ கஷ்டப்படுத்தப்பட்டதோ வெளிவரும் நிலைமையில் இல்லை. பத்திரிக்கைகளிலும் இந்த செய்தி வெளிவரவில்லை. அதே சமயம் மிராசுதார்கள் காலில் ஒரு நகம் பெயர்ந்து விட்டால் கூட அது பத்திரிக்கைகளிலும் சபையிலும் பிரமாதப்படுத்தப்படுகிறது. அதே சமயம், விவசாயி கழுத்து போனால் கூட பத்திரிகையில் வருகிறதில்லை. சட்டசபையில் கேள்வி கேட்டு, அதன் மூலமாவது விவசாயிகளின் கஷ்டங்கள் நெருக்கடிகள், தொல்லைகள் வெளிவருமென்று எதிர் பார்த்தால், அதுவும் கிடையாது. ஏமாற்றமடைவதாக இருக்கிறது. தூண்டிவிடும் நபர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நேற்றைய தினம் கூறிய சர்க்கார் கட்சியைச் சேர்ந்த மெம்பரை நான் மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்வது என்னவென்றால், எங்களைப் போன்ற பொறுப்புள்ள அங்கத்தினர்களிடம் நடந்த விஷயங்களைப்பற்றி கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். அப்படிச் செய்யாமல், கலவரம் நடந்ததற்கு ஹரிஜனங்களை தூண்டி விட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறுவது சம்பவம் என்ன என்பதையே கவனிக்காது "மற்றவர்களின் தூண்டுதலேதான் காரணமாக இருக்கவேண்டும்' என்ற முறையில் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று பொறுப்புள்ள ஹரிஜன் அங்கத்தினர் பேசுவது அழகல்ல. தவறுதல் இருந்தால் நேரிலே கேட்கலாம். 'இந்தமாதிரி சொல்கிறீர்களே, நடைமுறை வேராக உள்ளதே' என்று எங்களைக் கேட்டால் நான் அதற்குப் பணிந்து பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், ஏழை விவசாயிகள் தங்களுக்குக் கூலி உயர்த்திக் கொடுக்கப்படவேண்டுமென்று கேட்டால், அதற்காக குத்தகைக்காரர்களையும் கூலி வரக்காரர்களையும் யாரோ தூண்டி விடுகிறார்கள் என்று சொல்லி ஒரு சில அங்கத்தினர்கள் பிரச்னையைத் திரித்துக் கூறுவது சரியல்ல. சட்டம், அமைதி, ஒழுங்கு என்ற பேரால் விவசாயிகளை நசுக்குவது கூடாது. விவசாயிகளை நசுக்குவதற்கு சட்டம், அமைதி, ஒழுங்கு ஆகியவைகள் பயன்படுத்தப் படக்கூடாது. உண்மையிலேயே ஏழை மக்களுக்கு நியாயம் வழங்கும்படி சபையினரையும் மந்திரியையும் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்."

12-35 p.m. * SRI CHINNATHAMBI THEVAR :—" Mr. Speaker, Sir, I rise to speak a few words supporting the Demand. Formerly, in the year 1952-53, when the Police Demand was before this House to be voted upon, Opposition Members, mostly our Communist friends, were opposing it very vehemently. They had some justification for doing so, because during some years previous to that, they were having very hard times with the rank and file of the Police Department. The Communist members in this House were representing the various atrocities committed by the police during that time. They were also depicting that the policemen were a species of monsters and so they protested that any expenditure over them should not be admitted."

17th March 1955]

Sri T. C. NARAYANAN NAMBIAR :—" On a point of order, Sir. No hon. Member on this side has depicted that the police constables are monsters. It is not a fact so far as the speeches here are concerned."

Mr. SPEAKER :—" Anyhow, it is not unparliamentary. If it is unparliamentary, I can check the hon. Member."

Sri S. RAMALINGAM :—" The hon. Member Sri Chinnathambi Thevar is misrepresenting facts, Sir."

* The Hon. Sri C. SUBRAMANIAM :—" The hon. Member was referring to the speeches made in 1952–53, but Sri T. C. Narayanan Nambiar took objection on the ground that the reference was to the speeches made now. Sri Chinnathambi Thevar was referring to the period 1952–53."

* Sri CHINNATHAMBI THEVAR :—" Sir, after their entry into this House, which has the unique power to tame the wild and the recalcitrant and after their closer contact with our revered leader the then Chief Minister Rajaji, a marvellous change had come over the Communist comrades. The change is very perceptible in their attitude towards men and things. Nowadays, we see during question time in this House the Communist members drawing the attention of the Government to the sad and pitiable plight of the policemen, the necessity for providing housing amenities to them and the necessity for increasing their pay and daily batta. I am mentioning all these to show that even those who were against sanctioning any expenditure on the policemen are now convinced about the necessity for maintaining an efficient, impartial and well-equiped police force in the State. In our State except in a few places where political parties are at work, the entire State is now free from trouble and is given police protection. I congratulate the Hon. Minister concerned on the able way in which he is administering that Department.

" Under the present democratic set up, there is a vast change in the standard of the policemen. During the days of the British, the policeman instilled a sort of fear in the minds of the people. In a refractory crowd, if a policeman was present, it had the desired effect. But nowadays, the policeman is not taken serious notice of even by the weakest. To-day he is not able to discharge his duties properly because he fears that some big bosses will intervene and take him to task if he does his duties without fear or favour. So he is there in the crowd, not doing his duties. He is only a spectator in the crowd, witnessing what is happening there. A sort of indifference, a sort of complacency is now prevalent among members 12–40 p.m. of the constabulary of our State. If this is allowed to continue, I am sure, it will lead to inefficiency. Therefore, I want the Hon. Minister in charge of Police to take immediate steps to put an end to such kind of indifference and complacency on the part of the members of the constabulary. Among higher officers too, I must point out that they are not evincing the same interest in their work now which they were evincing some years ago. In the matter of

[Sri Chinnathambi Thevar] [17th March 1955

investigation of detection and of prosecution of cases, higher police officers are not evincing as much interest as they were doing previously. I have got some experience of Criminal Courts. I have found many criminal cases not successfully prosecuted in Courts. This is due to the fact that prosecutions are not conducted properly by the police. Previously whenever a criminal prosecution failed, the police officers concerned were taken to task by their superior officers. Now, Sir, whenever a prosecution launched by the police officers fails they easily shove the responsibility for the failure to the attitude of the Judicial Magistrate. I want the Hon. Minister in charge of Police to pay more attention to this matter so that proper investigation of cases may be done by the Police officials.

" In spite of the existence of the Anti-Corruption Department which, of course, is working well, corruption is prevalent in all the spheres. I should say, it is on the increase also. In this connection I wish to refer to the recruitment of members of Constabulary. At present all and sundry are recruited as constables so much so they do not realise the purpose for which they are appointed. Some sort of qualification should be prescribed for recruitment of constables. But there is also the question of salary paid to police constables. The police constables are poorly paid. I want that the Government should pay more attention to this matter of raising the pay of police constables. In providing houses to members of the Police Force, the Government are not paying serious attention. This has to be attended to immediately because if constables are not housed in proper buildings they will not be able to discharge their duties satisfactorily.

" There are complaints that Harijans are being harassed by other caste-Hindus. I want that a special Department should be created for the protection of Harijans. The Government should take steps to see that special staff is provided for this purpose so that in every Station there may be a head constable or a Sub-Inspector specially appointed to see that the interests of Harijans are protected. With these words, I support the Demand moved by the Hon. the Minister for Finance."

* Dr. K. B. MENON :—" Mr. Speaker Sir, I realise that it is very difficult to exercise restraint and control emotions in speaking on a subject like ' Police ' and I have seen some emotion already exhibited on the floor of this House. The Police in India have a long history which is not very glorious. They have a tradition which has not been very healthy. They have built up habits and ways of doing things which need to be mended. From my own experience, I feel that the Police have not forgotten anything that is old nor have they learnt much that is new. They should know that the world is moving fast, that India is a free democratic republic and that the function of the Police in a democracy is not punitive but preventive. If they only realise that, I feel there would be better and happier relationship between them and the public. The Government should know that better relations between the Police and the public are obtained not merely by the observance of ' Courtesy Weeks ' which have a certain artificiality about them. Of

17th March 1955] [Sri K. B. Menon]

course, the Police should be taught to be courteous to the people. It should be done not by observance of 'Courtesy Weeks' but through department correction and by tutoring them in classes privately. They need a good deal of training and if they come up anywhere near the standard of the British Policemen in the near future in their relationship with the public, I think we would have done something in the matter. In this connexion, very recently, I had an occasion to phone to the office of the Commissioner of Police for some information and when I asked an officer there for information on something which he did not like to give, he slammed the receiver. Subsequently I wrote a letter to the Commissioner of Police stating what had happened. I have not so far received any reply from the Commissioner. I do not know whether the Commissioner of Police has cared to enquire into the matter at all. If things are done, as I stated, they leave a very bad taste and lead to misunderstandings with the public. That is my opinion. In this connexion, I would also like to say that when representations are made to the Police by the Members of the House on any subject affecting public interest, the Police should inform us what action they have taken. If a serious crime occurs and if representations are made by Members of the House to the Police after enquiry, the latter should tell the former what they have done. That much of courtesy is due on the part of the Police to the Members of the House because this House itself is a wing of the Government as any other. The one department that properly and promptly attends to complaints is Railway. If we make complaints to the Railways, they always let us know what they have done in the matter. They always reply to complaints particularly when they are made by Members of the House.

"With regard to crime, I wish to point out that there has been an increase in crime. The hon. Member Sri T. C. Narayanan Nambiar said that in Malabar on the average there were two 'suicides' and four cases of 'murders'. As far as I know, Malabar is not a chronic crime area."

* The Hon. Sri C. SUBRAMANIAM :—"Now that this increase in crime is being stressed upon by every hon. Member I may inform the House that during 1954 there has been considerable fall in the number of crimes and as a matter of fact when compared to 1953 the fall is to the extent of 26 per cent."

* Dr. K. B. MENON :—"My submission is that I have been receiving representations about murders in areas like Feroke, Tirur, and some parts of North Malabar. It is a situation worth going into. This morning the Hon. the Minister stated in answer to a question that the number of suicides in the Nattika firka in the year 1954 was 24. I knew also of another area where a number of suicides had taken place. I made enquiries about that. I understand that those who committed suicide were mostly women. When I made further enquiries into this matter, I found out that there were important persons involved in these cases of suicide though the Police were treating these cases as 'suicide' only. It is the responsibility of the Police and the Minister in charge to go

deeper into that question and find out what the facts of the case and the causes of these suicides and see that they are corrected. If there is an increase in crime it is partly due to the lack of vigilance on the part of the Police and this is something wrong. It is the duty of the Police to see that crime does not increase. In the case of the murder that happened in Kodath village, it was the duty of the Police to have gone into the matter without loss of time, though the murder might have been due to a 'faction' fight or due to 'Party quarrels'. Since a life is lost, it is the duty of the Police to trace the culprits responsible for the murder. In cases of murder immediate action is necessary and delay would result in the intervention of other factors and make detection difficult. Police should be very prompt in the investigation of serious crimes like murder.''

12-51 p.m. *Sri V. S. SIVAPRAKASAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் போலீஸ் மானியத்தை நான் ஆதரிக்கிறேன். இந்தப் போலீஸ் இலாகா ஹரிஜன மக்களுக்காக எவ்வளவு தூரம் உதவியாக இருக்கிறதென்பதையும் சொல்ல ஆசைப்படுகிறேன். போலீஸ் இலாகாவைப்பற்றி பொது மக்களிடத்தில் வெகு காலமாக ஒரு எண்ணம் குடிகொண்டிருந்தது. அதாவது போலீஸ் என்றால் ஜனங்களை அடிக்கிற, துன்பப்படுத்துகிற ஒரு நிர்வாகம் என்ற அபிப்பிராயம் இருந்தது. அந்த அபிப்பிராயம் இப்பொழுது மாறியிருக்கிறது. அதுமட்டுமல்ல. சுயராஜ்யம் இந்த நாட்டுக்கு வந்ததற்குப் பின்னால் போலீஸ் டெபுடி சூபிரெண்டெண்டு வரையுள்ள போலீஸ் அதிகாரிகளுடைய மனோபாவம் மக்களுக்குச் சேவை செய்யவேண்டுமென்ற முறையில் மாறியிருக்கிறது. மக்களுக்குச் சாதகமான முறையிலும் தேசத்திற்குச் சாதகமான முறையிலும் சேவை செய்ய வேண்டுமென்ற மனப்பான்மை போலீஸ் அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. போலீஸ் டெபுடி சூபெரின்டெண்டுக்குக் கீழ்ப்பட்ட சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், ஹெட் கான்ஸ்டேபிள்கள், கான்ஸ்டேபிள்கள் ஆகியவர்களிலும் நல்லவர்கள் இல்லை என்று நான் சொல்லவில்லை. இருந்தாலும் அவர்களால் மக்களுக்கு ஏதாவது துன்பம் ஏற்படுமானால், அதையும் சர்க்கார் மாற்றுவதற்கு முயற்சி செய்யவேண்டும். சிறிய போலீஸ் அதிகாரிகள் மக்களிடம் ஏதாவது தவறுதலாக நடந்துகொண்டிருக்கக்கூடும். ஆனால், பெரும்பான்மையான போலீஸ் அதிகாரிகளுடைய மனோபாவம் மக்களுக்குச் சாதகமான முறையில் மாறியிருக்கிறது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மக்களைத் துன்பப்படுத்துகிற ஒரு இலாகா என்ற நிலை மாறி மக்களுக்குச் சேவை செய்கிற இலாகா போலீஸ் இலாகா என்ற அபிப்பிராயம் மக்களிடையே ஏற்பட்டு வருகிறது என்பது மிக முக்கியமான விஷயமாகும்.

" போலீஸ்காரர்கள் மக்களை அடிககிறதில்லையா என்று கேட்கலாம். இவ்வளவு காலம் நடந்ததுபோல் இப்பொழுது இல்லை. மக்களைப் போலீஸ்காரர்கள் அடிக்கிறார்களென்றால், அப்படி அடிபடுகின்ற மக்கள் யார் என்று பார்க்கும்போது அவர்கள் அநேகமாக ஹரிஜனங்களாகவே இருப்பார்கள். ஹரிஜனங்களை போலீஸ்காரர்கள் அடிக்கிறார்கள் என்று சொல்லும்போது ஹரிஜனங்கள் யாதொரு குற்றமும் செய்யாமலிருக்கும் போது போலீஸ்காரர்கள் அவர்களை அடிக்கிறார்கள் என்று சொல்லவில்லை. ஹரிஜன மக்களை குற்றங்கள் செய்யும்படியாக ஆங்காங்கே யாரோ சிலர் நிச்சயமாகத் தூண்டியிருக்கலாம். 100-க்குத் 90 கேஸ்களில் ஹரிஜனங்கள் கிரிமினல் கேசுகளிலும், சட்ட விரோதமான கேசுகளிலும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அதனால், போலீசாரிடம் அடிபட்டார்கள் என்று சொன்னால் அதற்குக் காரணம் பிறர் தூண்டுதல்தான். ஸ்ரீ வெங்கடேச சோளகர் நான் கேட்ட கேள்வியைப்பற்றி குறிப்பாக இப்பொழுது சொன்னார். இன்றைக்கும் சொல்லுகிறேன் ஹரிஜனங்கள் நிச்சயமாக ஒரு பாவத்தையும் அறியாதவர்கள் ; கடவுளுக்குப் பொதுவாக நடந்து

17th March 1955] [Sri V. S. Sivaprakasam]

கொள்ளக்கூடியவர்கள் ; நியாயமாக நடந்துகொள்ளுகிறவர்கள் ; ஹரிஜன மக்கள் சட்ட விரோதமான காரியங்களில் ஈடுபடுவதற்கு விரும்ப மாட்டார்கள்; சுயமாக அவர்கள் நியாயத்திற்குப் புறம்பான காரியங்களைச் செய்தறியாதவர்கள். ஆனால், அப்படிப் பட்டவர்கள் கிரிமினல் குற்றங் களைச் செய்து, அதனால் போலீசாரால் அடிக்கப்படுகிறார்கள் என்றால், அந்தக் குற்றத்தை அவர்கள் தாங்களாகவே செய்திருக்கவே மாட்டார்கள். ஹரிஜன மக்கள் சட்டத்திற்கு விரோதமாகப் போகக்கூடியவர்களே அல்ல. தெய்வ பக்தி உடையவர்கள் ஹரிஜன மக்கள். பிச்சை எடுக்க வேண்டு மென்ற எண்ணம்கூட அவர்களுக்குக் கிடையாது. ஏமாற்றுவதையும் அவர்கள் அறியாதவர்கள். ஆனால், அவர்களுக்கு உண்மையாக உழைக் கத்தான் தெரியும். உழைத்துப் பிழைக்க வேண்டுமென்ற உயர்ந்த குணத்தைப் பெற்றிருப்பவர்கள் ஹரிஜனப் பெருமக்கள். ஆகவேதான் மகாத்மா காந்தியடிகள் அவர்களுக்கு ' ஹரிஜனங்கள் ' என்ற பெயரை அன்புடன் வைத்திருக்கிறார். அப்படிப்பட்ட மக்கள் இன்றைக்கு பல கேசு களில் ஈடுபடுத்தப்பட்டு, அடிப்பட்டு கஷ்டப்படுகிறார்கள் என்றால் யாரோ ஒருவர் அவர்களை அம்மாதிரி அவர்களுடைய அறியாமையை **advantage**-ஆக எடுத்துக்கொண்டு, தூண்டிவிட்டு, சட்ட விரோதமான கேசுகளில் அவர் களைச் சம்பந்தப்படுத்தியிருக்க வேண்டுமென்றுதான் நான் சொல்ல முடியும். ஹரிஜனங்கள் தாங்களாகவே ஒரு குற்றமும் செய்திருக்க மாட் டார்கள், தாங்களாகவே ஒரு குற்றத்தைச் செய்வதற்கு அவர்களால் முடியாது என்று இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். மற்றவர்கள்தான் அவர்களை சட்ட விரோதமான காரியங்களில் ஈடுபடுத்தி யிருக்கவேண்டும்.

" அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கும், ஜாதி இந்துக்களுக்குமிடையே அடிக்கடி சண்டைகள் வருவது எனக்கு தெரியாமலில்லை. நானும் ஒரு ஹரிஜனன். ஹரிஜன மக்களை எவ்வளவு தூரம் முன்னேற்றத்திற்கு கொண்டுவரவேண்டும் என்பது எனக்குத் தெரியும். சாதாரணமாக, ஒருவர் ஹரிஜனனாக பிறந்தாலொழிய ஹரிஜனங்களுடைய மனதை சரியாக புரிந்துகொள்ள முடியாது. ஹரிஜனங்களுக்கும் ஜாதி இந்துக் களுக்குமிடையே இருக்கிற வித்தியாசத்தை அதிகப்படுத்தி, **Social Disabilities Act**-ன் கீழ் அனேக கேஸ்கள் வருவது எனக்குத் தெரி யும். எங்கள் ஜில்லாவில் அந்தமாதிரி கேஸ்கள் எல்லாம் நடக்காமல் இருப்பது மேல் என்று விரும்பி, நான் பல காரியங்கள் செய்து இருக்கி றேன். ஏனென்றால் தீண்டாமை விலக்குச் சட்டம் **Social Disabilities Act** இந்த சட்டங்களின்கீழ் கேஸ்கள் கோர்ட்டுக்கு போகுமே ஆனால், அந்த கேஸ்கள் ஹரிஜனங்களுக்கு சாதகமாக முடிந்தாலும்சரி, பாதகமாக முடிந்தாலும்சரி, இரண்டு விதத்திலும் ஹரிஜன மக்களுக்கு கஷ்ட நஷ்டம் தான் ஏற்படும். இந்த விஷயத்தில் நான் போலீஸ் இலாகாவுக்கு சொல் லிக்கொள்ள ஆசைப்படுவது என்னவென்றால் இந்த மாதிரி **Social Disabilities Act**-ன் கீழ் கேஸ்களை கோர்ட்டுக்கு கொண்டுபோவதற்கு முன்னால், ஹரிஜனங்களுக்கு என்றே ஒரு டிபார்ட்மெண்டு ஏற்படுத்தப்பட் டிருக்கிறதே, அந்த டிபார்ட்மெண்டின் **Director** இடத்தில் யோசனை கேட்டுக்கொண்டு அதற்கு பின்னால்தான் கேஸ்கள் போடவேண்டும். இது தான் எனது விருப்பம். அந்த மாதிரியாக செய்யவேண்டுமென்று சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 12-55 p.m.

" உண்மையாகவே ஹரிஜனங்களை ஜாதி இந்து ஹோட்டலுக்குள் போவதை தடுத்திருக்கலாம். அப்படி செய்தது குற்றமாகவும் இருக்கலாம். ஆனால் அதற்காக ஒரு கேஸை கோர்ட்டுக்குக் கொண்டுபோய், ஜெயித்தாலும் கூட அடுத்த நாளே ஹரிஜனங்களுக்கு **Social boycott** போன்ற பல கஷ்டங் கள் ஏற்படுகின்றன. ஆகையால் இந்த விதமான கேசுகளை கோர்ட்டுக்கு கொண்டுபோவதற்கு முன்னால், இந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கு மிடையே சமரசம் செய்து வைப்பதில் போலீஸ் உதவியாக இருக்கலாம். தவிரவும் போலீஸ்காரர்கள் கேசுகளை போடுவதற்கு முன்னால், பின்னால் ஏற்படக்கூடிய **repercussions** என்னென்ன கேட்டை விளைவிக்கும் என் பதை யோசிக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அடுத்தபடியாக இந்த போலீஸ் இலாகாவானது ஜாதி மத வித்தியாசங்களைப் போக்குவதற்கு ஹரிஜனங்களுக்கு நல்ல உதவி செய்யலாம். இதுவரை அந்த இலாகா அவ்வளவு சரியானபடி உதவி செய்யவில்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் அந்த மாதிரியான உதவி செய்வதில் சில இடுக்கண்கள் ஏற்படும். **Harijan problem** என்பது **communism**, **socialism** மாதிரி, சுலபமாக பேசிவிட முடியாது. ஏனென்றால் அதில் சகல விதமான இடுக்கண்கள் பிணைந்து இருக்கின்றன. காலில் குத்திய முள்ளை எவ்வளவு ஜாக்கிரதையாக எடுக்கிறோமோ அவ்வளவு ஜாக்கிரதையாக ஹரிஜன பிரச்னையை கவனிக்கவேண்டும். சாதாரணமாக, கோஷங்களை எழுப்புவதுபோல், ஹரிஜனங்களே எழுந்து வாருங்கள், பாருங்கள் என்று சொல்வதால் ஹரிஜனங்களுக்கு பல சமயங்களில் ஆபத்துதான் ஏற்படுமே தவிர நன்மையொன்றும் ஏற்படாது. ஹரிஜனங்களுக்காக பாடுபடுவதாக சொல்லிக்கொள்ளும் தலைவர்கள், அவர்கள் அடிபடும்போது தாங்களும் பின் நின்று அவர்களுடன் அடி வாங்கி, கடைசி வரையில் ஹரிஜனங்களுக்கு உதவி செய்பவர்களாக இருக்கவேண்டும்.

" அடுத்தபடியாக ஹரிஜனங்களுக்கு உண்மையாகவே நல்ல உதவி செய்யவேண்டுமென்றால், அந்த மக்களுக்குத்தான் போலீஸ் இலாகாவில் அதிக பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும். இன்றைக்கும் நல்ல திறமையான ஹரிஜன அதிகாரிகள் போலீஸ் இலாகாவில் இருக்கிறார்கள். ஹரிஜனங்கள் பொதுவாக எந்த உத்தியோகத்தில் இருந்தாலும்சரி, தப்பான வழிகளில் செல்லமாட்டார்கள். அவர்கள் பிறரை ஏமாற்றி பிழைப்பது கிடையாது. ஹரிஜனங்கள் நியாயமான முறையில் பிழைக்கவேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றவர்கள். இன்றைக்கும் போலீஸ் இலாகாவில் **Circle Inspector**-களாக உள்ள ஹரிஜன அதிகாரிகள் நல்ல பெயர் வாங்கி இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கெல்லாம் சீக்கிரமாய் **promotion** கொடுத்து **Deputy Superintendent**களாக்குவதற்கு சர்க்கார் முன்வர வேண்டும். அதுமட்டுமல்ல இனிமேல் **Future recruitment**-ல் எல்லாம் ஹரிஜனங்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் கொடுத்து, ஹரிஜனங்கள் நாட்டுக்கு நல்ல சேவை செய்ய சந்தர்ப்பம் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

1–0 p.m.

SRI K. P. GOPALAN :—" Mr. Speaker, Sir, I support the cut motion. The British people kept the Police in our country in order to make our country a slave country. And the whole intention of the British Government in keeping the Police Force was to see that our freedom movement was crushed. At that time the Police Officers were bossing over the people and that was their attitude at that time. But even now in our free Country, the outlook of the Police Department, I feel, has not entirely changed. Sir, I hear that among the rank and file of the Police, the small officers and constables, their entire outlook has not changed—of course, with some it may not be entirely so. But their attitude to boss over the people, especially by the officers has not changed. That is what my experience is and I submit that before the House. The police officers must think that they are servants of the people; they should have that spirit. At the same time, the people must have the spirit that it is their duty to co-operate with the police in order to get justice done by them to the people. But my experience is that there is a gulf betwen the people and the police and that gulf should not be there.

" While maintaining law and order, in dealing with processions and public meetings, if the police think that that is an unlawful assembly, they should first persuade and appeal to the people to abide by law and thus law and order should be maintained. But

what they do now is they straightaway resort to lathi charge and disperse the people. That means the whole method of maintaining law and order is entirely wrong.

